Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU




முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஐப்பசி 08 வெள்ளிக்கிழமை (25.10.2013) பக்கங்கள் 20 ஓசை – 025

09

சிறப்பாட்டம்

17

தண்டம்

18

முடிவுக்கு வருமா?

# சிறுகைத்தொழில் அபிவிருத்தி இந்திய உறவால் முன்னேற்றம்

## இந்தியத் தூதுவர் பெருமிதம்

(கொழும்பு)

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையிலான உறவை நல்ல முறையில் பேணி வருகின்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி இலங்கையில் சிறுகைத்தொழில்துறையை முன்னேற்றி வருகின்றார் என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே.சிங் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் முற்பகல் அம்பாந்தோட்டை மாவட்டத்திலுள்ள காவன்திஸ்ஸபுர பகுதியில் தேசிய அருங்கலைகள் பேரவையின் கைப் பணிப் பொருட்கள் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் கிராமத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது, இந்திய அரசாங்கம் இலங்கைக்காக மேற்கொண்டு வரும் உதவித் திட்டங்கள் குறித்து விபரித்துக் கூறிய இந்தியத் தூதுவர், றுஹுனு பல்கலைக்கழகத்திற்கென ரவீந்திரநாத்தாகூர் ஞாபகார்த்த மண்டபம் அமைப்பதற்கு 300 மில்லியன் ரூபாவை இந்திய அரசு வழங்கியுள்ளதாகவும் மேலும் தென்பகுதியில் இருபது அறிவகங்களை அமைப்பதற்கு உதவியுள்ளதாகவும் தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பாரம்பரிய கைத்தொழில்கள 19 ஆம் பக்கம் பார்க்க



# காணி, பொலிஸ் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தியே தீருவோம்

## முதலமைச்சர் அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் படி மாகாண சபைகளுக்கு தற்போது வழங்கப்பட்டிருக்கும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் உட்பட அனைத்து அதிகாரங்களையும் நடைமுறைப்படுத்தியே தீருவோம் என்று வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். ரில்கோ ஹோட்டலில் நேற்று நடைபெற்ற வடமாகாண சபை உறுப்பினர்களிற்கான செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எமது மாகாண சபைகளுக்கு மத்திய அரசாங்கம் அனுசரணையாக இயங்க வேண்டுமே தவிர மத்திய அரசாங்கத்திற்கு தோள்கொடுக்க மாகாண சபைகள் முன்வரவேண்டும் என்று எதிர்பார்ப்பது அதிகாரப் பரவலின் தாற்ப்பரியத்தினை மத்திய அரசாங்கம் அறிய முற்படவில்லை என்ற கருத்தையே வெளிப்படுத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசாங்கம், மாகாண சபைகள், பிரதேச சபைகள் ஆகியன மக்களின் நலன்பேண உருவாக்கப்பட்டதுடன், மக்களின் ஆணையை நிறைவேற்றுவதே இவற்றின் கடமையாகும்.

1987ஆம் ஆண்டு இலங்கை - இந்திய உடன்படிக்கையின் போது தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக 19 ஆம் பக்கம் பார்க்க

## கன்னி அமர்வு இன்று

(யாழ்ப்பாணம்)

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வடக்கு மாகாண சபையின் முதலாவது அமர்வு இன்று கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபையின் தலைமைப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இன்று காலை சுபவேளையில் வடக்கு மாகாண சபை தலைமைப் பணிமனை திறப்பு விழா நிகழ்வைத் தொடர்ந்து இந்தக் கன்னியமர்வு நடைபெற விருப்பதாக வடக்கு 19 ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச விசாரணைக்கு அரசு உடன்படாது

### ஜீ.எல். திட்டவட்டம்

(லண்டன்)

வடக்கில் யுத்த காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமைகள் மீறல் சம்பவங்களுக்காக எந்த ஒரு சர்வதேச ரீதியான விசாரணைப் பொறிமுறையையும் அரசு ஒரு போதும் ஏற்றுக்கொள்ளாது என்று வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பி.பி.சி.யின் உலக சேவைக்கு வழங்கிய விசேட செவ்வி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை தொடர்பில் சுமத்தப்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஏற்கனவே உள்ளக விசாரணைகள் நடத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே சர்வதேச விசாரணைக்காக யாரும் நியாயம் கூறமுடியாது என்றும் பீரிஸ் தெரிவித்துள்ளார.

# பொலிஸ் அதிகாரம் கோத்தாவின் கையில்

## சுரேஷ் எம்.பி.சாடல்



பொலிஸ் அதிகாரத்தை பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தனது கையில் வைத்துக்கொண்டு வட மாகாணத்தில் சட்டம், ஒழுங்கை பாதுகாக்கும் கடமை முதலமைச்சர் விக்னேஸ்வரனின் பொறுப்பாகும் எனக்கூறுவது நகைப்பிற்குரிய விடயமாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

வடக்கில் சட்டம், ஒழுங்கை முதலமைச்சர்தான் நிலைநாட்ட வேண்டும். அதற்கான பொறுப்பு முதலமைச்சருக்குத் தான் உண்டு எனப் பாதுகாப்பு செயலாளர் கருத்து தெரிவித்துள்ள நிலையிலே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். 19 ஆம் பக்கம் பார்க்க

# இன நல்லிணக்கத்தை உருவாக்குவது எப்படி

## கொழும்பில் இன்று செயலமர்வு

(கொழும்பு)

யுத்தத்துக்குப் பின்னர் நாட்டில் நல்லிணக்கத்தை உருவாக்குவது எப்படி என்ற தொனிப் பொருளில் தென்னாபிரிக்காவின் மூத்த இராஜதந்திரிகள் பங்குபற்றும் விசேட செயலமர்வு ஒன்று இன்று கொழும்பில் இடம் பெறவுள்ளது.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தலைமையில் லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத்தில் இன்று காலை 10.00 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் நடைபெறும்.

இந்த தொடர் அமர்வில் தென்னாபிரிக்காவின் அனுபவங்கள் இலங்கை அதிகாரிகளுடன் பகிரப்பட்டவிருப்பதாகவும் தெரிகிறது.

# வடக்கின் இன்றைய நிலைமை; ஐ.நா.சபைக்கு விளக்கம்

யுத்தத்துக்குப் பிந்திய நிலையில் வடக்கு மக்களின் மீள்குடியமர்வு தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபைக்கு விரிவான விளக்கமளிக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி விளக்கமளிப்பதற்காக ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் இலங்கை பணியகத்தின் புதிய பிரதிநிதி குலோமி அப்பாஸ், பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவைச் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு பாதுகாப்பு அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்றதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சந்திப்பில் இடம்பெயர்ந்தவர்களின் மீள்குடியேற்றம், வெளிநாடுகளில் உள்ள இலங்கை அகதிகள் தொடர்பான விடயங்கள், பாதுகாப்பு உட்பட பல விடயங்கள் பற்றி பேசப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் புதிய 132 KVA மின்நிலையத்தின் மின்பரிமாற்றல் வலையமைப்பில் இணைப்புக்களை சீர்செய்வதற்காகவும், புதிய இணைப்புகளை மின்வழங்கல் கட்டமைப்புடன் இணைக்கும் வேலைகளுக்காவும் நாளை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை கந்தரோடை, மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய், அளவெட்டி ஒரு பகுதி, கட்டுடை ஒரு பகுதி, சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பழை, மாவிட்டபுரம், அளவெட்டி, பன்னாலை, வித்தகபுரம், நகுலேஸ்வரம், கீரிமலை, கொல்லன் கலட்டி, சுன்னாகம், மருதனார் மடம் ஒரு பகுதி, உடுவில் ஒரு பகுதி, இணுவில், கோண்டாவில், உரும்பிராய், பலாலி வீதி, மருத்துவபீடப் பிரதேசம், கொக்குவில், ஆடியபாதம் வீதி, நாச்சிமார்கோவிலடி, பூநாரிமரத்தடி, கோம்பையன்மணல் பிரதேசம், உரும்பிராய், மருத்துவபீடப் பிரதேசம் ஆகிய இடங்களிலும்

நாளை மறுதினம் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை சுன்னாகம், மருதனார்மடம், உடுவில் ஒரு பகுதி, இணுவில், கோண்டாவில், உரும்பிராய், பலாலி வீதி, மருத்துவபீடப் பிரதேசம், கொக்குவில், ஆடியபாதம் வீதி, ஆகிய இடங்களிலும்

மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேச மின் பொறியிலாளர் அறிவித்துள்ளார்.

## உளவியல் கண்காட்சி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மெய்யியல், உளவியல் துறையினால் உலக உளநல நாள் தொடர் நிகழ்ச்சியாக இடம்பெறும் உளவியல் கண்காட்சி நீடிக்கப்பட்டுள்ளது.

பலரது வேண்டுகோளுக்கு இணங்கி இக்கண்காட்சி இன்றும் நடைபெறும் என் யாழ். பல்கலைக்கழக மெய்யியல் துறைத்தலைவர் கலாநிதி கஜவிந்தன் தெரிவித்தார்.

# பாடசாலை இடைவிலகல்; அறுபது வீதத்தினர் பெண்கள்

## சிரேஷ்ட விரிவுரையாளர் ஜெயலக்ஷ்மி

(மண்டைதீவு)

பாடசாலை இடைவிலகலில் அறுபது வீதத்தினர் பெண்களாக உள்ளபோதிலும், பெண்களின் பரீட்சை பெறுபேறுகள் சிறப்பாக இருப்பது குறிப்பிடத்தக்கது. எனினும் பெண் விடுதலைக்கான சம வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை என சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜெயலக்ஷ்மி இராஜநாயகம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட அறிவியல் சிந்தனை வட்டத்தினரின் பூரணை தின ஆன்மிக சங்கம் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வேதகாலத்தில் இருந்து சமூக ஒழுங்கு முறையில் பெண்கள் சமத்துவமான முறையில் உரிமையுடையவர்களாக இருந்திருக்கவில்லை. ஆண் ஆதிக்க சமுதாயமாகவே சிந்துவெளி வேதகாலம் இருந்தது. பெண்கள் வேதங்களை ஓதுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. அது அவர்களின் கல்வி பயிலும் திறமையை மறுப்பதாகவே இருந்தது.

தற்போது பல்கலைக்கழகத்தில் உயர் கல்வித்துறையில் கல்வி டிப்ளோமா மற்றும் உயர் கல்வி பட்டத்துறை ஆகிய துறைகளில் பெண்களே பெருமளவில் அனுமதிக்கப்படுகிறார்கள். வேத காலத்தில் இருந்து இன்றுவரை பெண்கள் தம்மை ஒரு அழகுப் பொருளாகவும், அழகியல் பொம்மைகளாகவும் தம்மை அலங்கரித்து வருகின்றனர்.

அவர்களது வாழ்க்கை வட்டத்திலும் சமூக அந்தஸ்திலும் பெரிய மாற்றம் ஏற்பட்டுவிட்டதென கூறமாட்டேன். இது ஒரு ஆண் ஆதிக்க சமூகமாகும். இதில் இருந்து பெண்கள் முற்றாக வெளியேறி சுதந்திரமாக இல்லை என்பதே எனது கருத்தாகும்.

சமயம், அரசியல், சமூகம், சமூக சேவை என பெண் சமூக அந்தஸ்திலும் பங்களிப்பைச் செய்து வருகின்ற போதும் எங்களது சமூகத்தில் ஆணாதிக்கம் மேலோங்கியுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகத்தில் கடந்த வருடத்திற்கு முதல் வருடம் 100 பேரை பரீட்சை மூலம் தெரிந்தெடுத்தபொழுது 75 வீதமானவர்கள் பெண்களாக இருந்தது. கடந்த வருடம் எண்ணிக்கை 80 வீதமாக இருந்தது. ஆனால் இந்த வருடம் 50 இற்கு 50 வீதமாக இருப்பது ஒரு மாற்றமாக காணப்படுகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (23)

## தொழில் வாய்ப்பை ஏற்படுத்த வெதுப்பகம் திறப்பு

(முல்லைத்தீவு)

மாற்றுத்திறனாளிகள் மற்றும் போரினால் பாதிப்புற்ற பெண்களுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்துடன் புதுக்குடியிருப்பில் திருக்கேதீச்சரம் சிவனருள் இல்லத்தின் ஆதரவில் அமைக்கப்பட்ட புதுக்குடியிருப்பு வெதுப்பகம் இன்று முற்பகல் 8 மணிக்கு திறந்துவைக்கப்படுகிறது.

அரசாங்க அதிபர் நாகலிங்கன் வேதநாயகம் இந்த வெதுப்பகத்தினை திறந்து வைக்கவுள்ளார்.



பருத்தித்துறையில் அமரர் ஆர்.துரைராஜசிங்கம் ஞாபகர்த்தமாக நிர்மாணிக்கப்பட்ட ஞானாலயம் திறப்புவிழாவிலே ஆசியுரை வழங்கிய மதத்தலைவர்கள் அமர்ந்திருப்பதனையும், கல்வியியற்றுறை விரிவுரையாளர் விவேகானந்தன் உரையாற்றுவதையும் காணலாம். (01)

## மருத்துவமுகாம்

(காரைநகர்)

காரைநகர் பிரதேச பாடசாலைகளுக்கான மருத்துவமுகாம் இன்று காலை யாழ். யாழ்ரன் கல்லூரியில் சிறந்த அனுபவம் வாய்ந்த வைத்தியர்களினால் நடத்தப்படவுள்ளது.

இதில் காரைநகர் பிரதேச பாடசாலைகள் கலந்துகொள்வதுடன், அப்பாடசாலைகளின் கண்காட்சிகளும் இடம்பெறவுள்ளன. (50)

## சைவபரிபாலன பரீட்சை

(யாழ்ப்பாணம்)

சைவ பரிபாலனசபைப் பரீட்சை அரச பாடசாலைகளில் நாளை இடம்பெறுகின்றது.

ஆண்டுதோறும் நடாத்தப்படும் இப்பரீட்சைக்கு சைவ சமய மாணவர்கள் தோற்றுவது வழமை. அதேபோல இவ்வாண்டுக்கான பரீட்சை நாளை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழிமூலம் தரம் 2 தொடக்கம் இப்பரீட்சை சைவ சமய மாணவர்களுக்கு இடம்பெறவுள்ளது. காலை 8.30 மணிக்கு இப்பரீட்சைகள் ஆரம்பமாகும் என பாடசாலை அதிபர்களுக்கு சைவபரிபாலனசபை அறிவித்துள்ளது. (இ)


சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2472 திகதி 23-10-2013

ஆங்கில எழுத்து: B

வெற்றி எண்கள் 34 53 65 68

போனஸ் இல: 49

ஜக்பொட் பரிசு ரூ.35,790,800/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 271612 | 20/- | 5,432,240/- |
| 2 இல | 19279 | 100/- | 1,927,900/- |
| 3 இல | 393 | 1,000/- | 393,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்தும் | 10743 | 40/- | 429,720/- |
| 2 இல + ஆங்கில எழுத்தும் | 795 | 1,000/- | 795,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்தும் | 16 | 10,000/- | 160,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்தும் | - | 35,790,800/- | - |
| 1 இல + போனஸ் இல | 12924 | 100/- | 1,292,400/- |
| 2 இல + போனஸ் இல | 605 | 500/- | 302,500/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்தும் + போனஸ் இல | 526 | 200/- | 105,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்தும் + போனஸ் இல | 29 | 1,500/- | 43,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்தும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 316929 | | 12,481,460/- |

இந்த சனிக்கிழமை ஜக்பொட் பரிசு

ரூ. 36,531,625/-

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3105)


## விசேட கருத்தமர்வு

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் நுணாவில் பொதுநூலகத்தில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நூலகங்களின் ஊடாக ஆற்றல் மிக்க சமுதாயத்தை கட்டியெழுப்புவோம் என்ற தலைப்பிலான கருத்தமர்வு இன்று காலை 9 மணிக்கு பொதுநூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத்தவிசாளர் இ.தேவசகாயம் பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சிறுவர் பகுதி நூலகர் இரவல் வழங்கும் சேவையை மன்றச் செயலாளர் கா.சண்முகதாஸன் அங்குரார்ப்பணம் செய்துவைக்க, இலவச நூலக அங்கத்துவத்தை மன்ற நிர்வாக உத்தியோகத்தர் திருமதி க.கணேசலிங்கம் ஆரம்பித்துவைப்பார்.

இந்நிகழ்வில் நுணாவில் மேற்கு அ.த.க. பாடசாலை அதிபர் திருமதி த.ஜீவகுமார், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மருத்துவமாது திருமதி பி.ராஜரட்ணம், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பி.தளிர்ராஜ் ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர். (11)

## கூட்டுறவாளர் தின விழா

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும், இலங்கை சனச சம்மேளனமும் இணைந்து நடாத்தும் 91 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா இன்று நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் காலை 9 மணிக்கு யாழ்.மாவட்ட சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் மற்றும் சனச சம்மேளன யாழ்ப்பாணப் பிரதிநிதி செ.இலகுநாதன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறும்.

நிகழ்வின் முதன்மை விருந்தினராக இலங்கை சிக்கன கடன் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனத்தலைவர் கலாநிதி பி.ஏ.கிரிவந்தெனிய கலந்துகொள்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன், இலங்கை சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளன பொது முகாமையாளர் எல்.பி.தசநாயக்க, மக்கள் வங்கி வடபிராந்திய முகாமையாளர் க.சுசீந்திரன், கௌரவ விருந்தினர்களாக வவுனியா மாவட்ட சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நா.சேனாதிராசா, யாழ்ப்பாணம் கூட்டுறவு சபைத் தலைவர் ஈ.இராஜாராம், இலங்கை சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளன உதவிப்பொது முகாமையாளர், யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் பா.ஸ்ரீக்குமார், யாழ்ப்பாணம் கூட்டுறவுச் சபை முன்னாள் தலைவர் பெ.கனகசபாபதி ஆகியோரும் கலந்து கொள்கின்றனர். (சி)

# கல்வித்தரத்தை உயர்த்துவதற்கு கடினமாக உழைக்க வேண்டும்

## வடமாகாணக் கல்வி அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தவர்களின் கல்வியின் உயர்நிலை கண்டு ஒரு காலத்தில் உலகமே வியந்து நின்றது. கல்வியிலும் விளையாட்டுத் துறையிலும் முன்னணியில் திகழ்ந்த யாழ்.மாவட்டம் கடந்த சில ஆண்டுகளாக மிகவும் பின்தங்கியுள்ளது. இதற்கான காரணங்களைக் கண்டறிந்து எமது பிரதேசத்தின் கல்வித்தரத்தை உயர்த்துவதற்கு கல்வியியலாளர்கள் அனைவரும் கடினமாக உழைக்க வேண்டும்.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் ஆசிரியன் பத்திரிகை வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய வடமாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா இவ்வாறு கூறினார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை வீரமணி ஐயர் அரங்கில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துணைப் பொதுச் செயலாளர் பொ. அருணகிரிநாதன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சர் தொடர்ந்து பேசுகையில்

ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தமது அங்கத்தவர்களின் நலன்களுக்காக மட்டுமே பாடுபடுவதோடு நின்றுவிடாது பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காக பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக் காக உழைக்க வேண்டும்.

பத்திரிகை வெளியிடுவது இலேசான பணி அல்ல. நீண்டகால இடைவெளிக்குப் பின் ஆசிரியன் பத்திரிகை வெளிவந்துள்ளது. இந்தப் பத்திரிகையின் ஊடாக கல்வி உலகில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.

கடந்த காலங்களில் யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் வினைத்திறன் மிக்க புகழ்பூத்த அதிபர்கள் பலர் கடமையாற்றி வந்தார்கள். அப்போது எமது பிரதேசப் பாடசாலைகளின் கல்வித்தரம் உயர்வாகக் காணப்பட்டது. அன்று ரியூசன் கொட்டகைகள் கிடையாது. இன்று மூலைக்கு மூலை சந்திக்கு சந்தி ரியூசன் நிலையங்களில் மாலைநேர வகுப்புகள் நடத்தப்பட்டும் கல்வி சீரழிந்துவிட்டது என்றார்.

ஆசிரியன் பத்திரிகையை கல்வி அமைச்சர் வெளியிட்டு வைக்க வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார். (10)

## புலம்பெயர் நபரால் பாடசாலைக்கு உதவி

லண்டன் மாநகரில் இருந்து வேலணை மத்திய கல்லூரிக்கு வருகைதந்துள்ள கல்லூரியின் பழைய மாணவன் கை.திருநீலகண்டன் மாணவர்கள் கல்வி மற்றும் விளையாட்டுத் தேவைககான உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இவர் மாணவர்களினது பயன்பாட்டிற்கென பிறிண்டிங் இயந்திரம் 5 கணனிகள், உதைபந்தாட்ட விளையாட்டிற்கான உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இவரின் இத்தகைய உதவியை பாடசாலை சமூகம், மாணவ சமூகம், பெற்றோர்கள் பாராட்டியுள்ளதுடன் நன்றி தெரிவித்துள்ளனர்.(05)

# குப்பைத் தொட்டிகள் திருட்டு; விசனமடையும் வர்த்தகர்கள்



(மல்லாவி)

மல்லாவி நகர்ப்பகுதியில் பிரதேச சபையினரால் வைக்கப்படும் குப்பைத் தொட்டிகள் திருடர்களால் களவாடப்படுவதால் குப்பைகளை உடனுக்குடன் அகற்றுவதில் வர்த்தகர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதியில் பிரதேச சபையினால் குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டு வர்த்தகர்களால் குப்பைகள் அதனுள் சேகரிக்கப்பட்டு வாராவாரம் அகற்றப்படுகிறது. இந்த நிலையில் தற்போது குப்பைத் தொட்டிகள் களவாடப்படுவதால் குப்பைகளை வர்த்தகர்கள் வீதியோரங்களில் கூட்டி ஒதுக்கி விடுக்கின்றனர். இதனால் காற்றுடன் செல்லும் குப்பைகளால் சுற்றுச் சூழல் பாதிக்கப்படுவதுடன் சுகாதார சீர்கேடு ஏற்படுவதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

எனவே, இந்த விடயம் தொடர்பாக துணுக்காய் பிரதேசசபை உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும என வர்த்தகர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (140)

## பரிசளிப்பு விழா

(சாவகச்சேரி)

கைதடி-நுணாவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று இடம்பெறவுள்ளது.

பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் ஆ.தங்கவேல் தலைமையில் இடம் பெறும் பரிசளிப்பு விழாவில் தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.கிருஷ்ணமூர்த்தி பிரதம விருந்தினராக கலந்து கொள்வதுன் சிறப்பு விருந்தினராக முன்னாள் அதிபர் எஸ்.அருட்சோதி கலந்து கொள்ளவுள்ளார். (இ)



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வவுனியா வடக்கு பிரதேசசபையினால் நெடுங்கேணி பொது வைத்தியசாலை உட்பட நகர்ப்பகுதியில் இடம் பெற்ற சிரமதான நிகழ்வில் சபை உத்தியோகத்தர்கள் ஈடுபடுவதைக் காணலாம். (40)

# முந்தி அவன்; இப்ப நீங்கள்...




தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உயர் மட்டத்தில் அடிக்கடி திட்டு வாங்கும் இரண்டு எம்.பி மார் உள்ளனர்.

ஒருவர் அரியநேந்திரன். மற்றவர் சி.சிறிதரன்.

இவர்கள் இருவரும் தடாலடியாக அறிக்கைகளை விடுவார்கள். கண்டனங்களைச் செய்வார்கள். குற்றச்சாட்டுகளைச் சுமத்துவார்கள். வசைகளை வாரியிறைப்பார்கள்.

தான் எதைப்பற்றிப் பேசுகிறேன்? அப்படிப் பேசுவது சரிதானா? அது நியாயமானதா? எல்லாவற்றுக்கும் அப்பால் அது நியாயமானதா? அப்படி நடக்குமா? அல்லது அப்படி அந்த விசயம் நடக்கிறதா? என்றெல்லாம் சிறிதரன் யோசிப்பதேயில்லை.

இவர்கள் சொல்வதையெல்லாம் செய்தியாகப் போடும் ஊடகங்களும் யோசிப்பதில்லை.

அண்மைய உதாரணம், பூநகரி – பொன்னாவெளியில் 1000 ஏக்கரில் சிமெந்துக்கான கல் அகழ்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் இதனால் அங்குள்ள மக்கள் வெளியேறும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்றும் சிறிதரன் தெரிவித்தமை.

பொன்னாவெளியில் மக்களே இருப்பதில்லை. அங்கே மிக நீண்ட காலத்துக்கு முன்னர் 10 குடும்பங்கள் மட்டுமே இருந்தன. தொடர்ந்து அங்கே இருப்பதற்கான வசதிகள் போதாதென்று அந்தக் குடும்பங்களும் பின்னர் இடம் பெயர்ந்து வலைப்பாட்டுக்கும் வேரவிலுக்கும் சென்றுவிட்டன.

மட்டுமல்ல, பொன்னாவெளியில் ஏனைய இடங்களில் நடப்பதைப் போல மண் வள ஆய்வே நடந்தது.

உண்மை இவ்வாறிருக்க, மக்களைக் கலவரமடைய வைக்கும் விதமாக அறிக்கை விடப்பட்டுள்ளது.

இப்படித்தான் பல காரியங்கள் நடக்கின்றன.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், முறிகண்டிப்பகுதியில் கொண்டு வந்து பறிக்கப்பட்டிருந்த சீனாவிலிருந்து தருவிக்கப்பட்ட ஆயத்தநிலை இருப்பிடங்களைக் கண்ட சுரேஸ் பிரேமச்சந்திரன் உடனடியாக ஒரு அறிக்கை விட்டார்.

முறிகண்டிப்பகுதியில் 1000 சிங்களக் குடும்பங்களைக் குடியேற்றுவதற்கான நடவடிக்கை ஆரம்பம் என்று. அப்படியென்றால், அந்தக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கான பாடசாலை எங்கே உள்ளது? அவர்கள் எந்தச் சந்தைக்குப் போகிறார்கள்? எந்த வைத்தியசாலையில் மருந்தெடுக்கிறார்கள்? என்பதைக் கூட அவர் சிந்திக்கவில்லை. சனங்களும் அதைப்பற்றிக் கேட்கவில்லை.

ஆனால், அந்த ஆயத்தநிலை இருப்பிடங்கள் படையினருக்கானவை என்பது பின்னரே தெரியவந்தது.

இப்படி, மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்றமாதிரித்தான் இவர்களுடைய அனுமானங்கள் – கணிப்புகள் உள்ளன.

தாங்களும் கலங்கிச் சனங்களையும் கலங்க வைப்போர் ஒருபோதும் மக்களுக்கான பொறுப்புகளில் இருக்க முடியாது.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவி என்பது பொறுப்பும் மதிப்பும் மிக்க ஒரு பதவி. அதை மாண்புடன் பேணுவது அவசியம்.

முன்னரும் இதேமாதிரி ஒருவர் அறிக்கை விடுவதில் விண்ணனாக இருந்தார். மிக அதிகமான வாக்குகளைப் பெற்று வெற்றிவாகை சூடிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன், தன் வாயாலேயே தன்னையும் கெடுத்துப் புலிகளையும் கெடுத்தார்.

இலங்கை அரசு போரை ஆரம்பித்தால் 40 ஆயிரம் சவப்பெட்டிகளை தென்பகுதிக்குக் கொண்டு வரவேண்டி வரும் என்று முழங்கினார். பிறகு என்ன நடந்தது என்று எல்லோருக்கும் தெரியும்.

ஒரு காலம் தலைப்புச் செய்திகளை வழங்கி வந்த கஜேந்திரனைச் சனங்கள் குப்பைத் தொட்டிக்குள் போட்டு விட்டார்கள்.

முந்தி அவன் [கஜேந்திரன்] இருந்து படுத்தினான். இப்ப நீங்கள் இருந்து படுத்திறியள்' என்று சினக்கிறார் சம்பந்தன்.

'இந்தத் தள்ளாத வயதிலும் தன்னைப் போட்டுப் படுத்துகிறார்களே மாபாவிகள்' என மனுசன் திட்டிக் கொண்டிருக்கிறார்.

நாம் நன்மையடைய மற்றவர்களை எதிர்பார்க்கும் வரை நாம் அடிமைகளே. - சுவாமி விவேகானந்தர்.

தினப்பதிப்பு தினமுரசு THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## வாழவே பிறந்தோம்!

முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் விக்னேஸ்வரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக இனங்காணப்படுவதற்கு சில மாதங்களின் முன்பு யாழ்ப்பாணம் வந்து நிகழ்வொன்றில் அவர் பேசிய பேச்சு அப்போது ஊடகங்களில் பரபரப்பாக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்திருக்கிறது; பல கலாசாரச் சீரழிவுகள் நடைபெறுகின்றன என்று அவர் அரசாங்கத்தைக் குற்றம் சாட்டிப் பேசியிருந்தார். அவர் பேசிய அந்தக் காலகட்டத்தில், அவர், தானே இந்த மாகாண அரசாங்கத்தைப் பொறுப்பேற்று நடத்தப்போகும் முதலமைச்சராக ஆவேன் என்று எதிர்பார்த்திருக்கவில்லை.

அவரே கூறியுள்ளபடி, எதிர்பாராமல் அரசியலுக்கு இழுத்துவரப்பட்டு, இப்போது வடமாகாணத்தின் முதலமைச்சராகவும் ஆகிவிட்டார். இன்று 25ஆம் திகதி அவரது தலைமையிலான மாகாணசபை முதலாவது அமர்வில் கூடுகிறது.

இச்சமயத்தில் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ, வடக்கில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் முழுப்பொறுப்பு இப்போது முதலமைச்சரிடமே உள்ளது என கருத்துத் தெரிவித்திருக்கிறார். அதாவது முதலமைச்சரால் பொலிசாருக்கு உத்தரவிட முடியாத போதும், மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் மற்றும் நாட்டின் பொலிஸ் மா அதிபர், பொலிஸ் அதிகாரிகளிடம் சட்டம் ஒழுங்கு மீறல் சம்பவங்கள் இடம்பெற்றால் அவை தொடர்பாக அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து நடவடிக்கைகளை எடுக்குமாறு கூறமுடியும்.

ஆகவே இனி குற்றச்சாட்டுகளைச் சொல்லிக் கவலைப்பட்டுக் கொண்டிராமல் அவரால் ஆக்கபூர்வமாக செயற்பட முடியும். அதிகாரிகளுடனும் மத்திய அரசாங்கத்துடனும் எதிர்மறை அணுகுமுறைகளைத் தவிர்த்து நேர்மறையான அணுகுதல் மூலம் மக்களுக்கு உபயோகமாகச் செயற்படுவதற்கான அதிகாரங்களைத் தேடிக் கொள்ள முடியும்.

எதிர்ப்புகளைச் சொல்லிக்கொண்டிருப்பதால் மக்களுக்கு ஆகப்போவது ஒன்றுமில்லை. வெறுமனே நம்முள் வெறுப்பையும் பகையுணர்ச்சியையும் வளர்த்துக்கொண்டிருந்து, இங்கே எந்த மாற்றத்தையும் கொண்டுவந்துவிட முடியாது. இணக்க அரசியலை விவேகமுடன் முன்னெடுப்பதன் மூலம் மக்களுக்கு உண்மையில் தேவையானவற்றை இங்கு நிறைவேற்றிக் காட்டமுடியும். அதைத்தான் வடக்கு மக்களின் பொறுப்பான பதவியைப் பெற்றிருக்கும் முதலமைச்சரும் இனி செய்யவேண்டும்.

பகையை வைத்துக்கொண்டு அழிவுகளைத் தவிர எதையும் சாதிக்க முடியாது. பகைமறப்பின் மூலம் நாட்டு மக்கள் அனைவருக்கும் வாழ்வும் வளத்தையும் சாதிக்க முடியும்.

ஹிட்லரின் தலைமையில் நாஸிப் படையினரும், அவர்களோடு சேர்ந்து கிழக்கு ஐரோப்பாவின் மற்ற சில நாட்டுப் படைகளும், இரண்டாம் உலகப்போரின் போது கொன்று குவித்த மனித உயிர்களுக்கு, கணக்கே இல்லை. ஆயினும், மிக விரைவாகவே, அங்கெல்லாம் அமைதி திரும்பி, ஐரோப்பாவின் நாடுகள் சிறப்பான சமூகங்களாக ஒன்றுக்கொன்று இசைவுடன் வாழ்ந்து வரவில்லையா? இன்றைய ஜெர்மனி உலகின் தலைசிறந்த சமூகங்களில் ஒன்றாக இல்லையா?

ஏன், சீனா உட்பட தென்கிழக்கு ஆசியாவின் பல நாடுகளில் ஜப்பான் படைகள் செய்யாத வன்முறையா? மிகக்குரூரமாக ஆயிரக் கணக்கான மக்களை அழித்தொழிக்கவில்லையா? கொன்று புதைக்கவில்லையா? எரிக்கவில்லையா? இன்றைக்கு அதே ஜப்பான், உலகின் எல்லா நாடுகளுடனும் மிகச்சிறந்த உறவைப் பேணுவதோடு, ஒரு நல்ல முன்மாதிரி ஜனநாயக சக்தியாக இலங்கைக்கும் அறிவுரைகள் சொல்லும் நிலையில் இல்லையா?

நீண்ட போராட்டப் பாதையில் ஒருவரையொருவர் மாறி மாறிக் கொன்றுகுவித்த தென்னாபிரிக்க இராணுவமும் கறுப்பினப் போராளிகளும் இன்று ஒரே நாட்டில் சேர்ந்துவாழ முடிகிறதே!

பகை மறப்போம் – நாமும் வாழ்வோம். – ஆசிரியர்

# மன்னாரிலிருந்து முல்லைக்கான தனியார் பஸ் சேவைக்கு அனுமதி

## குற்றச்சாட்டிற்கும் மறுப்பு

(முல்லைத்தீவு)

மன்னார் மாவட்ட போக்குவரத்து சேவைக்கு சொந்தமான பேருந்துகளுக்கு கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சேவையில் ஈடுபடுவதற்கு அனுமதிமறுக்கப்பட்டு வருவதாக மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்து சங்கத்தின் தலைவர் ரி.ரமேஸ் தெரிவித்த குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் இல்லையென முல்லைத்தீவு மாவட்ட தனியார் போக்குவரத்து சங்கத்தின் தலைவர் கனகரத்தினம் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மன்னார் மாவட்ட தனியார் பேருந்துகள் முல்லைத்தீவு மாவட்டத் திற்கான சேவையை மேற்கொள்வதில் எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லை. ஆனால் இந்தச் சேவைகள் மேற்கொள்ளமுடியும். ஏனெனில் ஒரு மாவட்டத்தில் தனியார் போக்குவரத்துச் சேவை இடம் பெறும்போது வேறு மாவட்ட பேருந்துகளை நண்பகல் 12 மணி முதல் அனுமதிக்கும் நடைமுறை எந்தவொரு மாவட்டத்திலும் இல்லை.

அத்துடன் மன்னாரிலிருந்து வரும் தனியார் பேருந்துச் சேவை முழங்காவில்,ஜெயபுரம், பூநகரி,பரந்தன் ஊடாகவே வர விருப்பம் தெரிவித்துள்ளன. இதனால் இங்கு சேவையில் ஈடுபடும் எமது மாவட்ட பேருந்துகளுக்கான வருமானம் குறைவடைய வாய்ப்புள்ளது.

எனினும் 12 மணிக்கு பிற்பாடான மன்னார் பேருந்துகளின் சேவைகளுக்கு எவ்வித தடையும் கிடையாதென அவர் மேலும் தெரிவித்தார்.

# கொமன்வெல்த் மாநாட்டை முன்னிட்டு பேரணிகளுக்கு முற்றாகத்தடைவிதிப்பு

அடுத்த மாதம் கொமன்வெல்த் மாநாடு நடக்கும் போது, கொழும்பிலும் ஏனைய இடங்களிலும், எல்லாப் பேரணிகளுக்கும் தடைவிதிக்கப்படும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது. பேரணிகள் நடத்துவது, பதாகைகளை காட்சிப்படுத்து. வது, கறுப்புக்கொடிகளை பறக்க விடுவதற்கு அடுத்த மாதம் முதல் மூன்று வாரங்களுக்கு, தடைவிதிக்கப்படவுள்ளது.

50இற்கும் அதிகமான நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் கொமன்வெல்த் மாநாட்டின் பாதுகாப்புக் கருதி இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக, பாதுகாப்பு அமைச்சின் சட்ட ஆலோசகர் ஹரிகுப்த றோகணதீர தெரிவித்துள்ளார்.

கொமன்வெல்த் மாநாடு நடத்தப்படுவதற்கும், இதில் உலகத் தலைவர்கள் பங்கேற்பதற்கும் மனிதஉரிமை அமைப்புகள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன.

இந்தநிலையில், மோசமான மனித உரிமைகள் நிலையை வெளிப்படுத்தும் போராட்டங்கள் நடத்தப்படலாம் என்பதாலேயே, பேரணிகள் மற்றும் பதாகைகள், கறுப்புக்கொடிகளுக்கு தடைவிதிக்கப்படவுள்ளது.

# நாலரை இலட்சம் மாணவர்கள் பார்வைக்குறைபாட்டால் அவதி

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பாடசாலை மாணவர்கள் 4 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு பார்வைக் குறைபாடு உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. என சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் பாலித மகிபால தெரிவித்துள்ளார்.

மாணவர்களுக்கு இதில் ஒரு இலட்சத்து 60ஆயிரம் பேருக்கு கிட்டியதூரப் பார்வைக் குறைபாடு உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. 2020 ஆண்டுக்குள் பார்வைக் குறைபாடுள்ள மாணவர்கள் அனைவருக்கும் கண்ணாடி வில்லைகள் வழங்கப்படும் எனவும் ஏற்கனவே வழங்கப்பட்டவர்களுக்கும் புதிதாக வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

'விஷன் 2020' திட்டத்தின் நோக்கம் இலங்கையில் 2020 ஆம் ஆண்டளவில் பார்வைக் குறைபாடு உள்ளவர்கள் இருக்கக்கூடாது என்பதாகும்.

இந்நோக்கத்தினை எய்தும் முகமாக சுகாதார அமைச்சர் மைத்திரி சிறிசேனாவின் நேரடி வழிகாட்டலின் கீழ் தேசிய கண் வைத்தியசாலையில் கண்ணாடி வில்லைத் தொழிற்சாலை நிறுவப்படவுள்ளது எனவும் அவர் மேலும்தெரிவித்தார். (சி)

# பொதுநலவாய மாநாட்டில் மலேசியா பங்குபற்றும்

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்களின் மாநாட்டில் மலேசியா பங்கேற்கும் என உறுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மலேசியா சார்பில் மாநாட்டில பிரதமர் நஜிப்டன் ரசாக் கலந்து கொள்வார் என மலேசிய வெளிவிவகார செயலக தென்னாசிய பிரிவு உதவி செயலாளர் மசிதா அஹமட் தெரிவித்துள்ளார்.

23 பொதுநலவாய நாடுகளின தலைவர்கள் மாநாடு நவம்பர் 15 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் இலங்கையின் மனித உரிமைகள் மீறல் நிலையைக்கருத்திற்கொண்டு மலேசியா மாநாட்டை புறக்கணிக்க வேண்டும் என பல அமைப்புக்களாலும் வலியுறுத்தப்பட்டு வருகிறது. இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக மனித உரிமை மீறல் புரியப்பட்டுள்ளதால் பொதுநலவாய மாநாட்டை புறக்கணிக் கும்படி மலேசிய பிரதமரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனினும் மாநாட்டை புறக்கணிக்காது அதில் கலந்துகொள்ள மலேசிய பிரதமர் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மின்கட்டணம் செலுத்தாமைக்கு காரணத்தை விளக்கும் தவிசாளர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட நகரப்பகுதியில் பிரதேசசபையின அனுமதியின்றி பொருத்தப்பட்ட வீதி விளக்குகளுக்கான கட்டணத்தை முழுமையாக செலுத்த முடியாமையே நகரப்பகுதி இருளில் மூழ்குவதற்கான காரணமென பிரதேசசபைத் தவிசாளர் குகராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, கிளிநொச்சி நகரப்பகுதியில் பிரதேசசபையின் அனுமதி பெறப்படாமலேயே பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போதும் கிளிநொச்சி செயலகத்திற்கு அருகில் சலசலாவுக்கென கட்டடம் அமைக்கப்படுகிறது.

இது கூட பிரதேசசபையின் அனுமதியின்றியே மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறே கிளிநொச்சி நகரப்பகுதியிலும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

ஆனால் இந்த வீதி விளக்குகளுக்கான மாதாந்த மின் கட்டணம் நான்கரை இலட்சமாகும்.

இதனை பிரதேசசபை செலுத்தமுடியாது. நாம் மின்கட்டணமாக மாதாந்தம் ஒரு இலட்சமே தருவோமென அரச அதிபர், வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு தெரியப்படுத்தி கடிதம் அனுப்பியிருந்தோம். எனினும் அவர்களிடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்கவில்லையென அவர் மேலும் தெரிவித்தார்.

கடற்புலிகளைப் பொறுத்தவரையில் கே.பி எனப்படும் குமரன் பத்மநாதன் ஆயுதக் கொள்வனவில் ஈடுபட்டிருந்த காலப்பகுதியில் உலக நாடுகளில் குறிப்பாக புதிய ஆயுதங்கள் உடனடியாகவே புலிகளின் கைகளிற்கு எட்டிவிடுவதுண்டு. இதைவிட உலக நாடுகளின் கறுப்புச் சந்தைகளில் விற்பனையாகும் நவீன ரக இலகுரக ஆயுதங்களையும், விடுதலைப்புலிகள் கொள்வனவு செய்துகொண்டிருந்தனர். சில சந்தர்ப்பங்களில் யுத்தம் இடம்பெற்றுக்கொண்டிருந்தபோது படையினரிடம் சில வேளைகளில் புலிகளின் ஆயுதங்கள் சிக்குகின்ற சந்தர்ப்பங்களில் அதாவது தங்களுடைய படையினருக்குக் கிடைக்காத ஆயுதங்கள் எவ்வாறு விடுதலைப் புலிகளிற்கு கிடைத்தது என இராணுவ ஆய்வாளர்களும் படையியல் உயர் வல்லுனர்களும், மூக்கில் விரல் வைப்பதுண்டு.

வன்னியில் பொட்டம்மானுக்கும், சூசைக்கும் இடையே இடம்பெற்ற உள்முறுகலை அடுத்து பிரபாகரன் ஆயுதங்களுக்கான கொள்வனவு டீலை யார் இனி மேற்கொள்வது என்பது தொடர்பான கலந்துரையாடலை இறுதிக் கட்டத்தில் புதுக்குடியிருப்பில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றில் நடத்தியபோது கஷ்ரோ, சூசை, பொட்டம்மான், தீபன் உள்ளிட்ட பல முக்கிய தளபதிகள் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர். அங்கே சூசை தொடர்பில் பொட்டம்மான் அதிருப்தி வெளியிட்ட போது சூசை உடனடியாகவே ஆயுத டீல் வேலையை பொட்டம்மானால் மேற்கொள்ள முடியுமா? என சவால் விட்டுக் கேட்டார். தன்னால் இந்த வேலையை இலகுவாக மேற்கொள்ள முடியும் என தலைவர் முன் பொட்டம்மான் உத்தரவாதம் அளித்த போதும் முள்ளிவாய்க்கால் முடிவுகள் எழுதப்படும்வரை பொட்டம்மானால் ஒரே ஒரு கப்பலில் மாத்திரமே அதுவும் சிறிய வகைக் கப்பல் ஒன்றிலேயே ஆயுதங்களை இறக்க முடிந்தது. அடுத்தடுத்த கப்பல்கள் அமெரிக்காவின் சற்றலைற் ஊடாக கண்காணிக்கப்பட்டு தகவல்கள் இலங்கை அரசிடம் பரிமாறப்பட்டு அந்தக் கப்பல்கள் கடலில் மூழ்கடிக்கப்பட்டமை நடந்து முடிந்த வரலாற்றுப் பதிவுகளாகும்.



# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள்



## 53

வே. அர்ச்சுணன்

குறிப்பாக ரஷ்ய தயாரிப்பு ஆயுதங்களை ரஷ்யா இலங்கை அரசாங்கத்தைத் தவிர வேறு நாடுகளுக்கு இலங்கைக்கு வழங்கிய பின்னரே வழங்குவதுண்டு. ஆனால் இத்தகைய ரஷ்யத் தயாரிப்பு இலகுரக ஆயதங்களை விடுதலைப் புலிகள் ஏதோ ஒரு விதத்தில் ரஷ்ய ஆயுத முகவர்களுடன் டீல் வைத்து பெற்றுவிடுவார்கள். இவ்வாறு பெறப்பட்ட ஆயுதங்களை கடற்புலிகள் கடற்சண்டைகளிலும் பயன்படுத்தி வந்தார்கள். இவ்வாறு உக்ரேன் நாட்டில் ஆயுதக் கொள்வனவில் இறுதிக் கட்டங்களில் புலிகள் ஈடுபட்ட போது அந்தக் கப்பல்கள் மற்றும் ஆயுதக் கொள்வனவுகள் தொடர்பான டீல்களை அமெரிக்க புலனாய்வு அமைப்பான (C.I.A) கண்டுபிடித்து அது தொடர்பான தகவல்களை அமெரிக்க ஆசிய பசுபிக் பிராந்திய கட்டளைப் பீடத்திடம் உடனடியாகவே கசிய விட்டுவிடும். இவ்வாறு கசிய விடப்படும் தகவல்களை ஆசிய பசுபிக் பிராந்திய அமெரிக்க கட்டளைப் பீடம் இலங்கை பாதுகாப்பு தொடர்பான அலுவல்களுடன் ஏதோ ஒரு விதத்தில் தகவலை பரிமாறிக் கொள்ளும்.

ஆனால் இத்தகைய தகவல்கள் மற்றும் உளவு விபரங்கள் எவையும் ஆரம்பத்தில் புலிகளைப் பொறுத்தவரையில் இசகு பிசகானதாக இருக்கவில்லை. வன்னியில் பொட்டம்மானுக்கும், சூசைக்கும் இடையே இடம்பெற்ற உள்முறுகலை அடுத்து புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரன் ஆயுதங்களுக்கான கொள்வனவு டீலை யார் இனி மேற்கொள்வது என்பது தொடர்பான கலந்துரையாடலை இறுதிக் கட்டத்தில் புதுக்குடியிருப்பில் உள்ள விடுதலைப் புலிகளின் முகாம் ஒன்றில் நடத்தியபோது கஷ்ரோ, சூசை, பொட்டம்மான், தீபன் உள்ளிட்ட பல முக்கிய தளபதிகள் அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர். அங்கே சூசை தொடர்பில் பொட்டம்மான் அதிருப்தி வெளியிட்ட போது சூசை உடனடியாகவே ஆயுத டீல் வேலையை பொட்டம்மானால் மேற்கொள்ள முடியுமா? என சவால் விட்டுக் கேட்டார். தன்னால் இந்த வேலையை இலகுவாக மேற்கொள்ள முடியும் என தலைவர் முன் பொட்டம்மான் உத்தரவாதம் அளித்த போதும் முள்ளிவாய்க்கால் முடிவுகள் எழுதப்படும்வரை பொட்டம்மானால் ஒரே ஒரு கப்பலில் மாத்திரமே அதுவும் சிறிய வகைக் கப்பல் ஒன்றிலேயே ஆயுதங்களை இறக்க முடிந்தது. குறிப்பாக இந்தக் கப்பலில் சிறிய இலகுரக ஆயுதங்கள் சிலவும் விடுதலைப் புலிகளின் படகுகளுக்கு பாவிக்கக் கூடிய குதிரைவலு எஞ்சின்களும் மாத்திரமே உள்ளடக்கமாக இருந்தது.

அடுத்த கப்பலில் விமானங்களை தாக்கும் ஸ்ரிங்கர் ரக ஏவுகணைகள் உள்ளிட்ட பல நவீனரக ஆயுதங்களை வன்னிக்கு எடுத்து வருவதாக திட்டமிடப்பட்டு அந்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்ட போது அவ்வாறு ஆயுதங்கள் எடுத்துவரப்பட்ட ஒவ்வொரு கப்பலும் அமெரிக்காவின் சற்றலைற் ஊடாக கண்காணிக்கப்பட்டு அந்தக் கப்பல்கள் தொடர்பான தகவல்கள் இலங்கை அரசிடம் பரிமாறப்பட்டு அந்தக் கப்பல்கள் கடலில் மூழ்கடிக்கப்பட்டமை நடந்து முடிந்த வரலாற்றுப் பதிவுகளாகும். உண்மையில் இலங்கைக் கடற்படை இறுதிக் கட்டத்தில் அமெரிக்கக் கடற்படையின் அல்லது அமெரிக்க அரசின் உதவியுடனேயே வலுவடைந்தது எனலாம்.

ஆரம்பத்தில் கடற்புலிகளிடம் பல கட்டங்களில் இலங்கைக் கடற்படை வாங்கிக்கட்டியதுண்டு. இலங்கையின் பாதுகாப்பு தொடர்பான விடயங்களை கையாண்டு விடுதலைப் புலிகளின் குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட ரஞ்சன் விஜயரத்ன இலங்கை கடற்படை தொடர்பில் அக்காலப் பகுதி சரியான மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டதுடன் இலங்கை கடற்படை தொடர்பில் தனது கடுமையான விமர்சனத்தையும், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவிடம் பல தடவைகள் முன்வைத்திருந்தார். இலங்கைக் கடற்படை கடத்தல்காரர்களை பிடிப்பதற்கு மட்டுமே பொருத்தமானது எனவும், விடுதலைப் புலிகளை தோற்கடிக்கக் கூடிய வல்லமை இலங்கைக் கடற்படையிடம் இல்லையெனவும் வெளிப்படையாகவே குறிப்பிட்டதுடன் இலங்கைக் கடற்படையை நவீன வடிவில் புனரமைக்கவேண்டிய தேவை உள்ளதென வலியுறுத்தினார். பாதுகாப்பு அமைச்சுக்கென ஒதுக்கீடு செய்யும் நிதியில் 50 விழுக்காடு நிதியை கடற்படையினரின் ஆயுதக் கொள்வனவு மற்றும் அவர்களுடைய நலன்கள் என்பனவற்றிற்கு பயன்படுத்துவதுடன் தவணை முறை அடிப்படையில் அல்லது நீண்ட கால கடன் அடிப்படையில் போர்க்கப்பல்களை புதிதாக கொள்வனவு செய்யவேண்டுமெனவும் அவரால் பரிந்துரை செய்யப்பட்டது.

இருந்த போதும் அப்போதைய அரசாங்கம் 35வீத நிதி ஒதுக்கீட்டையே கடற்படைக்கென ஒதுக்கீடு செய்தது. இதனால் பெரியளவில் இலங்கைக் கடற்படையை நவீன மயப்படுத்த முடியாமல் போனதுடன் இலங்கைக் கடற்படை ஒவ்வொரு படி முன்னேறி சென்றபோதும் கடற்புலிகள் அதற்கு மேலும் ஒருபடி முன்னேறிச் சென்று தமது தாக்குதல் திறனை அதிகரித்ததுடன் இலங்கைக் கடற்படைக்கு தொடர்ச்சியாக பேரிடிகளையும், இழப்புக்களையும் ஏற்படுத்திக்கொண்டிருந்தனர். இந்த நிலையில் இலங்கையின் பாதுகாப்பு விடயங்களை சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் கையாண்டுவந்த அனுருத்த ரத்வத்த குறிப்பாக பாகிஸ்தானில் இருந்து மட்டுமே கடற்படைக்குரிய உதவிகளைப் பெறவேண்டுமென்பதில் குறியாக இருந்தார்.

அதாவது கடற்படைக்குரிய ஆயுதக் கொள்வனவு மற்றும் கடற்படைக்குரிய இலகுரக கப்பல்கள் அதிவேக தாக்குதல் சண்டைக் கலங்கள் என்பனவற்றை கொள்வனவு செய்வதற்கான ஒப்பந்தங்களை பாகிஸ்தானுடன் மேற்கொண்டார். போட்டிக்கு இந்தியாவும் சீனாவும் இலங்கைக்கு உதவுவதற்கு முன்வந்தன. இந்தியாவின் உதவியை ஏற்றுக்கொண்ட அனுருத்த ரத்வத்த சீனாவின் உதவியை பெரியளவில் பெறுவதற்கு முனைப்புக் காட்டவில்லை. இதற்குப் பிரதான காரணம் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் இந்தியாவை மிஞ்சி அடுத்த கட்டத்திற்கு செல்லக்கூடாது என்பதில் அப்போதைய சந்திரிகா அரசு உறுதியாக இருந்தது. அதாவது தென்னாசியப் பிராந்தியத்தில் ஆதிக்கப்போட்டி இந்தியாவிற்கும், சீனாவிற்கும் இடையில் இன்று நேற்று ஏற்பட்டதல்ல இந்தப்போட்டி பல காலமாக நீடித்து வருகிறது. வளர்ந்துவரும் நாடான இலங்கை அதற்குள் பலிக்கடாவாகக் கூடாது என்பதில் சந்திரிகா உறுதியோடு இருந்தார். அத்துடன் தனது வெளியுறவுக் கொள்கையில் இந்தியாவை மிஞ்சி செயற்படுவதில்லை. என்பதிலும் திடமாக இருந்தார்.


இதன் காரணமாகவே சீனாவின் உதவியை பெரிதாக அல்லது கூடிய அக்கறை காட்டாமல் இந்தியாவின் உதவியை உடனடியாகவே இலங்கை அரசு பெற்றுக்கொண்டது. இருந்த போதிலும் சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில்தான் இலங்கைக் கடற்படை கூடுதலாக கடற்புலிகளிடம் வாங்கிக் கட்டிக்கொண்டிருந்தது. பல கரும் புலித் தாக்குதல்களை இக்காலப் பகுதியில் கடற்புலிகள் வெற்றிகரமாக மேற்கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு கடற்சண்டைகளிலும் கடற்புலிகள் வெற்றிவாகை சூடிக்கொண்டிருந்தார்கள். சந்திரிகாவின் ஆட்சிக்காலம் என்பது இலங்கைக் கடற்படைக்கு மங்குசனியாகவே காணப்பட்டது. அதாவது மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் கடற்புலிகளிற்கு மங்குசனி ஏற்பட்டதைப் போன்று சந்திரிகாவின் ஆட்சிக் காலத்தில் இலங்கைக் கடற்படை பல்வேறு விதங்களில் ஆட்டங்கண்டு வந்தது.

இந்த நிலையில் மகிந்த ராஜபக்ஷ ஆட்சிப் பொறுப்பை ஏற்ற கையுடன் தனது வெளியுறவுக் கொள்கையில் சடுதியான மாற்றங்களை ஏற்படுத்தியவாறு இலங்கைக் கடற்படையையும் பெரியளவில் கட்டி வளர்த்தார். இவர் தனது வெளியுறவுக் கொள்கையில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தினார்? கடற்படையை எவ்வாறு கட்டியெழுப்பினார்? விடுதலைப் புலிகளை எவ்வாறு அழித்தார்? என்பது தொடர்பில் தொடர்ந்து பார்ப்போம்.

(தொடரும்)

# நாட்டின் பொது அபிவிருத்தி திட்டத்தில் மக்கள் பிரதிநிதிகள் இணைய வேண்டும்

## அழைப்பு விடுக்கிறார் ஜனாதிபதி



(கொழும்பு)

நாட்டிற்காகவும், மக்களுக்காகவும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பொது அபிவிருத்தித் திட்டத்தில் அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

2014 ஆம் வருடத்திற்கான வரவு-செலவுத்திட்டத்தை தயாரிக்கும் வகையில் பிரதி அமைச்சர்களின் யோசனைகள் மற்றும் கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்காக அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

படிப்படியாகவும், முறையான திட்டங்களின் ஊடாகவும் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்போது மக்களுக்கு அதிகளவிலான நன்மைகளை பெற்றுக்கொடுக்க முடியும் என்றும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிதாக அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர், நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சகல அபிவிருத்தித் திட்டங்களையும் வெற்றிகரமாக நிறைவுசெய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தியதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தத்தமது தொகுதிகளில் நிலவுகின்ற பிரச்சினைகள் தொடர்பில் பிரதி அமைச்சர்களால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் மற்றும் அவற்றிற்கு வழங்கக்கூடிய தீர்வுகள் குறித்தும் இந்தக் கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

# வெற்றிலை, பாக்கு, கித்துல்பாணிக்கும் அமைச்சுப் பதவி வழங்க வேண்டும்

## அரசைக் கேட்கிறது ஐ.தே.க

(கொழும்பு)

அரசாங்கம் ஆளும் கட்சியின் ஒரு சில நாடாளுமன்ற உறுப்பினர்களை ஒடுக்குமுறைக்கு உட்படுத்தி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சுப் பதவிகளை வழங்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நலீன் பண்டார தெரிவித்துள்ளார்.

கல், வெற்றிலை, கித்துல்பாணி, பாக்கு போன்றவற்றுக்கு அமைச்சுக்களை அமைத்து எஞ்சியவர்களுக்கும் அமைச்சுப் பதவி வழங்கப்பட வேண்டுமென கோரியுள்ளார்.

இவ்வாறான துறைகளில் அனுபவம் உடையவர்களின் திறமைகளை விரயமாக்கிவிட முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

என்ன விலை கொடுத்தேனும் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை திருப்திப்படுத்தவே அரசாங்கம் கூடுதல் சிரத்தை எடுத்துக் கொள்வதாகவும், பல்வேறு துயரங்களை அனுபவித்து வரும் அப்பாவிப் பொதுமக்களின் நிலைமைகள் குறித்து கவனிப்பதில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசத்திற்கு மகுடம் கண்காட்சியில் பாரியளவில் நன்மைகள் வழங்குவதாக அறிவிக்கப்பட்ட போதிலும் உண்மையில், அடையாள அட்டைகளை வழங்குவதனைத் தவிர வேறு எதனையும் வழங்கியதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

# கடல்வளம் சூறையாடப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும் இந்தியா

## கோத்தாபய தெரிவிப்பு



(கொழும்பு)

இந்திய மீனவர்கள் எமது கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்து, பாரிய இழுவைக் கப்பல்களை பயன்படுத்தி, எமது மீனவர்களின் வருமானத்தை சூறையாடுகிறார்கள்.

சிங்கப்பூரில் சிங்கி இறால்கள், நண்டுகள், பெரிய இறால்களை பெருமளவு விலைக்கு விற்கிறார்கள். இதனால் எமது கடல் எல்லையில் உள்ள மீன்வளம் காலப்போக்கில் முற்றாக மறைந்துவிடுமென பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ தமிழ்ப் பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்களை நேற்றுமுன்தினம் சந்தித்த போது தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது,

சிங்கப்பூரில் உள்ள நவீன ஹோட்டல்களில் இலங்கையின் சிங்கி இறால்கள், நண்டுகள், பெரிய இறால்களை பெருமளவு விலைக்கு கோடீஸ்வரர்களுக்கு விற்று வருகிறார்கள்.

இதுபற்றி அறிந்து கொண்ட நான் இவை எங்கிருந்து இவ்வளவு பெருமளவில் சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதென விசாரித்த போது அவற்றை தமிழ்நாட்டில் உள்ள மீன் முதலாளிகள் தங்களுக்கு ஏற்றுமதி செய்வதாக ஹோட்டல் நிர்வாகிகள் எனக்கு தெரிவித்தாரகள்.

இவ்விதம் தான் இந்திய மீனவர்கள் எமது கடல எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்து எமது மீனவர்களின் வருமானத்தை சூறையாடுகிறார்கள்.

இந்திய மீனவர்கள் எமது கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்து இலங்கை மீனவர்களை அடித்து துன்புறுத்தி அவர்களின் மீன்களை பறித்து படகுகளையும் வலைகளையும் சேதப்படுத்துவதுடன் நின்றுவிடாமல் தங்களின் பாரிய இழுவைக் கப்பல்களை பயன்படுத்தி இலங்கையின் கடல் அடிமட்டத்தில் உள்ள குஞ்சு மீன்களைக் கூட அழித்துவிடககூடிய அளவுக்கு எமது நாட்டின் மீன்வளத்தை சூறையாடுகிறார்கள்.

இதனால், வடபகுதியில் கடந்த 20 ஆண்டு கால யுத்தத்தினால் கடலுக்கு செல்லமுடியாது வறுமையில் வாடிக்கொணடிருந்த எமது மீனவர்கள் தொடர்ந்தும் தங்கள் வருமானத்தை இழந்து அல்லல்படுகிறார் கள.

இந்தியாவும், தமிழ்நாடும் இலங்கை மீனவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமாயின் தமிழ்நாட்டு மீனவர்களின் இந்த அத்துமீறல் பிரவேசங்களை உடனடியாக தடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இருநாட்டு கடற்றொழிலாளர்களும் இப்பிரச்சினை குறித்து கூடிப் பேசித்தீர்த்துக் கொள்ளலாம் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒரு தடவை யோசனை கூறியிருந்ததை ஞாபகப்படுத்திய போது, பதிலளித்த அவர்,

இலங்கை சார்பில் எமது மீனவர் செல்வதற்கு பதில் பணத்தையே குறிக்கோளாகக்கொண்டு செயற்படும் ஒரு சர்வதேச அரசசார்பற்ற அமைப்பின் பிரதிநிதிகள் சென்று இந்தியாவுக்கு சாதகமானமுறையில் பேசி விடயத்தை குளறுபடி செய்துவிட்டார்கள் என்று கண்டனம் தெரிவித்தார்.

இலங்கை கடற்றொழிலாளர் கடலுக்கு செல்வதற்கு இருந்தத் தடைகள் அனைத்தும் இப்போது நீக்கப்பட்டுள்ளன. இனிமேல் அவர்கள் கடலுக்கு தங்கு தடையின்றி செல்வதற்கு எமது கடற்படையினர் அனுமதிபபார்கள் என்றும் அவர் கூறினார்.

# மோசமான விளையாட்டாக சித்தரிக்கப்படுகிறது கசினோ



## வருத்தம் கொள்கிறார் எஸ்.பி

(கொழும்பு)

கசினோ சூதாட்டத்தை ஓர் மோசமான விளையாட்டாக சிலர் சித்தரிப்பதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க வருத்தம் வெளியிட்டுள்ளார். கசினோ சூதாட்டம் ஓர் மோசமான விளையாட்டு கிடையாது எனவும் அது ஓர் நல்ல விளையாட்டு எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் ஆரம்பத்தில் அமெரிக்காவின் லாஸ் வேகாஸில் தாம் கசினோ சூதாட்டத்தில் ஈடுபட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இரண்டு அமெரிக்க டொலர்களை செலுத்தி தாம் சூதாடியதாகவும், சூதாட்ட மையத்தில் பணியாற்றிய பெண்கள் தம்மை 140 டொலர் வைத்து ஆடுமாறு கோரியதாகவும் குறிப்பிட்டுள்ளார். எனினும், பெண்களின் தூண்டுதலை கண்டுகொள்ளாது நிதானமாக ஆடியதாகத் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டவர்கள் அதிகளவு பணத்தை இதற்காக செலவிடுகின்றனர் எனவும் இது நாட்டுக்கு நன்மை ஏற்படுத்தும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கசினோ சூதாட்டத்தை எதிர்க்கவில்லை எனவும், உள்நாட்டுப் பிரஜைகள் கசினோ சூதாட்டத்தில் ஈடுபடுவதனை தேவையென்றால் தடைசெய்ய முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அமைச்சு நிதியை பயன்படுத்தி சஜின் வெளிநாடு செல்வதில்லை

## அமைச்சர் பீரிஸ் விளக்கமளிப்பு



(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சஜின் வாஸ் குணவர்தன வெளிநாட்டுப் பயணங்களுக்காக அமைச்சு நிதியை செலவிடுவதில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன் சஜின் வாஸ் குணவர்தன வெளிவிவகார அமைச்சின் சார்பிலான வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வதில்லை எனவும் அமைச்சர் கூறினார்.

இதனிடையே வெளிவிவகார அமைச்சின் சில அதிகாரிகளுக்கு எதிராக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் குறித்து ரவி கருணாநாயக்க அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

எனினும் அந்தக் குற்றச்சாட்டுக்களை அமைச்சர் பீரிஸ் மறுத்தார்.

இதேவேளை கென்யா பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை புறக்கணிக்க உள்ளதாக வெளியாகியுள்ள தகவல்கள் தவறானது என்றும் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அமைச்சர் தெரிவித்தார்.

# இந்தியப் பிரதமரின் பங்கேற்பு காங்கிரஸ் தலைவர்கள் எதிர்ப்பு

(சென்னை)

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளில் பங்கேற்பதற்கு காங்கிரஸ் தலைவர்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

தமிழக காங்கிரஸைச் சேர்ந்த பல முக்கிய தலைவர்கள் இந்திய பிரதமர், இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வில் பங்கேற்கக்கூடாது என கோரியுள்ளனர்.

மத்திய கப்பல்துறை அமைச்சர் ஜீ.கே.வாசன் அமர்வுகளில் பங்கேற்கக்கூடாது என கோரியிருந்தார். தமிழக காங்கிரஸின் முன்னாள் தலைவர் கே.வீ. தங்கபாலுவும் அமர்வுகளில் பங்கேறகக்கூடாது என கோரியுள்ளார்.

அமர்வுகளில் பங்கேற்கக் கூடாது எனக் கோரி கடிதமொன்றை ஏற்கனவே பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அமர்வுகளில் பங்கேற்கக் கூடாது எனக் கோரி மாநில அரசாங்கம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இலங்கைத் தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க இந்தியா அமர்வுகளில் பங்கேற்க வேண்டுமென கைத்தொழில் அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் கோரியுள்ளார்.



காரைநகர் மேம்பாட்டுக்கழகத்தினால் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த காரைநகர் கல்விக் கோட்ட மாணவர்களுக்கான கௌரவிப்பு அண்மையில் இடம்பெற்றது. இதில் தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ரீ.ஜோன் குயின்ரன்ஸ் உரையாற்றுவதையும், இலங்கை வங்கி காரைநகர் கிளை முகாமையாளர் வி. விஜயகுமார் மாணவனுக்கு பரிசில் வழங்குவதையும், கௌரவிக்கப்பட்ட மாணவர்களையும் காணலாம். (50)

# சமூகம் சார் அடையாளங்களை இலக்கியங்கள் பிரதிபலிக்கவேண்டும்

## -பருத்தித்துறை பிரதேச செயலர்-



(மானிப்பாய்)

காலத்தின் வரலாற்றையும் நடைமுறையில் இருக்கும் சமூக இனக் குழுமத்தின் வெளிப்பாடுகளையும் வெளிக்காட்டுகின்ற எழுத்தாக்கங்களே இலக்கியங்களாகும் என பருத்தித்துறை பிரதேச செயலரும் கவிஞருமான இ.த.ஜெயசீலன் தெரிவித்தார்.

கவிஞர் சமரபாகு சீனா உதயகுமாரின் ' என் பேனாவின் நிதர்சனம்' கவிதை நூல் வெளியீட்டு விழா யாழ். கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலையில் 'உயில்' ஏற்பாட்டுக் குழுவினரின் ஒழுங்கமைப்பில் அண்மையில் சிறப்புற நடைபெற்றது.

இந் நிகழ்வில் கவிதை நூலின் வெளியீட்டுரையின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கவிஞனின் அடிமன ஆழத்தில் இருக்கின்ற உணர்வுகளை எழுத்துக்கள் வெளிப்படுத்துகின்றன. இந்த நிலையில் சமரபாகு சீனா உதயகுமாரின் இலக்கிய வடிவம் என்பது புது வரலாற்றை எமக்கு வெளிப்படுத்தியுள்ளது.ஒரு இனக் குழுமத்தில் வாழும் மக்களது உணர்வுகளையும் அவர்கள் வாழுகின்ற தேசத்தில் கொண்டிருக்க வேண்டிய கலை பண்பாட்டு மொழி சமய அடையாளங்களை காலத்தின் பதிவுகளாக இலக்கியவாதி கொண்டு வரவேண்டும்

அந்த வகையில் இந்தக் காலத்தின் பதிவாக சமரபாகு சீனா உதயகுமார் தன் பணியினைச் சரிவரச் செய்துள்ளார் என நான் நினைக்கிறேன் எனத் தெரிவித்தார்.

இவ்வெளியீட்டு நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளருமான செ.கஜேந்திரன், வைத்திய கலாநிதி மா.பிரபாகரன், யாழ் பல்கலைக் கழக கணிதத்துறை விரிவுரையாளர் எம்.அனந்த கிருஷ்ணன், கவிஞர்கள் சு.குணேஸ்வரன், கவிஞர் வேல்நந்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (48)

# தரிசனத்திற்கு வாய்ப்பு

(திருநெல்வேலி)

குப்பிளான் சிவபூமி ஆசிரமத்தில் சித்தர்கள் யோகிகள் புகைப்படங்களைத் தரிசிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. நூற்றுக்கும் மேற்பட்ட இவர்களின் புகைப்படங்களைத் தரிசித்து, தியானத்தினால் வழிபாடு செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மன அமைதியை விரும்பும் பலர் தினமும் ஆசிரமத்துக்கு வருகை தந்து வழிபாடு செய்து வருகின்றனர்.

சனிக்கிழமைகளில் பஜனை கூட்டுப்பிரார்த்தனை நடைபெற்று தொடர்ந்து சகல அடியவர்களுக்கும் அன்னதானம் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (137)

# முரசின் இன்றைய பலன்



**(25.10.2013 வெள்ளிக்கிழமை)**

விஜய வருஷம் ஐப்பாசி மாதம் 08 ஆம் திகதி.
திருவாதிரை நட்சத்திரம் பி.ப 1.28 வரை பின் புனர்பூசம் ஷஷ்டி சித்தம்
இராகுகாலம 10.32- 12.02 வரை. சுபநேரம 06.02- 07.32 வரை.

**ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| மேடம் | அவசரபுத்தி மேலோங்கியதால் காரியத்தடை ஏற்படல், நோய் குணமடையும் நிலை கண்டு குதூகலம். |
| ரிஷபம் | விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படும் நிகழ்வில் பங்கேற்றல், வெளியூர் மணமக்கள் பற்றிய தகவல் கிட்டாமையினால் பதகளிப்பு. |
| மிதுனம் | வெகுமதிகள் கிடைப்பதற்கு சிபார்சு செய்யப்படல், ஒத்தி வைத்ததினால் நிலுவைப்பணம் வந்து சேராமை. |
| கடகம் | நேர்முகத் தேர்விற்கான கழதம் உரிய நேரத்தில் கிடைக்காமையால் அவதிப்படல், புகையிரதப்பிரயாணம் செய்வதில் மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படல். |
| சிம்மம் | வாய்த்தர்க்கம் ஏற்பட்டு கைகலப்பு வரை சென்றடைதல், தனியார் துறையை கைகழுவி அரசுத்துறையில் வேலை வாய்ப்பு பெறல். |
| கன்னி | விரிசலடைந்த மாமன் உறவில் ஒற்றுமை ஏற்படல், தனித்திருப்பதால் உளப்பாதிப்படைதல். |
| துலாம் | பாதுகாப்பு அங்கி அணியாமையினால் நடவடிக்கை எடுத்தல், காணாமல் போனவர் உயிருடன் உள்ளார் என்றறிந்ததில் மகிழ்ச்சி. |
| விருச்சிகம் | வேகக்கட்டுப்பாட்டு இழப்பினால் அனர்த்தம் உருவாதல், படுக்கையில் காணாக்கழி ஏற்பட்டு வருந்துதல். |
| தனுசு | வெளியூர் பயணம் பற்றிய சுபசெய்தி கிடைத்தல், புதிய மனை அமைக்க இடம் எடுக்கும் யோசனை. |
| மகரம் | வரன் தேழ அலைந்து வெற்றிக்கொழ நாட்டல், வெளியூரிலிருந்த உறவுகள் வருகை தரல். |
| கும்பம் | பரீட்சை சித்தியினால் தொழில் கிடைக்கச் சந்தர்ப்பம் ஏற்படல், மின் ஒழுக்கில் கவனம் எடுத்ததால் அபாயம் விலகல். |
| மீனம் | புதிருக்கு விடை கண்டதால் பிரச்சினை விலகல். தனிவழி சென்று அவதிப்பட்ட நேரம்நண்பர் உதவி. |

# பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் விசேட பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை இடம் பெறவுள்ளது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் காலை 10 மணிக்கு சமாசத் தலைவர் செ.இலகுநாதன் தலைமையில் இக்கூட்டம் இடம்பெறும்.

இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு சமாசத்தில் அங்கம் வகிக்கும் கூட்டுறவுச் சங் கங்களின் தலைவர் செயலாளர்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# மண்டைதீவில் நிறைவடையும் இந்திய வீட்டுத்திட்ட பணிகள்

(யாழ்ப்பாணம்)

நிர்மாணிக்கப்பட்டு வரும் மண்டைதீவுப்பகுதியில் இந்திய வீட்டுத்திட்டவீடுகளின் பெரும் பகுதி கூரை வேலையை எட்டிய நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மண்டைதீவுப்பகுதியில் இந்த வருட முற்பகுதியில் இந்திய வீட்டுத்திட்டத்தின்கீழ் சுமார் 200இற்கும் மேற்பட்ட வீடுகள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இவற்றில் ஆறு மாதகாலப்பகுதியில் நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்த பயனாளிகளின் இரண்டு வீடுகள் அவர்களிடம் கையளிக்கப்பட்டிருந்தது. இதனைத் தொடர்ந்து மிகுதியான வீடுகளில் பெரும் பகுதி வீடுகளின் கூரை வேலையின் தற்சமயம் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கூரை வேலைக்கான மரம், ஓடு என்பனவற்றைப்பெறுவதில் பயனாளிகள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கியிருப்பதுடன் மழை மற்றும் குறித்த கிராமத்தின் பிரதான வழியும் கடுமையான சேதத்திற்குள்ளாகியிருப்பதாகவும் பயனாளிகள் தரப்பில் தாமதங்களை உண்டுபண்ணியிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (பா)

# வேலணை மத்திய கல்லூரியின் சிலை திறப்பும் பரிசளிப்பு விழாவும்

(வேலணை)

வேலணை மத்திய கல்லூரியின் கல்லூரித்தினவிழாவும் மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை. கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள சேர் வைத்தியலிங்கம் துரைச்சாமி ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மத்திய கல்லூரியின் முதல்வர் சி. கிருபாகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாக்களில் கல்லூரியின் பழைய மாணவியும் தற்போது யாழ் கச்சேரியில் திட்டப்பணிப்பாளராக கடமையாற்றி வருகின்ற திருமதி இரஞ் சிதமலர் மோகனேஸ்வரன் கௌரவ விருந்தினராகவும் ஏற்கனவே இக்கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றி இளைப்பாறிச் சென்றுள்ள திருமதி அழகரத்தினம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பிக்கவுள்ளார்கள்.

அன்றையதினம் கல்லூரியில் சிறந்த பெறுபேறுகளை சித்தியடைந்த மற்றும் பல்கலைக் கழகங்களுக்கு தெரிவு செய்யப் பட்டுள்ள மாணவர்களுக்கும் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

இந்நிகழ்வில் கல்லூரியில் புதிதாக கட்டப்பட்டுள்ள சுற்று மதில் கல்லூரியின் வளைவு, மற்றும் கல்லூரி வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள சரஸ்வதி சிலை ஆகியன திறந்து வைக்கப்படவுள்ளது.

இதில் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் வடமாகாணகல்வி அமைச்சர் த.குருகுலராசா ஆகியோர் கலந்து கொண்டு இவற்றைத் திறந்து வைக்கவுள்ளனர். (05)



# சமநிலை

(மிலன்)

பார்சிலோனா, மிலன் அணிகள் மோதிய ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரின் லீக் போட்டி சம நிலையானது.

ஐரோப்பிய நாடுகளில் உள்ள கிளப் அணிகளுக்கு இடையில் சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடர் நடைபெற்று வருகின்றது. இதன் எச் பிரிவில் நடந்த லீக் போட்டியில் பார்சிலோனா, மிலன் அணிகள் மோதின. இதன் முதல் பாதியின் 9ஆவது நிமிடத்தில் மிலன் அணியின் றொபின்கோ ஒரு கோல் அடித்தார். இதற்கு, பார்சிலோனா அணியினரால் பதிலடி கொடுக்க முடியவில்லை. விறுவிறுப்பான, இரண்டாவது பாதியில் பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரர் மெஸ்சி (23ஆவது நிமிடம்) ஒரு கோல் அடித்து கைகொடுத்தார். முடிவில் போட்டி 1-1 என சமநிலையானது.

# தடை வருமா?

குறுந்தூர ஓட்ட சாதனை வீரர் உசைன் போல்ட், ஒலிம்பிக் போன்ற சர்வதேச போட்டிகளில் இருந்து தடை விதிக்கப்படும் அச்சம் ஏற்பட்டுள்ளது.

போதைப் பொருள் மற்றும் ஊக்க மருந்து சத்து குறித்து சர்ச்சைகளை கையாள்வதில், ஜமேக்கா காட்டுகின்ற பின்னடைவே இதற்கான காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

உலக ஊக்கமருந்து தடை நிறுவனத்தின் தலைவர் ஜோன் பாஹி இதனைத் தெரிவித்துள்ளார்.

# விஸ்டன் சஞ்சிகையின் சிறந்த டெஸ்ட் வீரர்கள்

கிரிக்கெட்டின் பைபிள் என்று அழைக்கப்படும் விஸ்டன் பத்திரிகை தொடங்கப்பட்டு 150ஆவது ஆண்டில் அடியெடுத்து வைப்பதையொட்டி டெஸ்ட் போட்டியில் சிறந்த 11 வீரர்களை தேர்வு செய்து பட்டியலிட்டுள்ளது. கடந்த 136 ஆண்டுகளில் இதுவரை 2098 சர்வதேச டெஸ்ட் போட்டிகள் நடந்துள்ளன.ஒட்டுமொத்த அளவில் அலசி ஆராய்ந்து, அதில் தெரிந்தெடுக்கப்பட்டுள்ள பட்டியலில்ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கருக்கு இடம் வழங்கப்பட்டுள்ளது. 40 வயதான டெண்டுல்கர் 200ஆவதுடெஸ்டுடன் விடைபெறும் வேளையில் அவருக்கு இந்த கௌரவம் கிடைத்துள்ளது. அதே சமயம் பிரையன் லாரா, ரிக்கி பொண்டிங், கலிஸ், சுனில் கவாஸ்கர், கபில்தேவ், முத்தையா முரளிதரன் போன்றவர்களுக்கு அணியில் இடமில்லை.

விஸ்டன் அறிவித்துள்ள உலக டெஸ்ட் லெவன் அணிக்கு பிரட்மன் கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். அந்த கௌரவ அணி வருமாறு: மிஜேக் ஹோப்ஸ் (இங்கிலாந்து), டபிள்யூ.ஜி.கிரேஸ் (இங்கிலாந்து), பிரட்மன் (அவுஸ்ரேலியா, கப்டன்), சச்சின் டெண்டுல்கர் (இந்தியா), விவியன் ரிச்சர்ட்ஸ் (மே.தீவுகள்), கேரி சோபர்ஸ் (மே.தீவுகள்), ஆலன் கினோட் (இங்கிலாந்து), வசிம் அக்ரம் (பாகிஸ்தான்), ஷேன் வோர்ன் (அவுஸ்ரேலியா), மல்கம் மார்ஷல் (மே.தீவுகள்), சிட்னி பார்னெஸ் (இங்கிலாந்து).




# முன்னேற்றம்

(பசல்)

சுவிஸ் ஓப்பன் ரென்னிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு, சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் முன்னேறினார்.

சுவிட்சர்லாந்தில் உள்ள பசல் நகரில், சுவிஸ் ஓப்பன் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகின்றது. இதன் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில், சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், உஸ்பெகிஸ்தானின் ரென்னிஸ் இஸ்டோமினை எதிர்கொண்டார். முதல் செட்டை 4-6 என இழந்த பெடரர், இரண்டாவது செட்டை 6-3 என கைப்பற்றி பதிலடி கொடுத்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட்டில் மீண்டும் அசத்திய பெடரர் 6-2 என தன்வசப்படுத்தினார். இறுதியில் பெடரர் 4-6, 6-3, 6-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று, காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில், குரோஷியாவின் இவான் தோடிக், ஜப்பானின் கெய் நிஷிகோரியை சந்தித்தார். அபாரமாக ஆடிய தோடிக் 6-1, 6-2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, காலிறுதிக்கு தகுதி பெற்றார்.



# நன்றிகள் பலகோடி

(மும்பை)

மும்பையில் நடந்த தனியார் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற டெண்டுல்கர் தனக்கு ஆதரவு அளித்த இலட்சக்கணக்கான இரசிகர்களுக்கு நெகிழ்ச்சியுடன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

இது குறித்து அவர் கூறியதாவது: கடந்த 24 ஆண்டுகளாக எனக்கு ஆதரவு அளித்த இரசிகர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்காக வாழ்த்துத் தெரிவித்த இந்திய இதயத்தின் அடித்தளத்தில் இருந்து நன்றியை கூறுகிறேன். எவ்வளவு வேண்டுமானாலும் நன்றியைத் தெரிவிக்கலாம்.

எனது 200ஆவது டெஸ்ட் போட்டி காணும் அவலில் இரசிகர்கள் உள்ளனர். கிரிக்கெட்டால் தான் நான் 'இந்த அளவுக்கு அனைவராலும் பாராட்டப்படுகிறேன். இந்தியாவின் எந்தப் பகுதிக்கு நான் சென்றாலும் வாழ்த்துகிறார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# சமநிலையை நோக்கி டாக்கா டெஸ்ட்

(டாக்கா)

நியூசிலாந்து, பங்களாதேஷ் அணிக்கிடையிலான டாக்கா டெஸ்ட் போட்டி சமநிலை முடிவை நோக்கி பயணிக்கின்றது.

நியூசிலாந்து, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி டாக்காவில் நடைபெற்று வருகின்றது. இதில் முதல் இனிங்ஸிற்காக ஆடிய நியூசிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 437 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அண்டர்சன் 116, வைற்லிங் 70, ரெய்லர் 53, வில்லியம்ஸன் 62 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சகிப் அல் ஹசன் ஐந்து, அப்துர் ரஹ்மான் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

155 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிவரும் பங்களாதேஷ் நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, மூன்று விக்கெட்டுக்களை இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் மொமினுல் ஹக் 126, சகிப் அல் ஹசன் 32 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காதுள்ளனர். மற்றும் தமிம் இக்பால் 70 ஓட்டங்களைப் பெற்றார். ஏழு விக்கெட்டுகள் கைவசமுள்ள நிலையில்பங் களாதேஷ் அணி 114 ஓட்டங்களால் முன்னிலையில் உள்ளது. இன்று இறுதி நாளாகும். பங்களாதேஷ் முதல் இனிங்ஸ் 282.

# பலமான நிலையில் தென்னாபிரிக்கா

(டுபாய்)

ஸ்மித், டிவில்லியர்ஸ் ஆகியோரின் சதத்தின் மூலம் தென்னாபிரிக்க அணி பலமான நிலையைப் பெற்றுள்ளது. பாகிஸ்தான், தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி டுபாயில் நடைபெற்று வருகின்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய பாகிஸ்தான் அணி இம்ரான் தாஹிரின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் சுருண்டது. இறுதியில் பாகிஸ்தான் அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 99 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மோசஸ் 21, அசார் அலி 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் இம்ரான் தாஹிர் ஐந்து, ஸ்ரெயன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிவரும் தென்னாபிரிக்க அணி ஸ்மித், டிவில்லியர்ஸ் ஆகியோரின் சதத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுள்ளது. நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் இரண்டாவது பகுதிக்காக நிறுத்தப்பட்டவேளை, தென்னாபிரிக்கஅணி நான்கு விக்கெட்டுக்களை இழந்து 343 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் கப்டன் ஸ்மித் 171 (27ஆவது சதம்), டிவில்லியர்ஸ் 101 (17 சதம்) ஆட்டமிழக்காதுள்ளனர். பந்து வீச்சில் சயிட் அஜ்மல் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். ஆறு விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் தென்னாபிரிக்க அணி 246 ஓட்டங்களால் முன்னிலையிலுள்ளது. முதல் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி ஏழு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது.



# சிக்ஸர்கள் விளாசல்

(ரஞ்சி)


அவுஸ்ரேலிய கப்டன் ஜோர்ஜ் பெய்லி இந்திய அணியுடன் இடம்பெற்று வரும் ஒரு நாள் போட்டித் தொடரில் இதுவரை 3 அரைச்சதம் உட்பட 318 ஓட்டங்கள் (4 ஆட்டம்) குவித்துள்ளார். இந்தியாவுக்கு எதிரான ஒரு நாள் தொடர் ஒன்றில் அவுஸ்ரேலிய கப்டன் சேர்த்த அதிகபட்ச ஓட்டங்கள் இதுவாகும். இதற்கு முன்பு 2009ஆம் ஆண்டு நடந்த இந்தியாவுக்கு எதிரான ஒரு நாள் தொடரில் ரிக்கி பொண்டிங் 267 ஓட்டங்கள் (6 ஆட்டம்) எடுத்ததே அவுஸ்ரேலிய கப்டனின் சிறப்பான செயற்பாடாகும். இந்தத் தொடரில் அவுஸ்ரேலியா இதுவரை 38 சிக்ஸர்கள் விளாசியுள்ளது. இரு நாடுகளுக்கிடையிலான ஒரு நாள் தொடரில் அந்த அணி அடித்த அதிகபட்ச சிக்ஸர் எண்ணிக்கை இது தான்.

# டோனியின் சாதனை

டோனி 146 ஒருநாள் போட்டிக்கு கப்டனாக பணி புரிந்துள்ளார். அவுஸ்ரேலிய அணிக்கெதிரான நான்காவது ஆட்டம் 146ஆவது போட்டியாகும். இதன்மூலம் இந்திய அணிக்கு கப்டனாக 2ஆவது இடத்தில் இருந்த கங்குலியை சமன் செய்தார். டோனி 146 ஆட்டத்தில் 84 வெற்றியை பெற்றுள்ளார். 50 ஆட்டத்தில் தோல்வி ஏற்பட்டது. 3 ஆட்டம் சமநிலையானது. 9 ஆட்டம் முடிவு இல்லை. கங்குலி தலைமையில் 146 போட்டியில் 76 ஆட்டத்தில் வெற்றி கிடைத்தது. 65 ஆட்டத்தில் தோல்வி ஏற்பட்டது. 5 ஆட்டம் முடிவு இல்லை. அசாருதீன் தான் அதிக ஒருநாள் போட்டிக்கு இந்திய அணியின் கப்டனாக பணிபுரிந்துள்ளார். அவர் 174 போட்டிக்கு (90 வெற்றி, 76 தோல்வி, 2 சமநிலை, 6 முடிவு இல்லை) கப்டனாக இருந்துள்ளார். 1990-1999 வரை அசாருதீன் கப்டனாக இருந்தார்.



# அனஸ்ராஜ், மதுஷன் சிறப்பாட்டம் யாழ். மத்தி இனிங்ஸ் வெற்றி



அனஸ்ராஜ்



மதுஷன்

(யாழ்ப்பாணம்)

அனஸ்ராஜ், மதுஷன் ஆகியோரின் சிறப்பான செயற்பாட்டின் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி இனிங்ஸ் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இனிங்ஸ் போட்டி கடந்த 11ஆம் திகதி சென். ஜோண்ஸ் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய சென். ஜோண்ஸ் கல்லூரி பி அணி, அனஸ்ராஜின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் ஜெனற்றன், யதுஷன் ஆகியோர் பொறுமையாக ஆடினர். இறுதியில் சென். ஜோண்ஸ் கல்லூரி பி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெனற்றன் 23, யதுஷன் 08 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அனஸ்ராஜ் 13 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து, இயலரசன் மூன்று, மதுஷன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி மதுஷன், நிதர்சன் ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக எட்டு விக்கெட்டுக்களை இழந்து 223 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. இதில் மதுஷன் 25 பந்துகளை எதிர்கொண்டு ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 44, நிதர்சன் 31, ராஜ்கிளிங்ரன் 22, நிலோஜன் 25, ஜெயதர்சன் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சர்மா மூன்று, லோஜிதன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

175 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய சென். ஜோண்ஸ் கல்லூரி அணி மதுஷனின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறியதுடன் ஒரு முனையில் விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. மறுமுனையில் இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க பிரணவன் இறுதி வரை போராடினார். அவருக்குத் துணையாக எந்தவொரு வீரரும் நிலைத்திருக்காத நிலையில் சென். ஜோண்ஸ் அணி தோல்வியைத் தழுவியது. இறுதியில் சென். ஜோண்ஸ் அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 97 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரணவன் ஆட்டமிழக்காது 48, யதுஷன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மதுஷன் 34 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு, அனஸ்ராஜ் 29 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி இனிங்ஸ் மற்றும் 68 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

(எஸ்.பி.)

## தொடரை வெல்ல அதிக வாய்ப்பு

இந்திய அணியுடனான ஒரு நாள் தொடரை வெல்லக் கூடிய அதிக வாய்ப்பு அவுஸ்ரேலிய அணிக்கு இருப்பதாக அவ்வணியின் முன்னாள் கப்டன் ஸ்ரீவோ தெரிவித்துள்ளார்.

முதல் மூன்று போட்டிகளிலும் இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருக்கின்றன. ஆனால், இப்போட்டித் தொடரில் இரு அணிகளின் துடுப்பாட்ட வரிசை பலம்வாய்ந்ததாக இருக்கின்றன. ஆனால், ஆஸி. அணியைப் பொறுத்த வரையில் பந்து வீச்சில் இந்திய அணியைவிட பலமான நிலையில் உள்ளது. இந்த வகையில் இந்த வாய்ப்பை பயன்படுத்தி ஒரு நாள் தொடரைக் கைப்பற்றிக் கொள்ள முடியும். குறிப்பாக, கப்டன் பெய்லி சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றார். அவருடைய அணுகுமுறை முதிர்ச்சி மிக்கதாக இருக்கின்றது. அத்துடன் இத் தொடர் எதிர்வரும் ஆஷஸ் தொடருக்கான சிறந்த பயிற்சிக் களமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, அணி வீரர்கள் ஒற்றுமையாக ஆடுகின்றனர். இதேபோன்று ஆஷஸ் தொடரிலும் ஒருங்கிணைந்து ஆடி இங்கிலாந்து அணிக்குப் பதிலடி கொடுக்க வேண்டும் எனவு அவர் மேலும் தெரிவித்தார்.

# கிண்ணம் வென்றது மகாஜன



(தெல்லிப்பளை)

அமரர் ஜெயரத்தினத்தின் நூறாவது பிறந்த நாளை முன்னிட்டு நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் ஜெயரத்தினத்தின் 100ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு அழைக்கப்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டி கடந்த வாரம் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் பெண்கள் பிரிவின் இறுதிப் போட்டிக்கு தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணியும், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மோதின. மூன்று சுற்றுக்களைக் கொண்டதாக இப்போட்டி இடம்பெற்றது.

இரு அணிகளும் சமபலம் கொண்ட அணிகளாகக் காணப்பட்டபோதிலும் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி அணியே ஆதிக்கம் செலுத்தியது. சிறப்பான முறையில் செயற்பட்ட மகாஜனக் கல்லூரி அணி 25-23, 25-09 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இதேவேளை, ஆண்கள் பிரிவில் புத்தூர் சோமஸ்கந்தா, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியை வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இப்பிரிவின் மூன்றாமிடத்தை வயாவிளான் மத்திய மகாவித்தியாலய அணி கைப்பற்றிக்கொண்டது. இப்போட்டி நிகழ்வில் பாடசாலைச் சமூகத்தைச் சேர்ந்த உயர்அதிகாரிகள், அதிபர்கள், பொறுப்பாசிரியர்கள், பயிற்றுநர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(93)

## சூடுபிடிக்கும் கால்பந்து

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளுக்கிடையிலான சிநேக பூர்வ கால்பந்தாட்டப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இதில் 15, 17, 19, 21 ஆகிய வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் இப்போட்டிகள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, கோட்ட மட்டப் போட்டிகள் தற்போது ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இதில் யாழ்ப்பாணக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் நிறைவடைந்துள்ளது. அத்துடன் உடுவில் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டிகள் நேற்று முன்தினம் முதல் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மூன்றாம் தவணை நிறைவடையும் வரை கால்பந்துப் போட்டிகள் தொடர்ந்து இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



கரவெட்டி நவசக்தி விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட ஆண்டு நினைவுக் கால்பந்தாட்டத் தொடரில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட மயிலங்காடு ஞானமுருகன் அணியைக் காணலாம். பொம்மர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இப்போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் கிண்ணம் வென்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ்த் தீவிரவாதத்தின் கை ஓங்குவதை எதிர்பார்க்கும் தெற்கு இனவாதிகள்

- எம்.எஸ்.எம். ஐயூப் கட்டுரையிலிருந்து.

**தெ**ற்கில் பலர் வட மாகாண சபையின் தற்போதைய போக்கை முதிர்ந்த அரசியல் என்றே வர்ணிக்கிறார்கள். வட மாகாண சபையில் நடைபெறும் விடயங்களில் தெற்கில் சில கடும் போக்காளர்கள் வாயடைத்துப் போயுள்ளனர். அவர்களுக்கு கூச்சலிட இது வரை ஒரே ஒரு சந்தர்ப்பம் தான் கிடைத்தது. அது தான் முதலமைச்சர் விக்னேஸ்வரன் இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தை சந்தித்த கூட்டத்தின் போது தேசிய கொடி ஏற்றாமல் இருந்த சம்பவம்.


அதன் பின்னர் வடக்கில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் கலந்து கொண்டு நடைபெற்ற பல வைபவங்களின் போது தேசிய கொடி ஏற்றப்பட்டு இருந்தமையினால் அந்த விமர்சனமும் தெற்கில் அவ்வளவாக எடுபடவில்லை. இலங்கை கடலுக்குள் அத்து மீறி வரும் தென் இந்திய மீனவர்களை தாம் எதிரிகளாக கருதவில்லை என்று வட மாகாண கடற்றொழில் அமைச்சர் கூறியதாக வெளியான செய்தியொன்றை பெரிதுபடுத்த விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணியின் ஊடகப் பேச்சாளர் முஹம்மத் முஸம்மில் எடுத்த முயற்சியும் பிசுபிசுத்துப் போய்விட்டது.

ஆனால், வடக்கில் சகலதும் சுமுகமாகவும் பரிபூரணமாகவும் நடைபெறவில்லை என்பதையும் தெற்கில் மக்கள் அறிந்துள்ளனர்.

வடக்கில் கடும் போக்காளர்களுக்கும் மிதவாதிகளுக்கும் இடையே தீவிர முறுகல் நிலை இருப் பதும் அவர்களுக்குத் தெரியும். அவர்களில் இனவாத போக்குள்ள சிலர் இந்த முறுகல் வளர வேண்டும் என்றும் பிரார்த்திக்கிறார்கள். விந்தை என்னவென்றால் இந்த முறுகலின் போது தீவிரவாதிகளின் கை ஓங்க வேண்டும் என்றே அவர்கள் நினைக்கிறார்கள் ஏனெனில் அப்போது தான் அவர்களுக்கு பிழைப்புக்கான தீனி கிடைக்கும்.

இருந்த போதிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைமை கடும் போக்காளர்களினதும் வடக்கின் யதார்த்தத்திற்கும் இடையே அகப்பட்டுக் கொண்டு இருப்பதையும் அவதானிக்க முடிகிறது. முதலமைச்சர் வேட்பாளரை தெரிவுசெய்தல், முதலமைச்சின் சத்தியப்பிரமாணம், மாகாண அமைச்சரவையை தெரிவு செய்தல், மாகாண சபை உறுப்பினர்களின் சத்தியப் பிரமாணம் போன்ற விடயங்களின் போது ஏற்பட்ட நிலைமைகள் இந்த கடும் போக்கு - மிதவாத மோதலையே எடுத்துக் காட்டுகிறது.

சிங்கள சமூகத்தை அறிந்த அச் சமூகத்தோடு பழகிய ஒருவர் என்ற முறையில் முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் விக்னேஸ்வரன் அப் பதவியை ஏற்றமை வட மாகாண சபை மத்திய அரசாங்கத்தோடு கடமையாற்றுவதற்கு வசதியாக அமையும் என்று ஊகிக்கலாம். மரபு ரீதியான தமிழ் தலைவர் ஒருவர் அப் பதவியை ஏற்றிருந்தால் இப்போதே மத்திய அரசாங்கத்தோடு முரண்பாடுகளும் மோதல்களும் தோன்றியிருக்கலாம்.



வடமாகாண முதலமைச்சர் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்தமை தெற்கில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. வட பகுதி அரசியல்வாதிகள் எடுத்தற்கெல்லாம் அரசாங்கத்திற்கு எதிராக பேசுவதும் செயற்படுவதும் வழமையாகிவிட்ட நிலையில் விக்னேஸ்வரன் தமது கட்சித் தலைவர் முன்னிலையில் அல்லது ஜனாதிபதி அல்லாத வேறு ஒருவர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்வார் என்றே தெற்கில் பலர் நினைத்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய வடமாகாண அமைச்சரவையை நியமித்த போதும் தெற்கில் பலருக்கு அது நம்ப முடியாத விடயமாகியது. ஒரு கூட்டணி ஆட்சி அமைத்தால் அனேகமாக கூட்டணியின் உறுப்புக் கட்சிகளின் தலைவர்களின் விருப்பத்திற்கு ஏற்பவே அமைச்சர் பதவிகள் வழங்கப்படும். அதேவேளை சிவாஜிலிங்கம், சித்தார்த்தன் மற்றும் ஆனந்தி போன்ற பிரபலமானவர்களே பதவிகளை பெற்றுக்கொள்ளக் கூடும்.

ஆனால் திறமையானவர்களே அமைச்சுப் பதவிகளுக்கு நியமிக்கப்படுவர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கூறியதாக செய்திகள் கூறின. அது உண்மையா என்பது காலம் போகப் போகத் தான் தெரிய வரும்.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் தமக்குரிய அமைச்சுக்களை பொறுப்பு பேற்கும் போதும் ஜனாதிபதியின் முன்னிலையிலேயே பதவிப் பிரமாணம் செய்தார்.

வடமாகாண சபை உறுப்பினர்களுக்கு மாகாண சபை முறையைப் பற்றியும் மாகாண சபை அதிகாரங்களைப் பற்றியும் செயலமர்வொன்றை நடத்த வேண்டும் என்று வடமாகாண சபை தமது ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெற்கில் எந்தவொரு மாகாண சபையும் இது போன்றதோர் கோரிக்கையை இது கால வரையும் விடுத்ததில்லையென்றும் நிதி ஆணைக்குழுவின் தலைவர் ஆரியரத்ன ஹேவகே கூறியிருக்கிறார்.

இவ்வாறு வட மாகாண சபையின் புதிய நிர்வாகம் தென் பகுதி அரசியல் மீது ஒரு வித தாக்கத்தை ஏற்படுத்தி வந்த போதிலும் தமிழ் அரசியலில் காணப்படும் தீவிரவாதத்தின் கை ஓங்கினால் இந்த நிலைமை மாறும் என்பதும் தென்பகுதி அரசியல்வாதிகளுக்குத் தெரியும். உண்மையிலேயே வடக்கில் தற்போது காணப்படும் அரசியல் பக்குவம் திவிரவாதத்தின் கை ஓங்கினால் காணாமற் போய்விடும் தான். அந்த நிலைமையை உருவாக்க தென்பகுதி அரசியல்வாதிகள் மாகாண சபை நிர்வாகத்தை அசௌகரியத்திற்குள்ளாக்கும் வகையில் செயற்படவும் கூடும்.

---

# இங்கே... இப்படி...!

◗ பூமத்திய ரேகைக்கு அருகிலிருக்கும் பகுதிகள் மிக அதிகமாக மின்னலால் பாதிக்கப்படும். இவ்வகையில் உலகிலேயே மிக அதிகமாக மின்னல்களால் தாக்கப்படும் நாடு “பனாமா”தான். இந்நாடு, சராசரியாக ஆண்டுக்கு 200 நாட்கள் மின்னல்களால் பாதிக்கப்படுகிறது. இதனால் இதை “மின்னல் நாடு” என்று அழைக்கிறார்கள்.

◗ பார்சி இனத்தவர்கள் இறந்தவர்களின் உடலை எரிக்கவோ புதைக்கவோ மாட்டார்கள். கழுகுகள் தின்னும்படி “மௌன கோபுரம்” என்றழைக்கப்படும் மிக உயர்ந்த கட்டடத்தின் உச்சியில் இறந்தவர்களது உடல்களை வைத்து விடுகிறார்கள். இந்தச் செய்கையை “டஹமா” என்றழைக்கிறார்கள்.

◗ பெல்ஜியம் சொக்ளேற்களுக்கு பேர் போன நாடு. அங்கு கறுப்பு சொக்ளேற் மாத்திரைகள் விற்பனைக்கு வருகின்றன. அவற்றை எடுத்து தினமும் ஒரு மாத்திரையை வாயில் போட்டால்.. நம்மிடம் டாக்டர் நெருங்கவே மாட்டார் என்கின்றனர் பெல்ஜியர்கள்.


◗ காளைகளுக்கு இடையே நடைபெறும் சண்டை தெரியும். சேவல் சண்டை தெரியும். மீன் சண்டை தெரியுமா? வியட்நாம், மலாய், லாவோஸ், கம்போடியா நாடுகளில் இன்றும் மீன் சண்டை நடத்தும் வழக்கம் இருக்கிறது.

கிரிக்கெட் எனப்படும் வண்டுகளைக் கொண்டு சண்டை நடத்தி ரசித்து மகிழ்கிறார்கள் சீனர்கள்.

ஒட்டகச் சண்டை அமெரிக்காவின் டெக்ஸாஸிலும் ஆப்கானிஸ்தானிலும் நடக்கின்றது.

◗ சென்னை கன்னிமாரா நூலகத்தில் பழமையான பல நூல்கள் இருக்கின்றன. 1608ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பைபிள் அங்கே இருக்கின்றது. நரிக்குறவர் மொழியான “வாக்ரிபோலி”யில் உள்ள திருக்குறள் இருக்கிறது. நம்மிடம் உள்ள பழமையான நூல்களைக் கொடுத்தால், குறுந்தகடுகளில் அவற்றைப் பதிவு செய்து கொண்டு, புத்தகத்துடன் குறுந்தகடும் ஒரு பிரதி நமக்குக் கொடுப்பார்கள் கன்னிமாரா நூலகத்தினர்.


◗ நம் ஊரில் புடலங்காய் சுருண்டு விடாமல் இருக்க அதன் கீழ் முனையில் கல்லைக் கட்டித் தொங்க விடுவது போல, ஜப்பான் நாட்டில் தர்பூசணிக் காய்களை வளர்க்கிறார்கள். காய் சின்னதாக இருக்கும்போதே, விரியும் தன்மையுடைய மெல்லிய டப்பாக்களை காய்களுடன் பொருத்தி விடுகிறார்கள். காய் பெரிதாக ஆகும்போது அது இருக்கும் டப்பா மாதிரியே சதுரமாக வளர்கிறது. இதனால் டப்பாக்களை அடுக்குவது போல தர்பூசணிகளையும் அடுக்கி ஏற்றுமதி செய்வது எளிதாக இருக்கின்றது.













◗ ஜப்பானியர்கள் இரத்தம் எந்த வகை என்பதை வைத்தும் ஜோதிடம் சொல்கிறார்கள்.

“A” வகையினர்: எளிதில் நம்பிக்கை வைக்காதவர்கள்.

“B” வகையினர்: எளிதில் பணிய முன் வராதவர்கள்.

“AB” வகையினர்: எளிதில் பகைத்துக் கொள்ளாதவர்கள்.

“O” வகையினர்: எளிதில் உண்மையை இனம் காண்பவர்கள்.



## கொட்டாவி, ஏப்பம், விக்கல்?

• நமக்கு களைப்பு ஏற்படும்போது, மூளை சோர்வு அடையும்போது அதனை அறிவிக்கும் செயலே கொட்டாவி ஆகும்.

• நாம் உண்ணும் உணவில் மேலதிகமான புரதப் பொருள் இருந்தாலும் புளிப்புப் பொருள்கள் இருந்தாலும் இவற்றைச் சிதைக்கும்போது ஏற்படும் வாயு ஏப்பமாக வெளிவருகிறது.

• உதரவிதானம் சரிவர சுருங்கி, விரிந்து செய்ல்பட முடியாதபோது ஏற்படும் சுவாசச் சிக்கலே விக்கலாக மாறுகிறது.

• உணவுப் பாதையில் செல்ல வேண்டிய உணவுத் துணுக்குகள் சுவாசப் பாதையில், பாதை மாறி நுழையும்போது புரை ஏறுதல் நிகழ்கிறது.

# இயக்குனர் வெற்றிமாறனுக்கு ஒரு கடிதம்...






நான் உங்களுடைய திரைப்படங்களை பெரிதும் கொண்டாடுபவன் என்பதை உங்களிடமே சொல்லியிருக்கிறேன். தமிழின் சமகால இலக்கிய வாதிகளுடன் நட்பும், சமகால இலக்கியப் பரிச்சயமும் உள்ளவர் நீங்கள் என்பது பலருக்கும் தெரியாது. இந்த நிலையில் சீன எழுத்தாளர் Jiang Rong எழுதிய Wolf Totem என்ற நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பில் பெரிதும் ஆர்வம் காண்பித்து, நண்பர் சி. மோகன் மொழி பெயர்ப்பில் அது வெளிவரவும் காரணமாக இருந்தீர்கள் என்று அறிந்தேன். வுல்ஃப் டோட்டம் ஒரு கோடி பிரதிகள் சீனாவில் விற்றிருக்கிறது. அதை 500 பேர் மட்டுமே படிக்கும் வாசகப் பரப்பைக் கொண்ட தமிழில் மொழிபெயர்ப்பதில் உள்ள ஆர்வம் எனக்குப் புரியவில்லை. மேலும், அந்த நாவல் ஆங்கிலத்தில் பொடி எழுத்திலேயே 700 பக்கம் வருகிறது. போகட்டும். இது ஒவ்வொருவரின் தனிப்பட்ட விருப்பம். இது பற்றிக் கருத்துச் சொல்ல எனக்கு உரிமை இல்லை. ஆனால் இந்த நாவல் ஃபாஸிஸத்தைக் கொண்டாடும் நாவல். ஹிட்லர் பற்றி எத்தனையோ புத்தகங்கள் வந்துள்ளன. ஆனால் ஹிட்லரின் ஃபாஸிஸத்தை ஆதரித்து வரும் நூல்களை யாரும் சீந்துவதில்லை. இந்த ஓநாய் குலச் சின்னம் என்ற நாவல் ஃபாஸிஸத்தைக் கொண்டாடுகிறது. இந்த உலகின் ஒட்டு மொத்த சரித்திரத்தையே மங்கோலியர்கள் தான் மாற்றி அமைத்தார்கள் அதற்கு ஓநாய் தான் காரணம் என்கிறது இந்த நாவல். மங்கோலியர்கள் வேட்டைக்காரர்கள் அதனால் புத்திசாலிகள்; சீனர்கள் விவசாயிகள் அதனால் மூடர்கள். அதனால்தான் சீனர்களை மங்கோலியரும் ஜப்பானியரும் ஆண்டனர். ஏன், உலகம் முழுவதுமே விவசாயிகள் மூடர்கள் தான் என்கிறது இந்த நாவல். அந்தக் கோட்பாட்டின் படி பார்த்தால் இந்தியர்கள் அனைவருமே மூடர்கள் என்று ஆகிறது. இது படுபயங்கரமான இனவாதம் அல்லவா? wolf totem is undoubtedly a fascist and racist novel. இதை எப்படி ஆன்மிகத்தையும் சாத்வீகத்தையும் அஹிம்சையையும் உலகத்துக்குப் போதித்த இந்தியாவில் நாம் மொழிபெயர்த்துக் கொடுக்க முடியும்? நம்மையும் நம் வாழ்க்கை முறையையும் முட்டாள்தனம் என்று சொல்லும் நூலை நாம் எப்படி மொழிபெயர்க்கலாம்? நம்மை மட்டும் அல்ல; நம் ஒட்டு மொத்த வரலாற்றையுமே அவமதிக்கும் நூல் அது. வரலாறு என்பது ரத்தத்தால் வெற்றி அடைந்தவனின் வரலாறு தான் என்று சொல்வது எத்தகைய முட்டாள்தனமும் அயோக்கியத்தனமும் ஆகும்? இதைத்தான் அந்த சீன எழுத்தாளர் செய்திருக்கிறார். அவருடைய கோட்பாட்டின் படி பார்த்தால் காந்தி ஒரு மூடர். ஹிட்லர் தான் அற்புத மனிதர்.

நாம் பசுக்களை வணங்கியவர்கள். மங்கோலியர்கள் ரத்தத்தில் வாழ்ந்தவர்கள். குதிரைக் குட்டிகளை ஓநாய்கள் விரட்டி விரட்டித் தின்னும். இதுதான் உயர்ந்த நாகரிகம், இந்த ஓநாய்தான் எங்கள் தெய்வம் என்று சொல்பவனை நாம் எப்படிக் கொண்டாட முடியும் என்று தயவுசெய்து எனக்குச் சொல்லுங்கள் வெற்றி மாறன்...


– சாரு நிவேதிதா –

# புயலுக்குப் பெயர்!

உலக அளவில் புயல்களுக்குப் பெயரிடும் வழக்கம் 1945-ஆம் ஆண்டில் தொடங்கியது. உலக வானிலை மையத்தில் உறுப்பினராக உள்ள நாடுகளின் பரிந்துரையின்படி ஒவ்வொரு புயலுக்கும் பெயர் சூட்டப்படுகிறது. உறுப்பினர் நாடுகள் சுழற்சி முறையில் புயல்களுக்குப் பெயரிடும். 2005-ஆம் ஆண்டு வந்த புயலுக்கு ஃபானோஸ் என்று பாகிஸ்தான் பெயரிட்டது. 2008 இல் ஏற்பட்ட நிஷா புயலுக்குப் பெயர் சூட்டியது வங்காள தேசம்.

2008-இல் இந்தியா ஜால் என்று ஒரு புயலுக்குப் பெயரிட்டது. மியான்மர் நாடு 2011-இல் வந்த புயலுக்கு தானே என்று பெயரிட்டது.

2012-இல் நிலம் என்று பாகிஸ்தானால் பெயரிடப்பட்ட புயல் இந்தியாவின் தென்கிழக்கு கரையோரப் பகுதிகளில் பெரும் சேதத்தை விளைவித்தது.



# சமூகத்தோடு ஒட்டிய மனிதனாதல்

அதன் பிறகு நெஹ்லூதவ் மூன்று ஆண்டுகள் வரை கத்யூஷாவைப் பார்க்கவில்லை. மறுபடியும் அவளைப் பார்த்தபோது அவர் இராணுவ அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றிருந்தார். தமது படைப்பிரிவுக்குச் செல்லும் வழியில் அத்தைகளது வீட்டுக்கு வந்திருந்தார். ஆனால் அப்போது அவர், மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இங்கு வந்து தங்கி கோடை விடுமுறையைக் கழித்தவரிடமிருந்து முற்றிலும் மாறான ஒருவராய் இருந்தார்.

முன்பு அவர் நேர்மையும் தூய்மையும் வாய்ந்த இளைஞராய், தன்னலங் கருதாதவராய் இருந்தார்; எந்தச் சீரிய இலட்சியத்துக்காகவும் தியாகம் புரியத் தயாராயிருந்தார். ஆனால் இப்போது அவர் சீர்கேடுற்றுத் தேர்ந்த தன்னல வாதியாகி, தமது இன்ப அனுபவத்தில் மட்டுமே கருத்துடையவராக இருந்தார். முன்பு ஆண்டவனுடைய உலகம் அவருக்கு ஒரு பெரிய விந்தையாகத் தோன்றியது. அடங்காத ஆர்வமும் களிப்பும் மிக்கவராய் அவர் அதன் இரகசியத்தைக் கண்டறிய முயன்றார்; இப்போது அவருக்கு வாழ்க்கையில் யாவும் அவருக்குரிய வாழ்க்கை நிலைமைகளால் வரையறை செய்யப்பட்டுத் தெளிவாக விளங்கும் எளிய விவகாரங்களாகி விட்டன. முன்பு அவர் இயற்கையோடும், தமக்கு முன்னால் வாழ்ந்தும் சிந்தனை செய்தும் உணர்ந்தும் வந்தோரோடும் (தத்துவஞானிகளோடும் கவிஞர்களோடும்) கலந்து உறவாடல் அவசியமென்றும் முக்கியமென்றும் கருதினார்; இப்போது அவருக்கு அவசியமாகவும் முக்கியமாகவும் இருந்தவை மனித வழக்காறுகளும் ஏற்பாடுகளும் நண்பர்களுடனான தொடர்பும்தான். அன்று பெண்கள் அவருக்கு விந்தையானோராய் அதனாலேயே உள்ளங் கவரும் இனியராய் இருந்தனர்; இன்று பெண்கள் குறித்து, தமது குடும்பத்தைச் சேர்ந்தோரையும் நண்பர்களது மனைவிகளையும் தவிர்த்து ஏனைய எல்லாப் பெண்களும் குறித்து, அவருக்கிருந்த நினைப்பு மிகத் தெளிவானது; நன்கு அறியப்பெற்ற இன்ப அனுபவத்துக்குப் பெண்ணானவள் சிறந்ததொரு கருவி. முன்பு அவர் தமது ஆன்மிகத் தன்மைதான் தமது மெய்யான "நான்" எனக் கருதினார்; ஆனால் இப்போது அவர் ஆரோக்கியமும் வலிவும் வாய்ந்த, விலங்கினத் தன்மையதான "நான்"தான் தாம் எனக் கருதினார்.

இந்த மாற்றம் ஏற்பட்டதற்குக் காரணம், அவர் தம்மை நம்புவதை விட்டொழித்து ஏனையோரை நம்ப முற்பட்டார். அவர் ஏன் தம்மை நம்பாமல் ஏனையோரை நம்ப முற்பட்டாரெனில், தம்மை நம்பி வாழ்வது மெத்தக் கடினமாயிருந்தது. தம்மையே நம்பிச் செயற்பட்டபோது அவர் சுற்றிலும் இருந்தோரால் எப்போதும் கண்டிக்கப்பட்டார். ஏனையோரை நம்பிச் செயற்பட்ட போது அவர் சுற்றிலும் இருந்தோரது ஆதரவையும் அங்கீகாரத்தையும் பெற்றார்.

இவ்வாறு நேர்மை, உண்மை, செல்வம், வறுமை முதலானவை குறித்து நெஹ்லூதவ் சிந்திக்கவோ, படிக்கவோ, பேசவோ முற்பட்டதும், அவரைச் சுற்றிலும் இருந்த எல்லாரும் அவர் ஒவ்வாதவற்றைச் செய்வதாகவும் தம்மை ஏளனத்துக்குரியவராய் ஆக்கிக் கொள்வதாகவுங்கூடக் கருதினர்; அவருடைய தாயும் அத்தைகளும் அன்பும் கேலியும் தொனிக்க அவரை "அருமைத் தத்துவஞானி" என்று அழைத்தனர். ஆனால் அவர் ஆபாசமான வேடிக்கைக் கதைகள் கூறிய போதும், பிரெஞ்சு கேலிக்கூத்து நாடகங்கள் பார்த்துவிட்டு வந்தபோதும், குதூகலமாக அவற்றைப் பற்றிச் சொல்லியபோதும் எல்லாரும் போற்றிப் புகழ்ந்து அவருக்கு ஊக்கமூட்டினர். அவர் தமது தேவைகளை மட்டுப் படுத்திக் கொள்வது தமது கடமையென நினைத்துப் பழைய கோட்டைப் போட்டுச் சென்றபோதும், மதுபானங்கள் வேண்டாமென விலகிச் சென்றபோதும் எல்லாரும் அதை விபரீத நடத்தையென்றும் வெறும் பகட்டென்றும் நினைத்தார்கள். ஆனால் வேட்டையாடச் செல்வதற்காகவோ, வீட்டில் தமது அறையில் சிறப்பான சிங்காரிப்புகளையும் வீண் ஆடம்பர வசதிகளையும் அமைப்பதற்காகவோ அவர் பெருந்தொகைகள் செலவிட்ட போது, எல்லாரும் அவரது அழகுணர்ச்சியையும் இரசனையையும் போற்றினர்.




அவர் தூய்மை கெடாதிருந்த போது, மணம் புரிந்துகொள்ளும் வரை தொடர்ந்து தூய்மை கெடாதிருக்க விரும்பியபோது, அவரது உடல்நலத்துக்குக் கேடு வரக்கூடுமென உற்றாரும் உறவினரும் அச்சம் தெரிவித்தனர். அவர் மெய்யான ஆண் பிள்ளையாகி விட்டார், தமது நண்பர் ஒருவரிடமிருந்து பிரெஞ்சுக்காரி ஒருத்தியை வசப் படுத்திக் கொண்டுவிட்டார் என்பது தெரிந்தபோது, அவருடைய தாயுங்கூட வருத்தப்படவில்லை, மனத்துள் ஓரளவு மகிழ்ந்து கொள்ளவே செய்தார். கத்யூஷாவுடனான நிகழ்ச்சியைப் பொறுத்தவரை, அந்தப் பெண்ணைத் தமது புதல்வன் மணந்து கொண்டிருக்கக் கூடும் என்பதுதான் கோமகளாகிய அந்தத் தாய்க்கு நினைக்கவே பயங்கரமாக இருந்தது.

நிலத்தில் தனியார் உடமை நிலவுவது சரியல்ல என்று கருதிய நெஹ்லூதவ், வயது வந்ததும் வாரிசு வழியில் தந்தையிடமிருந்து பெற்றுக்கொண்ட சிறிய பண்ணையை விவசாயிகளுக்கே தந்தபோதும் இவ்வாறேதான் நடைபெற்றது; அவருடைய இந்தச் செயல் அவருடைய தாய்க்கும் உறவினர்களுக்கும் அதிர்ச்சியையே உண்டாக்கியது. இதன் பின் எந்நாளும் அவர்கள் இதற்காக அவரைக் கண்டித்தும் கேலி புரிந்தும் வந்தார்கள். நிலத்தைப் பெற்றுக்கொண்ட விவசாயிகள் முன்னிலும் வசதியாக வாழ்ந்து விடவில்லை; இப்போது மூன்று மதுவிடுதிகளை அமைத்துக் கொண்டு வேலை செய்வதையே விட்டொழித்து என்றையும்விட ஏழ்மையுற்று அவதிப்பட்டனர் என்று அவர்கள் ஓயாமல் அவரிடம் சொல்லிக் காட்டினர். ஆனால் காவலர் படையில் நெஹ்லூதவ் சேர்ந்ததும் தமது பிரபுக் குலத்து நண்பர்களோடு கூடிக்கொண்டு பணத்தை வாரி இறைத்ததாலும் சூதாடித் தொலைத்துக் கட்டியதாலும் அவர் தமது வருமானம் போதாமல் மூதாதைச் சொத்திலிருந்து பணம் எடுக்க வேண்டி வந்தபோது, தாய் பெரிதாய் ஒன்றும் வருத்தப்படவில்லை; இளம் பிராயத்துக்குரிய களியாட்டங்களில் இளம் பிராயத்திலேயே உயர்குல மத்தியில் ஆசை தீர மூழ்கித் திளைப்பது இயற்கையே என்றும் வரவேற்கத் தக்கதே என்றும் கருதினார்.

ஆரம்பத்தில் நெஹ்லூதவ் போராடவே செய்தார். ஆனால் இந்தப் போராட்டம் அளவு மீறிக் கடுமையானதாக இருந்தது. ஏனெனில் அவர் தம்மை நம்பியபோது, அவர் நல்லவையென நினைத்தவை யாவும் அவரைச் சேர்ந்தவர்கள் எல்லாராலும் தவறெனக் கருதப்பட்டனஃ அவர் தீயவையெனக் கருதியவை யாவும் ஏனையோரால் நல்லவையெனப் போற்றப்பட்டன. இறுதியில் அவர் சரணடைவதில், தம்மை நம்புவதை விட்டொழித்து ஏனையோரை நம்பிச் செயற்பட முற்படுவதில் இந்தப் போராட்டம் முடிவடைந்தது.

லேவ் தல்ஸ்தோயின் புத்துயிர்ப்பு நாவலிலிருந்து

# பல் துருவ ஆளுமை விருத்திக்கு வித்திடும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி



திரு.எ.கைலாயபிள்ளை
அதிபர்

## பாடசாலைவரலாறு

1904 சாவகச்சேரி சந்தைக்கண்மையில் ஒரு சைவத்தமிழ்க் கலவன் பாடசாலையாக திரு.வி.தாமோதரம்பிள்ளை அவர்களால் ஸ்தாபிக்கப்படல்

1905 அது சங்கத்தானைக்கு மாற்றப்படல் முதற்றலைமை ஆசிரியர் திரு.கே.எஸ்.கந்தசாமி.

1907 துவிபாஷா பாடசாலையாதல்.

1907-1910 அரசினர் நன்கொடையின்றி இருந்த காலம்.

1908 தமிழ்ப் பாடசாலை சங்கத்தானை கந்தசாமி கோயிலின் பின் வீதிக்கு கொண்டு செல்லப்படல். 1921 (அரசினர் நன்கொடையுடன்) ஆங்கிலப்பாடசாலை திரு.வி.தாமோதரம பிள்ளை அவர்களால் ஸ்தாபிக்கப்படல்.

1922 யாழ்ப்பாணம் இந்துச் சபையினரிடம் ஆங்கிலப் பாடசாலை ஒப்படைக்கப்படல். அரசினர் நன்கொடை பெறுதல். E.S.L.C வகுப்பு வைத்தல்.

1926 கோவிலடித் தமிழ்ப் பாடசாலை இங்கு கொண்டுவரப்படல்.

1934 ஊ பிரிவுக் கல்லூரியாதல், S.S.C வகுப்பு ஆரம்பம்.

1937 தமிழ்ப் பாடசாலையும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சபையினரிடம் ஒப்படைக்கப்படல்.

1943 விளையாட்டு இல்லங்கள் அமைத்தல்.

1945 "B" பிரிவுக் கல்லூரியாகியது. S.S.R வகுப்பிற்கு விஞ்ஞானக் கல்வி போதிக்கப்படல்.

1949 "A" பிரிவுக் கல்லூரியாதல். H.S.C வகுப்பு ஆரம்பம்.

1954 முதன்முதலாக விஞ்ஞானத்துறை மாணவர்கள் இருவர் பல்கலைக்கழகம் புகுந்தனர்.

1957 பழைய மாணவர் சங்கம் அமைத்தல். தமிழ்ப் பாடசாலை ஆங்கிலப் பாடசாலையுடன் இணைக்கப்படல்.

1962 (1962-06-15) அரசாங்கம் பொறுப்பேற்றல்.

1970 கலைத்துறையில் பயின்ற 17 மாணவர்களும் பல்கலைக்கழக அனுமதி பெற்றனர்.

1973 முதன்முதலாக பராசக்தி என்ற மாணவி பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு அனுமதி பெற்றார்.

1979 தேர்தல் தொகுதிக்கு ஒன்று எனும் அரசின் புதிய கொள்கைக்கு அமைய இப்பள்ளி மத்திய மகா வித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்டது.

1989 (29.08.1989) இலிருந்து இந்து ஆரம்பப் பாடசாலை என்ற பெயருடன் ஆரம்பப் பிரிவு தனித்து இயங்கத் தொடங்கியது. அவ்வேளை 6-13 வரையான வகுப்புக்களுடன் இந்துக் கல்லூரி தொடர்ந்து இயங்கியது.

1993 (05.02.1993) இல் தேசிய பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது.

1993 முதனமுதலாக சோமசுந்தரம் சரத்ஜெயன் என்ற மாணவன் க.பொ.த (உ/த) இல் நான்கு பாடத்திலும் அதிவிசேட சித்தி பெற்றார்.

1994 நான்கு மாணவர்கள் நான்கு பாடத்திலும் அதிவிசேட சித்தி பெற்றனர்.

1996 முதன்முதலாக மருத்துவபீடத்திற்கு யாழ் மாவட்டத்தில் முதலிடம்.

1999 6 மாணவர்கள் 4A சித்தி பெற்றனர். கணிதத் துறையில் த. தர்மினி தேசிய மட்டத்தில் 2ஆம் இடம் பெற்றார்.



திரு.என்.பாலச்சந்திரன்
பிரதி அதிபர் [நிர்வாகம்]

2000 மே மாதம் போர்ச் சூழல் காரணமாக இடம்பெயர்ந்து வடமராட்சியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் வலிகாமத்தில் இணுவில் மத்திய கல்லூரியிலும் இரு பிரிவுகளாக இயங்கியது. நவம்பர் மாதம் அதிபர் தலைமையிலான குழு ஒன்று பாதுகாப்புப் படையின் அனுமதியுடன் கல்லூரிக்குச் சென்று முக்கிய ஆவணங்களை மீட்டு வந்தது.

2001 இரண்டாவது தடவையாக நூலக உபகரணங்கள் சிலவற்றை மீட்டு வந்தது. மூன்றாவது தடவையாக தளபாடங்களில் ஒரு பகுதி மீட்டு வரப்பட்டது. கணித பீடத்திற்கு யாழ் மாவட்டத்தில் முதலிடம்.

2002 பெப்ரவரி 18 ஆம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்தில் இயங்கிய பிரிவுடன் மீண்டும் சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியது. மே மாதம் தொடக்கம் இரு பிரிவுகளும் சொந்த இடத்தில் இயங்கியது.

2004 நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி கல்லூரி ஞாபகார்த்த முத்திரை வெளியீடு 30.01.2004 அன்று கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. தொடர்ந்து கல்விக் கண்காட்சி, விளையாட்டுப் பெருவிழா போன்றவற்றுடன் நூற்றாண்டு விழாச் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

2006 கல்லூரிப் பூங்கா அமைக்கப்பட்டது.

2007 சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் உள்ளக ஒலி அமைப்பு மேற்கொள்ளப்பட்டது.

2008 காலாண்டு செய்தி மடலொன்று 'தடம்' என்ற பெயரில் வெளியிடப்பட்டு தொடர்ந்து வெளிவருகின்றது.

## தேசிய மட்டத்தில் முதலிடம்.

இக் கல்லூரியில் தரம் 11 இல் கல்விபயிலும் மாணவி செல்வி ஸ்ரீ.ரம்மியா , சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சு தேசிய ரீதியில் "சிறுவர் உலகம் ஒளிபெற அனைத்து கரங்களையும் வலுவூட்டுவோம்" என்ற தொனிப் பொருளில் நடததிய கட்டுரைப் போட்டியில் சிரேஷ்ட பிரிவில் தேசிய மட்டத் தில் முதலாம் இடம் பெற்று 10000 ரூபா பணப் பரிசிலையும் சான்றிதழை யும் மாண்பு மிகு ஜனா தபதி அவர்களிடமிருநது பெற்றுக்கொண்டார்.



## க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப்பெற்ற மாணவர்கள்



S. Jasotharan 3ARank-5(Maths) | R.Piratheesan 2AB Rank-30(Maths) | J. Jeyatharshini 2ABRank-38(Maths) | M.Mathangi A2BRank-71(Maths) | A.Kajanan ABCRank-87(Maths)



P.Jenoth ABCRank 104(Maths) | M.Visakan 3ARank-6(Bio) | R.Mathanki 2ABRank-21(Bio) | S.Sabasan A2BRank-36(Bio) | M.Suman 2ACRank-38(Bio)



T.Nirojini 3ARank-9(Commerce) | T.Jegath 3ARank-17(Commerce) | T.Jeriththa 2ACRank-46 (Commerce) | P.Sinthuja 2AC Rank-54(Commerce) | S.Ajanthini 2AC Rank-131(Commerce)



L.Majuri 3ARank-4(Arts) | N.Keerththana 2ABRank-5(Arts) | N.Laxsiga 2ACRank-6(Arts) | M.Aranika 3ARank-10(Arts) | K.Sukirththana 2ABRank-18(Arts)



M.Thanusalini 2ABRank-26(Arts) | T.Dilaksana A2BRank-36(Arts) | K.Jesamini 2ABRank-54(Arts) | S.Sivany A2BRank-61(Arts) | G.Jasitharan 3BRank-89(Arts)




M.Nirojan 2ACRank-92(Arts) | S.Venumathy 2ACRank-97(Arts) | A.Sukenthan 3BRank-114(Arts) | K.HariShankar ABCRank-123(Arts) | S.Malaravan 3BRank-124(Arts)



P.Tharjiththira ABCRank-134(Arts) | S.Nilani 3BRank-139(Arts) | Y.Janarththanan A2BRank-150(Arts) | T.Vimalraj 2ACRank-190(Arts)

சாரணர் பாசறை - 2010.



கரப் பந்து அணி



19 வயதுப் பிரிவு

வலைப்பந்து அணி



17 வயதுப் பிரிவு

# ஏழை மாணவர்களின் கல்விக்காக அயராது பாடுபட்டவர் ஜயரத்தினம்

## கலாநிதி ஆறுதிருமுருகன்

(திருநெல்வேலி)

இருபத்தைந்து ஆண்டுகள்கல்லூரி அதிபராகவும், துர்க்காதேவி தேவஸ்தானத்தின் வளர்ச்சியிலும் அருந்தொண்டாற்றிய மனித நேயப் பண்பாளர் நீள நினைந்து போற்றுதற்குரியவர்அமரர் தெ.து.ஜயரத்தினம் என செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் தெரிவித்தார்.

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் கோவிலில் நடைபெற்ற துர்க்காதேவி தேவஸ்தானத்தின் முன்னாள் தலைவரும், மகாஜனக் கல்லூரியின் முன்னாள்அதிபருமான அமரர் தெ.து. ஜயரட்னத்தின் நூற்றாண்டு விழாவில் தலைமையுரை ஆற்றும் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரை நிகழ்த்திய அவர் பல ஏழை மாணவர்களின் கல்விக்காக அயராது பாடுபட்டவர் அவர்கள் பல உயர்ந்த பதவிகளை அடைவதற்கு முன்னின்று உழைத்தவர் அவரது நூற்றாண்டு விழா உலகின் பல பாகங்களிலும் கொண்டாடப்பட்டது. அமரர் ஆளுமைமிக்க மனிதநேயப்பண்பாளராக விளங்கினார்.

அவரது காலத்திலேயே துர்க்காதேவி தேவஸ்தானம் பல முன்னேற்றங்களைக்கண்டது. தேவஸ்தானம் இன்று பல கட்டுமானங்களோடு திகழ்வதற்கு வித்திட்டவர் அவரே துர்க்கா துரந்தரி என்னும் சிறப்புப் பட்டத்தை சிவத்தமிழ்ச் செல்விக்கு வழங் கியவர் அமரர் தெ.து.ஜயரட்னம் அவர்களே.

கிராமப்புறத்தில் இருந்த மகாஜனக் கல்லூரி தேசிய மட்டத்தில் பிரகாசிப்பதற்கு அமரரே காரண கர்த்தாவாவர் எனக் கூறினார்.

இந் நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன், மகாஜனக் கல்லூரி அதிபர் கு.வேல் சிவானந்தன், முன்னாள் அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன், பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன் உட்படப்பலரும் உரையாற்றினர்.

தேவஸ்தான மாதாந்த வெளியீடான அருள் ஒளி அதிபர் ஜயரத்தினம் சிறப்பு மலராக வெளியிடப்பட்டது. (137)



ஆனைக்கோட்டை ஜே/133 கிராம சேவையாளர் பிரிவிலுள்ள முள்ளி கிராமத்தில் யு.என்.டி.பி.யின் நிதியுதவியுடன் கட்டப்பட்ட பலநோக்கு மண்டபத்திறப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் யு.என்.டி.பி.யின் இலங்கை பணிப்பாளர் மங்கள விளக்கேற்றுவதையும் காணலாம். (104)

வெள்ளி நற்சிந்தனை...



# உண்மை இன்பம் எது?

சைவ சமயம் யாராலும் எக்காலத்திலும் தோற்றுவிக்கப்பட்டதன்று இறைவனைப் போன்றே அனாதியானது. இதன் தொன்மையை உலக சரித்திரப் புதைபொருள் ஆராய்ச்சியாளர் ஒப்புக் கொண்டுள்ளனர். மோகஞ்சதாரோ, ஹரப்பா முதலிய இடங்களில் தோண்டி எடுக்கப்பட்ட புதைபொருளின் ஆராய்ச்சியில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிவலிங்க வழிபாடும், சிறந்த நாகரிகமும் உயர்ந்த பண்பாடும் இந்நாட்டிலிருந்தன என்பது யாவரும் அறிந்ததொன்றே. **“ஒக்கநெடுநாள் இவ்வுலகில் உயர்ந்த சைவப்பெருந் தன்மை, தொக்க நிலைமை நெறி போற்றி”** என்பது சேக்கிழார் வாக்கு, இத்தொன்மை வாய்ந்த சைவசமயம் எல்லாச் சமய உண்மைகளையும் தன்னகத்தே கொண்டு ஏனைய சமயங்களால் தீர்க்க முடியாத ஐயங்களை எல்லாம் தீர்த்து உயிருக்கு உறுதி தேடிக்கொள்ளும் முறைகளைச் செம்மையாக அறிவிக்கும் தோத்திரங்களையும், சாத்திரங்களையும் உடையது. இவ்வுலகத்திலுள்ள உயிர்கள் ஆண், பெண் என்ற இரு பகுதிகளாகவும், உயிர் இல்லாச் சடப்பொருள்களாகவும், அவன் அவள் அது எனும் மூவகைக் கூட்டங்களுள் அடங்கியவை. இவை யாவும் தோன்றி நின்று மறைந்து போவதைக் காண்கின்றோம். இவைகளைத் தோற்றுவித்து அளித்தும், அழித்தும், மறைந்து அருளும் ஒரு பரம்பொருள் இருக்க வேண்டும் என்பதை அறிவுடைய மக்கள் உணர்ந்து அப்பரம்பொருளைச் சிவம், இறைவன், கடவுள் என்று விளக்கியுள்ளார்கள்.

கடவுள் என்றசொல் எல்லாவற்றையும் கடந்து மனம், வாக்கு காயங்களுக்கு அப்பாற்பட்டதாகவும், எல்லா உயிர்களுக்குள்ளும் இருந்த அவைகளைக் கடக்கின்ற சக்தியாகவும் விளங்குகிறது. என்பதை நன்கு உணர்த்துகிறது. **“அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளோடு நிறைந்து தன்னருள் வெளிக்குள்ளே அகிலாண்டகோடியெல்லாம் தங்கும் படிக்கும் இஞ்சை வைத்து உயிர்க்குயிராய் தழைத்தது”** என்று தாயுமானாரும், **“உரைசேரும் எணபத்துநான்கு நூறாயிரமாம யோனிபதம் நிரை சேரப்படைத்து அவறறின் உயிர்க்குயிராய் அங்கங்கே நின்றான்”** என்று திருஞானசம்பந்தரும், **“தில்லை மூதூர் ஆடிய திருவடி பல்லுயிரெல்லாம் பயின்றனனாகி”** என்று மாணிக்கவாசகரும் இறைத் தன்மையை நன்கு விளக்கியுள்ளனர்.

உலகில் உயிர்கள் எல்லாம் விரும்புவது இன்பம் இந்த இன்பம் உலகத்திலுள்ள பொருள்களினால் அனுபவிக்கப்படுவது; மாறுபடும் தன்மையுடையது; **சிற்றின்பம்** என்று சொல்லப்படுகிறது.

இவ்வுலகப்பற்றை விட்டு இறைவனுடைய திருவடியை அடைவதே பேரின்பம், சிற்றின்பம், இன்பம் போல் தோன்றி முடிவில் துன்பத்தையே தரும் இயல்புடையது. பேரின்பம் உண்மையான உறுதி இன்பத்தைக் கொடுப்பது. இப்பேரின்பத்தை அடைவதற்குரிய வழிகளை அமைத்துக் கொடுப்பது தான் சைவசமயத்தின் பழமுறை வழியாகும்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

# பதிவிறக்கப் பெட்டகம்

சிறுவன் ஒருவன் அழுது கொண்டிருந்தான். அவனைச் சமாதானப்படுத்த அவனின் தந்தை அவனுக்குச் சொக்ளேற் வாங்கிக் கொடுத்தார்.

அவன் அதைத் தூக்கி எறிந்தான். “ரவி கோபப்படாதே” என்ற அவர், பலூன் ஒன்றை வாங்கி அவனுக்குக் கொடுத்தார்.

அவன் அதை “படார்’ என்று ஒருநொடியில் உடைத்து விட்டான்.

“ரவி பொறுமையாக இரு... கோபம் வேண்டாம்” என்றார் அவனின் தந்தை.

பின்பு அவனுக்குக் குடிப்பதற்குப் பால் வாங்கி வந்து கொடுத்தார். அதை வாங்கி அவன் அதை அவருடைய முகத்தில் வீசியடித்தான்.

முகத்தில் வழிந்ததைத் துடைத்துக் கொண்டே, “ரவி கோபத்தை அடக்கிக் கொள். இந்த நேரத்தில் பொறுமை ரொம்ப ரொம்ப அவசியம்” என்றார் அவர்.

இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் சிறுவனிடம், “ரவி உன் அப்பா சொல்றதைக் கேள். நீ இப்படி அடம்பிடிக்கலாமா?”என்றார்.

அப்போது அந்தச் சிறுவனின் தந்தை சொன்னார்: “என் பெயர்தான் ரவி”

*** *** *** ***

சோக்ரடீஸின் சீடர் ஒருவர், “ஐயனே, அறிவுக்கும் புத்திசாலித்தனத்துக்கும் என்ன வேறுபாடு?” என்று கேட்டார். உடனே அவர், “அதோ இருக்கிறாரே ஒரு கிழவர், அவரிடம் சென்று இங்கிருந்து கிராமத்துக்குப் போய்ச் சேர எவ்வளவு நேரமாகும் என்று கேட்டு வா!” என்றார்.

சீடரும் அந்தக் கிழவரிடம் சென்று அவ்வாறே கேட்டார். அவர் பதிலேதும் கூறவில்லை. திரும்பத் திரும்பக் கேட்டார். பலன் இல்லை. கிழவருக்குப் புத்திசுவாதீனம் இல்லையோ என்று நினைத்து, வந்த வழியே திரும்பிச் சில அடிகள் எடுத்து வைத்தார் அந்தச் சீடர். உடனே கிழவர் அவரை அழைத்து, “நீ பத்து நிமிடங்களில் கிராமத்தை அடையலாம்!” என்றார்.

“நீங்கள் ஏன் இந்தப் பதிலை நான் கேட்டவுடன் கூறவில்லை?” என்று சந்தேகத்துடன் கேட்டார் சீடர்.

“நீ எவ்வளவு வேகமாக நடக்கிறாய் என்பதைப் பார்க்காமல் எப்படியப்பா, நீ கிராமத்தை எவ்வளவு நேரத்தில் அடைவாய் என்பதைக் கூற முடியும்?” என்று திருப்பிக் கேட்டார் அந்தக் கிழவர்.

சீடர் வியப்பும் மரியாதையுமாக சோக்ரடீஸிடம் வந்து நடந்ததைக் கூறியதும் சோக்ரடீஸ், “அதற்குப் பெயர்தான் புத்திசாலித்தனம்!” என்றார்.

*** *** *** ***

**ஆசிரியர்:** நான் உனக்கு முதலில் இரண்டு கோழி தருகிறேன். அடுத்து இரண்டு கோழி தருகிறேன். இப்ப உன்னிடம் எத்தனை கோழி இருக்கும்?

**மாணவன்:** 5 இருக்கும் சேர்!

**ஆசிரியர்:** நல்லா கேள்..... முதல்லே இரண்டு கோழி தருகிறேன், மறுபடியும் இரண்டு தருகிறேன், இப்ப உன்னிடம் எவ்வளவு இருக்கும்?...

**மாணவன்:** 5 தான் சேர்.

ஆசிரியர் (பெருமூச்சு விட்டவாறு): உஷ்....முடியலைடா. சரி, இதுக்குப் பதில் சொல்லு. முதல்லே இரண்டு அப்பிள் தருகிறேன். அடுத்து இரண்டு அப்பிள் தருகிறேன். மொத்தம் எத்தனை அப்பிள் இருக்கும்?

**மாணவன்:** 4 சேர்.

**ஆசிரியர்:** அப்பாடா தப்பித்தேன்.... இப்ப கோழிக்கு வருவோம், 2 கோழி தருகிறேன். பிறகு 2 கோழி தருகிறேன். உன்னிடம் மொத்தம் எத்தனை கோழி இருக்கும்?

**மாணவன்:** 5 சேர்.

**ஆசிரியர்:** அடேய் லூசு..... எப்படியடா 5 கோழி வரும்?

மாணவன்: என்னிடம் ஏற்கனவே வீட்டில் ஒரு கோழி இருக்கு சேர்.

**ஆசிரியர்:** ? ? ?

*** *** *** ***

“ஐம்பதாயிரம் ரூபா கடன் கேட்கிறீங்களே... வாங்கிக் கொண்டு ஊரை விட்டே நீங்கள் ஓடிவிட்டால் நான் செய்றது?”

“கந்தசாமியிடம் கேட்டுப் பாருங்கள். பன்னிரெண்டு வருசமா அவருக்கு கடன்காரனாய் இதே ஊரிலதான் இருக்கிறேன்”

# பொதுநலவாய மாநாட்டினால் பயணிகள் விமான சேவை பாதிப்பு

## மாற்று வழிகளுக்கும் ஏற்பாடு



கொழும்பில் கொமன்வெல்த் மாநாடு நடக்கும் போது, இலங்கைக்கான பயணிகள் விமானப் போக்குவரத்து பாதிக்கப்படலாமென சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, தகவல் வெளியிட்டுள்ள சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் பணிப்பாளர் சி.நிமலசிறி, கொமன்வெல்த் மாநாட்டுக்காக முக்கிய பிரமுகர்களின் விமானங்கள் வரும் போது, கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வரும் பயணிகள் விமானங்களுக்கு ஏற்படும் இடையூறுகளை முடிந்தளவில் குறைப்பதற்கு முயற்சி எடுக்கப்படும். மாநாட்டின் போது, கட்டுநாயக்க விமான நிலையத்தில், முக்கிய பிரமுகர்களின் விமானங்களின் வருகைக்கே முன்னுரிமை கொடுக்கப்படும். சிலவேளைகளில் இதனால், திட்டமிடப்பட்ட பயணிகள் விமான சேவைகளுக்கு இடையூறுகள் ஏற்படலாம். எனினும் அத்தகைய பாதிப்புகளை குறைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். பெரும்பாலான, அரசுத் தலைவர்கள் குறிக்கப்பட்ட சில மணி நேரத்துக்குள் மாநாட்டுக்காக வருகை தரலாம் என்பதால், கட்டுநாயக்க விமானநிலையத்தில் நெருக்கடி ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. இது மாநாடு முடிந்து அவர்கள் புறப்பட்டுச் செல்லும் வரை நீடிக்கும்.

கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு, நாளாந்தம் வரும் பயணிகள் விமானங்களை விட மேலதிகமாக 25 தொடக்கம் 35 வரையிலான விமானங்கள் மாநாட்டு சமயத்தில் வரக்கூடும். சில நாடுகளின் தலைவர்கள் தமது சொந்த விமானங்களில், பாதுகாப்பு விமானங்களின் துணையுடன் வரக்கூடும். சில தலைவர்கள் பயணிகள் விமானங்களில் வரக் கூடும். முக்கிய பிரமுகர்கள் வரும் விமானங்களால், கட்டுநாயக்க விமான நிலையத் தரிப்பிடங்கள் நிரம்பினால், ஏனைய விமானங்கள் மத்தள மற்றும் இரத்மலான விமான நிலையங்களுக்குத் திருப்பி விடப்படும். பெரும்பாலான வெளிநாட்டுத் தலைவர்கள் சொந்தமான சிறப்பு விமானங்களிலேயே வருவார்கள் என்பதால், அதிகளவில் தனியார் விமானங்கள் கட்டுநாயக்க வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கட்டுநாயக்க விமான நிலையத்தில் விமானங்களுக்கு எவ்வாறு அனுமதி வழங்கப்படும் என்பது குறித்து எல்லா அரசுத் தலைவர்களுக்கும், சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை அறிவித்துள்ளது. அவர்கள் அதற்குப் பதிலளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறோம். ஆனால், இறுதி நேரத்திலேயே பெரும்பாலும் பாதுகாப்புக் கோரிக்கைகள் விடுக்கப்படும்.

எனினும் அவர்களுக்கு எந்தச் சிரமமும் ஏற்படாமல் இதனைக் கையாள முடியும் என்று நம்புகிறோம். இலங்கை வெளி விவகார அமைச்சு மற்றும் கொமன்வெல்த் செயலகத்துடன் , சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை இந்த விடயத்தில் நெருக்கமாகப் பணியாற்றும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தண்டப்பணம்

சட்டவிரோதமான முறையில் 3 ஆமைகளை கடத்திச் செல்ல முற்பட்ட நபருக்கு 30000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் ஆமைகளை வனவளப்பாதுகாப்பு அதிகாரிகளிடம் கையளிக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

ஆமைகள் பெருமளவு இறைச்சிக்காக வெட்டப்படுவதனால் ஆமைகள் அருகிவருவதாகவும் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். (170)

★ ★ ★ ★ ★

மதுபோதையில் வாகனத்தை செலுத்திய 6 பேருக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்குகளில் 60000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் சாரதி அனுமதிப்பத்திரத்தை 2 மாத காலத்திற்கு இடைநிறுத்தி வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிள், மற்றும் ஆட்டோ வாகனங்களை மது போதையில் செலுத்தியவர்களுக்கே மேற்படி தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

★ ★ ★ ★ ★

சட்ட விரோதமான முறையில் மரக்காலை ஒன்றை நடத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட நபர் ஒருவருக்கு ரூ 30000 தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன் மரங்களை பறிமுதல் செய்து மரக்கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி நபர் சட்டவிரோதமான முறையில் அனுமதிப் பத்திரமின்றி மரக்காலை ஒன்றை நடத்தி வந்ததாக குற்றஞ் சாட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (170)

# விரிவுரையாளர்களின் சேவை எழுபது வயது வரை நீடிப்பு

பல்கலைக்கழகங்களில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் விரிவுரையாளர்களுக்கு 70 வயது வரை ஒப்பந்த அடிப்படையில் சேவையை நீடிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதென உயர் கல்வி அமைச்சின் செயலாளர் டாக்டர் சுனில் ஜயந்த நவரட்ன தெரிவித்தார்.

இதற்கிணங்க 65 வயதில் ஓய்வு பெறும் விரிவுரையாளர்கள் மேலதிகமாக 05 வருடங்களுக்கு சேவையாற்ற முடியும். ஓய்வு பெறும் விரிவுரையாளரின் சேவை பல்கலைக்கழகத்திற்கு இன்றியமையாதது என கோரும் பட்சத்தில் மாத்திரமே அவர்களுக்குரிய சேவைக்காலம் நீடிக்கப்படும். ஒப்பந்தங்கள் 70 வயது வரை வருடந்தோறும் புதுப்பிக்கப்படுமெனவும் அமைச்சின் செயலாளர் கூறினார்.

இருப்பினும் விரிவுரையாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றும் காலப்பகுதியில் உபவேந்தர், பீடாதிபதி, பிரிவுத் தலைவர் உள்ளிட்ட எந்தவொரு பதவியையும் வகிக்க முடியாது எனவும் அவர் உறுதியாக தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளர்களுக்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கும் இக்காலகட்டத்தில் அமைச்சரவையின் மேற்படி அங்கீகாரம் சாதகமாக அமைந்துள்ளதாக சுட்டிக்காட்டிய அமைச்சின் செயலாளர், இதன் மூலம் சேவையிலிருக்கும் ஏனைய இளம் விரிவுரையாளர்களின் சேவை மற்றும் பதவி உயர்வு என்பன பாதிப்படையாத வகையிலேயே அனைத்து செயன்முறைகளும் முன்னெடுக்கப்படுமெனவும் கூறினார்.

விரிவுரையாளரொருவர் தான் ஓய்வு பெறுவதற்கு முன்பாக கடந்த 03 வருடங்களுக்குள் பல்கலைக்கழகம் மற்றும் மாணவர்களுக்காற்றிய சேவை, ஆராய்ச்சி என்பன அடிப்படையிலேயே அவரது சேவைக்காலம் நீடிக்கப்படுவது குறித்து தீர்மானிக்கப்படும். மேலும் 70 வயது வரையான சேவைக்கால நீடிப்பின் போது, குறித்த விரிவுரையாளர் விரிவுரை மற்றும் ஆராய்ச்சி முன்னெடுத்திருப்பது அவசியமெனவும் அவர் வலியுறுத்தினார்.

சேவைக்கால நீடிப்பின் போது ஆள் தெரிவுக்கான விதிமுறைகளைத் தயாரித்து ஒப்படைக்குமாறு அமைச்சரவை பணித்திருப்பதாக கூறிய செயலாளர் விதிமுறை தயாரிப்பு தொடர்பில் அனைத்து பல்கலைக்கழகங்களுடனும் கலந்துரையாடி வருவதாகவும் கூறினார்.

# விமர்சனங்களை செய்வதில் முனைப்புக் காட்டும் எதிர்க்கட்சி

## பிரதமர் விசனம்

எதிர்க்கட்சியினர் விமர்சனங்களைச் செய்வதில் கூடுதல் கவனம் செலுத்தி வருவதாக பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சியினர் எதற்கு எடுத்தாலும் அரசாங்கத்தை விமர்சனம் செய்வதற்கு முனைப்பு காட்டி வருவதாகவும், பிரச்சினைகளுக்கு காத்திரமான தீர்வுத் திட்டங்களை வழங்குவதற்கு முன் வருவதில்லை எனவும் பிரதமர் குற்றம் சுமத்தியுள்ளார். நாடாளுமன்றில் உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

விமர்சனங்களைச் செய்யும் எதிர்க்கட்சியை விடவும் காத்திரமான யோசனைகளை முன் வைக்கும் எதிர்க்கட்சியொன்றே நாட்டுக்கு அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் எந்த வழியில் செல்ல வேண்டும் என்பதனை காட்டுவதே எதிர்க்கட்சிகளின் முக்கிய கடமை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்

# கமநல சேவை நிலையத்தை புனரமைக்குமாறு கோரிக்கை

பச்சிலைப்பள்ளி கமநல சேவை நிலையம் கட்டட வசதி இன்றி இயங்கி வருவதாக இப்பகுதி பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர் .

இப்பிரதேசம் 18 கிராம சேவையாளர் பிரிவுகளைக் கொண்ட பகுதியாகவும் இங்குள்ள மக்களில் பெரும்பாலான மக்கள் விவசாயத்தையே பிரதான தொழிலாக மேற்கொண்டு வருவதாகவும் இம் மக்கள் தெரிவிக்கின்றனர் .

இத்தகைய நிலையில் கடந்த கால யுத்தத்தினால் பச்சிலைப்பள்ளி கமநல சேவை நிலையமானது சேதமடைந்துள்ளது . கட்டட வசதி இன்றி ஓலைக் கொட்டிலிலேயே இயங்கி வருகின்றது .

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்த பின்னர் அரச அலுவலர்கள் நியமிக்கப்பட்டபோதிலும் பல சிரமங்களின் மத்தியிலேயே இக்கமநல சேவை நிலையம் இயங்கி வருவதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர் .

எனவே விவசாய குடும்பங்களைப் பெருமளவாகக் கொண்ட பளை நகர கமநல சேவை நிலையத்தினைப் புதிதாக அமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# போத்தல் குடிநீரில் மோசடி

போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீரை தயாரிக்கும் நிறுவனங்களை தெளிவுபடுத்துவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

தேசிய உணவு பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கொழும்பில் இது தொடர்பில் விசேட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அண்மைக்காலமாக போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் தொடர்பில் பல்வேறு மோசடிகள் இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

விசேடமாக பதிவு செய்யப்படாத நிறுவனங்களினால் தயாரிக்கப்படும் போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீரை பயன் படுத்துவதனால் சுகாதாரத்திற்கு பாரியளவிலான கேடு ஏற்படுவதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

# கொரியாவிற்கு கல்விச்சுற்றுலா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மூவர் கொல்க்கா நிறுவனத்தின் ஏற்பாட்டில் கொரியா நாட்டிற்குக் கல்விச் சுற்றுலா ஒன்றினை மேற்கொள்ளவுள்ளனர் .

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் கொல்க்கா நிறுவனத்தின் உதவியில் இம் மாவட்டத்தில் 13 பாடசாலைகளில் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன . இதன் தொடர்ச்சியாக மூவர் கொரியா நாட்டிற்குச் செல்லவுள்ளதுடன்அந்த நாட்டின் கல்விமுறைகள் சார்ந்த விடயங்களை அறிவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன .

இதில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க . முருகவேள் தர்மபுரம் மகா வித்தியாலய அதிபர் ச . பூலோகராஜா கிராஞ்சி அ.த.க. பாடசாலை ஆசிரியை திருமதி . கிருபானந்தன் கொன்சியா ரூபராணி ஆகியோருடன் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி . சத்தியசீலன் மாகாண கல்விப் பணிப்பாளர் வை . செல்வராஜா ஆகியோரும் இரண்டு வார பயணமாக செல்லவுள்ளனர்.

# கருக்கலைப்பு மாத்திரைகள் மீட்பு



(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக பயணம் செய்த ஒருவரிடமிருந்து 3180 கருக்கலைப்பு மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.

கல்முனையைச் சேர்ந்த 37 வயதான ஒருவரே இவ்வாறு கருக்கலைப்பு மாத்திரைகளை நாட்டுக்குள் எடுத்துவர முயற்சித்துள்ளார்.

சென்னையிலிருந்து இலங்கை திரும்பிய நபரிடமிருந்து மீட்கப்பட்ட கருக்கலைப்பு மாத்திரைகளின் பெறுமதி 152000 ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது.

கோர்ன் பிளக்ஸ் பெட்டியொன்றில் இந்த மருந்து மறைத்து வைத்து கொண்டு வரப்பட்டுள்ளது.

சந்தேக நபரிடமிருந்து மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டதுடன், ஒரு இலட்ச ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வகை மருந்து இலகுவான முறையில் கருக்கலைப்பு செய்ய வழியமைக்கும் என்றபோதிலும் ஆபத்தான பக்க விளைவுகள் ஏற்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை - 2013

# கல்வி முரசு

வரலாறு

பகுதி - I - II


2 மணி



**மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்து அதன் இலக்கத்தை விடைத்தாளில் குறிப்பிடுக.**

01. காரண காரியங்களை மூலாதாரங்களின் துணையுடன் முற்காலத்தில் இடம்பெற்ற உண்மைச் சம்பவங்களை முறைப்படுத்திக் கொள்வதே வரலாறாகும் என்று குறிப்பிட்டவர்.
1) J.B.பியுரி 2) ஜவஹர்லால் நேரு
3) ஹெரடோடஸ் 4) E.H.கார்

2. அனுராதபுர யுகத்தின் ஆரம்ப காலப் பகுதிகளுள் குகைக் கல்வெட்டுக்களில் காணப்படும் எழுத்துக்கள் இப்படத்தில் காண்பிக்கப்பட்டுள்ளன. இவை எவ்வெழுத்து வகையைச் சார்ந்தது?



1) சித்திர எழுத்துக்கள் 2) பிரஹ்மி எழுத்துக்கள்
3) ஆப்பு எழுத்துக்கள் 4) நாகரி எழுத்துக்கள்

3. இலங்கையின் புராதன வரலாற்றுச் சம்பவங்களைக் கொண்ட டீ முண்டோ, டொபொ கிரேபியா கிரிஸ்டியானா, பெரிப்ளஸ் ஒப் த எரிட்ரியன் ஷீ எனும் நூல்கள் கீழ்க் குறிப்பிடப்படும் எந்நாட்டவரால் எழுதப்பட்டது?
1) கிரேக்கம் 2) சீனா
3) அரேபியா 4) பிரித்தானியா

4. பனாகடுவை செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளபடி 1 ம் விஜயபாகு மன்னனுக்கு பிள்ளைப் பிராயத்தில் பாதுகாப்பு வழங்கிய பிரதேசத் தலைவனின் பெயர் யாது?
1) லோகிஸ்ஸர 2) ரவிதேவ
3) புதல்னா 4) மாணாபரண

**5 தொடக்கம் 9 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்க இங்கு தரப்பட்டுள்ள இந்தியப் புறவுருவப் படத்தை பயன்படுத்துக.**



5. A எழுத்தால் எக்கணவாய் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது?
1) கைபர் 2) மக்ரான்
3) பெரோடா 4) குமால்

6. B எழுத்தால் எம்மலைத் தொடர் காண்பிக்கப்படுகிறது?
1) இந்துகுஷ் 2) இமயம்
3) ஆரவல்லி 4) விந்தியா

7. 4 ஆம் இலக்கத்தால் காண்பிக்கப்பட்டுள்ளது பஹமனி இராச்சியத்தாலும் விஜய நகர இராச்சியத்தாலும் தமதாக்கிக்கொள்ள முயற்சித்த இரு நதிகளுக்கிடைப்பட்ட வளமான பிரதேசம் ஆகும். அப்பிரதேசம்
1) ராஜஸ்தான் 2) ராய்ச்சூர்
3) வங்காளம் 4) கேரளம்

8. C எழுத்தினால் காண்பிக்கப்பட்டுள்ள பிரதேசம் புராதன காலத்தில் எப்பெயரால் அழைக்கப்பட்டது?
1) பஞ்சாப் 2) பனிபட்
3) ஆரிய வர்தய 4) சப்த சிந்து

9. 1 ம் சேன மன்னனின் காலத்தில் இலங்கையை ஆக்கிரமித்த ஸ்ரீமாற ஸ்ரீ வல்லப மன்னனின் இராசதானி 6 ஆம் இலக்கத்தால் குறிப்பிடப்பட்டுள்ளது? அது எது?
1) சோழ தேசம் 2) பாண்டிய தேசம்
3) பல்லவ தேசம்
4) கலிங்க தேசம்



10. இங்கு காண்பிக்கப்பட்டுள்ள சித்திரம் எந்த யுகத்திற்கு உரியது?
1) மௌரிய 2) குப்த
3) குஷாண 4) அநுராதபுர

11) 1848 ஆம் ஆண்டின் சுதந்திரப் போராட்டத் தலைவர்களுள் சிங்களவர்களின் வீர புருசன் என அழைக்கப்படுபவர் யார்?
1) வீரபுரன் அப்பு 2) குடாபொல தேரர்
3) கொங்காலே கொடபண்டா 4) மடுகல்ல நிசாவை

12) பிரித்தானியர்கள் 1815 இன் கண்டி உடன்படிக்கையை மீறிமையால் ஏற்பட்ட விடயம் பின்வருவனவற்றில் எது?
1) இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தமை.
2) 1818 ஆம் ஆண்டு முதலாவது சுதந்திரப்போர் நடந்தமை.
3) 1848 ஆம் ஆண்டு இரண்டாவது சுதந்திரப்போர் நடந்தமை.
4) மக்கள் மன்னன் ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன் பக்கம் சார்ந்தமை.

13) ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இலங்கையின் தொடர்ச்சியான வரலாற்றை கற்பதற்கான ஒரு மூலமாக மகாவம்சத்தின் முக்கியத்துவத்தை மிகச் சரியாகக் காட்டும் கூற்று யாது?
1) எழுத்துருவ மூலமாக மகாவம்சத்தில் வரும் எல்லாத் தகவல்களையும் சரியாகக் கருதலாம்.
2) பண்டைய அரசர்கள் தொடர்பாகக் குறிக்கப்பட்ட தகவல்களை மாத்திரம் சரியாகக் காட்டும் மூல நூலாக மகாவம்சம் முக்கியத்துவம் வாய்ந்தது.
3) மகாவம்சத்தில் வரும் பல தகவல்கள் ஏனைய மூலகங்களினால் உறுதிப்படுத்தப்படுகின்றமையால் எழுத்துருவ வரலாற்று மூல நூலாக முக்கியத்துவம் வாய்ந்தது.
4) மகானாம என்ற தேரரின் பெயரில் எழுதப்பட்டிருப்பதனால் சமய வரலாறு தொடர்பானதகவல்களை மாத்திரம் சரியாகக் காட்டும் மூலமாக முக்கியத்துவம் வாய்ந்தது.

14) பல்வேறு நாடுகளில் இருந்து வந்த கப்பல்களினால் இலங்கையின் “மகாதித்த” துறைமுகம் நிரம்பியிருந்தது என கொலம்பஸ் என்ற பெயருடைய வெளிநாட்டவர் குறிப்பிட்டு உள்ளார். இதனால் வெளிப்படுத்தப்படும் பிரதான விடயம்
1) கப்பல் சேவையில் இலங்கை முக்கிய இடம் வகித்தது.
2) புராதன காலத்தில் உல்லாசப் பணிகள் பெருமளவில் வந்தனர்
3) அக்காலத்தில் இலங்கை முக்கிய வர்த்தக நிலையமாக விளங்கியது.
4) பருவக்காற்று, நீரோட்டங்கள் என்பவற்றின் உதவியில் இலங்கை வரமுடிந்தமை.

15) இலங்கையில் “பிரித்தானியர் ஆட்சி” தொடர்பான பொருத்தமற்ற கூற்றைத் தெரிவு செய்க.
1) பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை வளர்ச்சியடைந்தமை
2) கைத்தொழில், விவசாயம் என்பவற்றில் கூடிய கவனம் செலுத்தியமை.
3) அரசியல் யாப்புக்களில் வளர்ச்சி நிலை ஏற்பட்டமை.
4) ஆங்கிலக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டமை.

16) பிரித்தானியரால் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட தேயிலைச் செய்கைக்கு தேவையான காணிகள் பெற்றுக்கொண்டமை பின்வரும் எவ்வழி முறையினால்?
1) தரிசு நில சட்டத்தின் மூலம் காணிகளை அரசு உடைமையாக்கியமை.
2) கபாடகம், நிர்த்தகம் ஆகியவற்றை இரத்துச் செய்ததன் மூலம்.
3) மலைநாட்டில் நிலவிய இராஜகரிய முறையை ஒழித்து விட்டதன்மூலம்.
4) காணி உரிமையாளர்களுடன் பேசி காணிகளை கொள்வனவு செய்தமை.

17) மலையகப் பகுதியில் 1815 இல் ஆரம்பித்த பிரித்தானிய ஆட்சிக்கு எதிராக மக்கள் அதிருப்தி கொண்டமைக்கு காரணமாக அமைவது.
1) கண்டி மக்களின் பாரம்பரியங்களுக்கும் பழக்கவழக்கங்களுக்கும் பிரித்தானியர் மதிப்பளிக்காமை
2) ஸ்ரீவிக்கிர ராஜசிங்கனை நாடு கடத்தியமை.
3) நாயக்கர் பிரித்தானியரின் அதிகாரங்களை நீக்கியமை.
4) புதிய வரி நடைமுறைகளை நீக்கியமை.

18) வசபன், மகாசேனன், மகாபராக்கிரமபாகு என்ற அரசர்களின் பணிகள் தொடர்பான பொது இயல்பு யாது?
1) வெளிநாடுகளிலிருந்து பிக்குகளை அழைத்து வந்த குருப்பட்டம் அழித்தல்
2) நீர்ப்பாசனத்தின் விரிவாக்கத்துக்கு அழப்பரிய சேவையை அழித்தல்.
3) தென்னிந்தியப் படையெடுப்புக்களிலிருந்து நாட்டைப் பாதுகாத்தல்.
4) இலங்கையை ஒன்றுபடுத்துவதற்கு நடவடிக்கையை மேற்கொள்ளல்.

19) புராதன நீர்ப்பாசன வல்லுநர்கள் நுண் சாய்வுடன் கால்வாய்களை அமைக்கையில் நுண்ணளவீட்டு முறைகளைப் பயன்படுத்தியமைக்குத் தரத்தக்க சிறந்த உதாரணம்.
1) அனுராதபுர ரன்மசு தோட்டத்திற்கு நீரை வழங்கும் குடை வழி (சுருங்கை) நீ வழித்தொகுதி
2) கலாவாவி, திசாவாவி என்பவற்றைத் தொடுக்கும் யோத கால்வாய்
3) புராதன மாதுறு ஓயா நீர்த்தேக்கத்தில் இருந்த பண்டைய கலிங்கல் தொட்டி
4) சிகிரியாக் குன்றைச் சுற்றி அமைத்த நீர் அகழி

A - இலங்கை முழுவதும் ஒரே ஆட்சியின் கீழ் கொண்டுவரப்படல்
B - உத்தியோக சார்பற்றோர் தொகை அதிகரிக்கப்பட்டமை.
C - பொருளாதார துறையில் அரசின் ஏகபோக உரிமை ஒழிக்கப்பட்டமை.
D - பிரதேசவாரி பிரதிநிதித்துவம் அறிமுகப்படுத்தப்பட்டமை.
E - நிர்வாகக் குழுமுறை அறிமுகம்.
F - இராஜகரிய முறை ஒழிக்கப்பட்டமை.

20) மேலே A,B,C,D,E,F என்பனவற்றால் குறிப்பிடப்பட்டுள்ள சிபார்சுகளில் கோல்புறூக் அரசியல் சீர்திருத்தத்தின் மூலம் முன்வைக்கப்பட்ட சிபார்சுகள் யாவை?
1) A,C,E 2) B,D,F
3) A,C,F 4) A,B,C

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

1. இந்தியாவின் ஆரம்ப வரலாற்று பின்னணியை சுருக்கமாக விளக்குக.

2.அ) சிப்பாய்க்காலம் ஏற்பட்டமைக்கான உடனடிக் காரணம் யாது?
ஆ) கலகம் தோல்வியடைந்தமைக்கான 2 காரணங்கள் தருக.
இ) கலகத்தினால் ஏற்பட்ட விளைவுகள் 2 குறிப்பிடுக.

3. மிதவாதிகள் தீவிரவாதிகள் எனப்படுவோர் யார்?

4. இந்தியாவின் சுதந்திர போராட்டத்திற்கு மகாத்மா காந்தியின் பங்களிப்பு யாது?

5. ஜாலியன் வாலா பாக் படுகொலை பற்றிச் சுருக்கமாக விளக்குக.

6. இந்தியாவின் சுதந்திரம் தொடர்பாக நடைபெற்ற 3 வட்டமேசை மாநாடுகள் தொடர்பான குறிப்பினை தருக.

7. ஒத்துழையாமை இயக்கத்தின் செயல் திட்டங்கள் யாவை?

8. இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் நோக்கங்கள் யாவை?

9. மிதவாதத் தலைவர்களின் பெயர்கள் 3 உம் தீவிரவாதத் தலைவர்களின் பெயர்கள் 2 உம் குறிப்பிடுக.

10. "இந்தியர்களின் வரலாற்றில் மகாத்மா காந்தி முக்கிய இடம் வகிக்கின்றார்" இக்கூற்றினை எவ்வாறு நீர் நியாயப்படுத்துவீர்.

11. ஜப்பானில் நடைபெற்ற நிலமானிய முறை ஆட்சி பற்றி விளக்குக.

12. நிலமானிய முறை யுத்தங்கள் முடிவுக்குவர காரணமான வீரர்களின் பெயர்களை குறிப்பிடுக.

13. டொகுகாவா ஷோகுன் ஆட்சியாளர்கள் யாவர்?

14. டொகுகாவா அரசின்கீழ் காணப்பட்ட சமுதாய நிலையின் முக்கிய அம்சங்கள் யாவை?

15. ஜப்பான், அமெரிக்கத் தொடர்பால் ஏற்பட்ட விளைவுகள் யாவை?

16. மேஜீஜீ சீர்திருத்தத்திற்கமைய புதிய அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் யாவை?

17. சீனா, ஜப்பான் மோலினால் ஏற்பட்ட விளைவுகள் யாவை?

18. ரஷ்யா, ஜப்பான் போரின் விளைவுகள் யாவை?

19. மார்ஷல் திட்டம் என்றால் என்ன? அதன் நோக்கம் என்ன?

20. I ஆம் உலகமகாயுத்தத்தில் ஜப்பானின் பங்களிப்பு என்ன?

**சுருக்கமான விடை தருக**

1) வரலாறு என்னும் பதத்தின் பொருள் யாது?

2) வரலாறு பற்றி முன்வைக்கப்பட்ட வரைவிலக்கணங்களில் "ஸ்டுவர்ட் பிக்கொட்டின் " கருத்து என்ன?

3) தொல்பொருள் மூலாதாரங்களில் அடங்கும் கல்வெட்டுக்களின் வகைக்கு 2 உதாரணம் தருக?

4) தொல்பொருள் அகழ்வுகள் மூலம் கண்டெடுக்கப்பட்ட நாணயங்கள் மூலம் வெளிப்படுத்தப்படும் விபரம், உண்மை 2 தருக?

5) நீர் வரலாற்றை கற்பதனால் உமக்கு கிடைத்த 2 பயன்களைக் குறிப்பிடுக.

6) ஆரியர் வருகை பற்றிக்கூறும் மூலாதாரணங்கள் யாவை?

7) ஆரியர் சமூகத்தில் காணப்பட்ட 4 சாதிப்பிரிவுகளும் எவை?

8) "மத்சய கோட்பாட்டின் படி" ஏனைய தேசங்களை அடக்கி ஆண்ட பெருந்தேசங்கள் எவை?

9) மௌரியப் பேரரசுக் காலத்தில் வளர்ச்சி பெற்ற கலையின் சிறப்பம்சங்கள் (2) குறிப்பிடுக.

10) குப்தர் யுகத்தின் சமயங்கள் பற்றி (2) குறிப்புகள் தருக?

11) கலை நுட்பத்துறையில் அஜந்தா பிரசித்தி பெறுவதற்கு காரணங்கள் யாவை?

12) வரலாற்று ஆசிரியர்களால் குறிப்பிடப்படும் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் யாது?

13) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த மனிதர்களின் இயல்புகளில் ஏதாவது (2) குறிப்பிடுக?

14) பின்வரும் ஆரியக் குழுவினர் வந்திறங்கிய இடங்களைக் குறிப்பிடுக?

A. விஜயனும் தோழர்களும்
B. சந்திரியகுல இளவரசி
C. பண்டுவாசுதேவன் குழுவினர்
D. பத்தகச்சானா குழு

15. பின்வரும் ஆரியக்குடியிருப்புக்கள் எந்த நதியை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது என்பதனை குறிப்பிடுக?

A - தம்மன்னாவ
B - உருவெலகம
C - விஜிதபுரம்
D - கல்யாணி

16. ஆரியர்களின் சமூக மற்றும் கலாசார அம்சங்கள் எவையேனும் (2) குறிப்பிடுக?

17. பண்டுகாபய மன்னனின் சாதனைக்ள இரண்டு குறிப்பிடுக?

19. இலங்கையில் பௌத்தம் பரவியதால் ஏற்பட்ட நன்மைகள் (2) குறிப்பிடுக?

20. சிகிரியாவின் சிறப்புகள் எவையேனும் ( 2) குறிப்பிடுக.

21. சோழர் பொலநறுவையை தலைநகராக்கியமைக்கான காரணங்கள் 2 குறிப்பிடுக?

22. நீர்வள நாகரீகம் என்றால் என்ன?

23. I ஆம் பராக்கிரமபாகு மன்னனின் நீர்ப்பாசன பணிகள் 2 குறிப்பிடுக?

24. இலங்கையில் நீர்வள நாகரிகத்தின் உருவாக்கத்திற்கு வழிகோலிய காரணங்களில் பிரதான காரணம் 2 குறிப்பிடுக.

25. ஆரம்பக் குடியேற்ற வாசிகள் விவசாயத்தில் எதிர்நோக்கிய பிரச்சினைகளில் சமூகம் சார்ந்த பிரச்சினைகள் என்னவாக இருந்தது?

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01)
1. இலங்கையிலே வரலாற்றுக்கு முந்திய காலத்தில் மனிதன் வாழ்ந்த 3 குகைகளைக் குறிப்பிடுக.

2. முதல் குடியிருப்பாளர்கள் இலங்கையில் குடியிருப்புக்களை அமைக்கத் தெரிந்தெடுத்த நான்கு ஆற்றுப்பள்ளத்தாக்குகளைக் குறிப்பிடுக.

3. இலங்கையில் கலாசார மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதில் தேவநம்பிய தீசனின் காலம் முக்கியம் வாய்ந்ததாக இருந்த விதத்தை இரு உதாரணங்கள் தந்து விளக்குக?

4. நீரை அண்டிய நாகரிக காலத்திலே இலங்கையில் மேம்பட்ட நீர்ப்பாசனத் தொழினுட்பவியல் இருந்தமையை மூன்று உதாரணங்கள் தந்து விளக்குக?

02)
1. பின்வரும் வரலாற்று பிரசித்தி பெற்ற நிகழ்ச்சிகளுடன் தொடர்புபட்ட அரசர்களை முறையே A, B, C ஒழுங்கில் குறிப்பிடுக.

A ஆரிய மக்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தி அனுராதபுரத்தை தலைநகராக மாற்றுதல்.

B. மௌரியப் பேரரசரின் அரசன் அசோகனின் அனுசரணையுடன் முடிசூட்டலை நடத்தல்.

C. 44 ஆண்டுகள் நிகழ்ந்த நீதி தவறாத ஆட்சி

2. மேலைத்தேய மக்களின் குடிவரவுக்கு முன்பாக இலங்கை மீது மேற்கொள்ளப்பட்ட நான்கு வெளிநாட்டுப் படையெடுப்புக்களைக் குறிப்பிடுக.

3. சோழ அதிகாரத்திலிருந்து நாட்டினை பாதுகாப்பதற்கும், எதிர்கால சோழ படையிலிருந்து நாட்டினை பாதுகாப்பதற்கும் I ஆம் விஜயபாகு அரசன் செயற்பட்ட விதத்தை இரு உதாரணங்கள் தந்து விளக்குக?

4. முதல் ஆரிய ஆடுசி அலகாகிய கிராமத்திலிருந்து ஆட்சியின் இயல்பைத் தலைமைத்துவம், பணிகள் ஆகியவற்றின் கீழ் ஆராய்க.

3)
1. பின்வருவனவற்றுடன் தொடர்புடைய மன்னர்களைக் குறிப்பிடுக.
A - யோதகால்வாய் B - அரங்கவழி நீர்ப்பாசனம்
C. மின்னேரியாக் குளம்

2. புராதன நீர்ப்பாசன தொழில்நுட்பவியலாளர்கள் குளத்தைப் பாதுகாப்பதற்கும் அவற்றை நீண்டகாலம் பேணி வைத்திருப்பதற்கும் கைக்கொண்ட 4 நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

3. குப்தர்கால கலைகள், இலக்கியம், கல்வி ஆகியவற்றுக்கு தலா இரண்டு ஆதரவாளர்களைக் குறிப்பிட்டு விளக்குக.

## பகுதி II

1) 1. A - 1833
B - 1931
C - 1947 ஆகிய ஆண்டுகளில் பிரித்தானியர்களால் நடைமுறைப் படுத்தப்பட்ட ஆட்சி மன்றங்களின் பெயரினை தரப்பட்டுள்ள அடைப்பிலிருந்து தெரிவு செய்து A,B,C ஒழுங்கில் விடை தருக. (நாடாளுமன்ற ஆட்சி, சட்ட வாக்கக்கழக ஆட்சி, அரசுக்கழக ஆட்சி, ஜனநாயக ஆட்சி)

2) D - நாடாளுமன்றம்
E - நீதிமன்றம்
F - சர்வஜன வாக்கெடுப்பு
G - நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறை என்பவைகளை நாட்டில் நடைமுறைப்படுத்திய, அறிமுகப்படுத்திய நபர்களின் பெயர்களை, கேள்வி ஒழுங்கிலேயே குறிப்பிடுக?

3. நிர்வாகம் தொடர்பாக 1833 இல் முன்வைக்கப்பட்ட கோல்புறூக் சட்டவாக்கக் கழக ஆலோசனைகள் சிபார்சுகள் இரண்டினை குறிப்பிட்டு அவற்றினை விளக்குக.

4. 1931 ஆம் அண்டு டொனமூர் யாப்பின் படி இலங்கை வாழ் மக்கள் அநேக நன்மையான விடயங்களை பெற்றுக்கொண்டார்கள் அவ்வாறான நன்மைகள் ஏதாவது இரண்டு நன்மைகளை குறிப்பிட்டு விளக்குக.

02) 1. 1972 ஆண்டு 1 ஆவது அரசியல் குடியரசு யாப்பின் முக்கிய அம்சங்கள் , அவ் யாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் 3 குறிப்பிடுக.

2. 1978 ஆம் ஆண்டு 2 ஆவது அரசியல் யாப்பின்படி "நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி" எவ்வாறு தெரிவு செய்யப்படுவார் என்பதையும், அம்முறைகள் பற்றிய சுருக்கமான விளக்கத்தினையும் குறிப்பிடுக.

3. 1978 ஆம் ஆண்டு 2 ஆவது அரசியல் குடியரசு யாப்பின் படி அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றினை விளக்குக?

4. ஜனநாயக ஆட்சி நிலவும் நம் இலங்கை நாட்டில் "நீர் ஒரு அரசியல் தலைவராக" மக்களால் தெரிவு செய்யப்படுகின்றீர். எனவே நீர் ஓர் நம்பிக்கையின் தலைவராக, தலைவியாக நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்க எவ்வாறான செயற்பாடுகள், பணிகளை மேற்கொள்ளுவீர் என்பதனை மூன்று விடயங்களுக்கு ஊடாக விளக்குக.

# மன்னார் ஆங்கிலமையத்தில் சமுர்த்தி முகாமைத்துவ செயலமர்வு





(மன்னார்)

சமுர்த்தி முகாமையாளர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான வங்கி கணக்கு தொடர்பான பயிற்சி நெறி செயலமர்வு ஒன்று மன்னாரில் நடைபெற்றது.

இப் பயிற்சி செயலமர்வினை சமுர்த்தி மகாசங்கம் ஏற்பாடு செய்தது. இதன் ஆரம்ப நிகழ்வு கடந்த 19ஆம் திகதி மன்னார் ஆங்கில மையத்தில் நடைபெற்று நேற்றுடன் நிறைவடைந்தது. இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் குனைஸ் பாறுக் கலந்து கொண்டு நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார்.

சமுர்த்தி பயனபெறும் குடும்பங்களுக்கு சிறந்த சேவையினை வழங்கும் முகமாக இந்த பயிற்சி செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப் பயிற்சி செயலமர்வில் கொழும்பு, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் உள்ளடங்கலாக 90 பேர் கலந்து கொண்டனர்.

இப் பயிற்சிச் செயலமர்வு சமுர்த்தி அதிகார சபையின் முன்னைநாள் பணிப் பாளர் எம்.நடேசராஜா மற்றும் மன்னார் மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் கே.சசிதரன் ஆகியோரின் நெறிப்படுத்தலுடன் நடைபெற்றது

இப் பயிற்சி செயலமர்விற்கு வளவாளர்களாக ஜ.அலியார் மற்றும் கே.நேச ராஜா ஆகியோர் கடமையாற்றினர்.

# வெளிநாட்டு மாணவர்களுக்கு இலங்கையில் புலமைப்பரிசில்

(கொழும்பு)

வெளிநாட்டு மாணவர்கள் உள்நாட்டு பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்புகளினை மேற்கொள்வதற்கு புலமைப்பரிசில் வழங்க உயர்கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

உயர் கல்வி அமைச்சின் செயலாளர் டொக்டர் சுனில் நவரட்ன இது தொடர்பாக கூறுகையில் 58 நாடுகளைச் சேர்ந்த 100 மாணவர்களுக்கு 2020 ஆம் ஆண்டுக்குள் புலமைப்பரிசில் வழங்க இருப்பதாகத் தெரிவித்தார். தெரிவு செய்யப்பட்ட நாடுகளில் ஆப்கானிஸ்தான், பிரேசில், கனடா, பிரான்ஸ், எத்தியோப்பியா, மலேசியா, இந்தோனேசியா, பாகிஸ்தான், துருக்கி, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் அடங்கும்.

நீர்ப்பாசனம், புத்தசமயம், ஆயுர்வேதம் வரலாறு ஆகிய பாடநெறிக்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு இலங்கை சிறந்த நாடு, இலங்கையில் கல்வி பயில விரும்பும் மாணவர்கள் தமது நாடுகளில் உள்ள இலங்கை தூதரகத்தில் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெறலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# விசேட நடவடிக்கை

கிரிமலைக்கு யாத்திரை, சுற்றுலா வரும் பாடசாலை மாணவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் அன்னதானத்தில் விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர்கள் தமது பாடசாலை பிள்ளைகள் சுற்றுலா வருவதற்கு முன்பாக கிரிமலை சிவபூமி மடக்காரியாலயத்துடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு விபரங்களை தெரிவிக்கலாம் தொலைபேசி இலக்கம் 0213212241 அல்ல சிவபூமி மடம், கீரிமலை என்னும் முகவரியிலும் கடிதம் மூலம் தொடர்புகொள்ள முடியும். (137)

# நனசல அறிவகம் முல்லையில் திறப்பு

நாட்டிலுள்ள சகல கிராம மக்களும் கணனி அறிவைப் பெறவேண்டுமென்ற மகிந்த சிந்தனைத் திட்டத்தின் கீழ் முள்ளியவளை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நனசல அறிவகம் கடந்த 14 ஆம் திகதி திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையத்திற்குச் சுமார் 15 இலட்சம் ரூபா பெறுமதியான கணனிகள் போட்டோப்பிரதி, இயந்திரம், கவரிடும் இயந்திரம் என்பன அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதனால் இக் கிராமத்தில் வசிக்கின்ற இளைஞர், யுவதிகள நன்மையடையவுள்ளதுடன் இந் நிலையத்தின் சேவைகளையும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளமுடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது

# கைபேசி ஒலித்ததால் தண்டப்பணம் விதிப்பு

நீதிமன்றச் செயற்பாடுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது கையடக்கத் தொலைபேசி ஒலித்தமையால் தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

மன்னார் நீதிமன்ற செயற்பாடுகள் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது கையடக்கத் தொலைபேசி ஒலித்துள்ளது. இதன் காரணமாக குறித்த நபர் கைது செய்யப்பட்டு அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதன்போது குறித்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டமையினால் 1,000 ரூபா அபராதம் செலுத்துமாறு மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் உத்தரவிட்டதுடன் எச்சரிக்கை செய்து குறித்த நபரை விடுதலை செய்தார்

# மீண்டும் தலையெடுக்கும் மலேரியா நுளம்புகள்

(கொழும்பு)


மலேரியாவிலிருந்து முற்றாக விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் போதிலும் இலங்கையில் மீண்டும் அந் நோய் தலையெடுக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் இருப்பதாக புதிய தகவல்கள் கூறுகின்றன.

நாட்டின் சுகாதாரத்துறை அதிகாரிகள் இந்த விடயத்தில் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

தொடர்ச்சியாக உள்நாட்டில் 3 வருடங்கள் மலேரியா காய்ச்சல் நோயாளிகள் அடையாளம் காணப்படாத நிலையில் கடந்த 2012 ஆம் ஆண்டு மலேரியாவிலிருந்து விடுவிக்கப்பட்ட நாடாக இலங்கை தன்னை அறிவித்துக் கொண்டது.

இதன் காரணமாக உலக சுகாதார ஸ்தாபனத்தில் மலேரியா இல்லாத நாடு என்ற அந்தஸ்தையும் இலங்கை பெற்றது.

ஆனால் களனி பல்கலைக் கழகத்தினால் மேற்கொள்



எப்பட்ட ஆய்வொன்றில், கிழக்கு மாகாணத்திலுள்ள கரையோர பிரதேசங்களில் காணப்படும் நீர்நிலைகளில் மலேரியா நோயக் காவியான அனோபிலஸ் நுளம்பு காணப்படுவது கண்டறியப்பட்டுள்ளதால், இது தொடர்பாக மீண்டும் ஆய்வுகளை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

களனி பல்கலைக்கழகத்தினால் மட்டக்களப்பு வாவியை அண்மித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி, அனோபிலஸ் நுளம்பு உவர் நீரில் காணப்பட்டுள்ளது.

அனோபிலஸ் நுளம்பு உவர் நீரில் காணப்படுவது வழமைக்கு மாறானது என்று மட்டக்களப்பு பிராந்திய மலேரியா தடுப்பு நடவடிக்கைக்கான வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஐ.எம். பரீத் ஹஹமட் ரெரி வித்தார்.

2012 ஆம் ஆண்டுக்கு பின்னர் இலங்கையைச் சேர்ந்த மலேரியா நோயாளிகள் என எவரும் அடையாளம் காணப்படவில்லை. ஆனால், ஓரிருவர் நோயாளர்கள் என அடையாளம் காணப்பட்டாலும், அவர்கள் தென்னாபிரிக்கா, இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து வந்தவர்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதார சேவை அதிகாரிகள் குறிப்பிடுகின்றார்கள்.

# யு.என்.டி.பி. நிறுவனத்தால் பத்துக் கடைகள் அமைப்பு

முல்லைத்தீவு மாவட்ட திருமுறிகண்டிப் பகுதி மக்களின் வாழ்வாதாரத்தைமேம்படுத்தும் நோக்கில் யு.என்.டி.பி. நிறுவனத்தினால் பத்துக் கடைகள் புதிதாக அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

முறிகண்டியில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து தற்போது மீளக்குடியேறியுள்ள மக்களின் வாழ்வாதார நிலையினைக் கருத்திற்கொண்டு குறித்த நிறுவனத்தினால் புதிதாக பத்துக் கடைகள் அமைக்கப்பட்டு அவற்றில் 9 கடைகளைத் தனியாருக்கும் ஒரு கடையினை பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்கும் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும் இத்தகைய செயற்பாடுகளினால் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள ஏதுவாக உள்ளதாகவும் பயனாளிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்

# 100 ஹெக்டேயர் நிலப்பரப்பில் யாழில் உருளைக்கிழங்கு செய்கை



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் 100 ஹெக்டேயர் நிலப்பரப்பில் உருளைக்கிழங்கு செய்கையை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தேச மதிப்பீட்டின் அடிப்படையில் உருளைக் கிழங்குச் செய்கைக்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் மேற்கொண்டிருப்பதாகவும் 200 மெற்றிக் தொன் விதை உருளைக் கிழங்கு முதற்கட்டமாக 50 வீத மானிய விலையில் வழங்கப்படவிருப்பதாகவும் யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கி. சிறிபாலசுந்தரம் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் காலபோக உருளைக் கிழங்குச் செய்கையில் விவசாயிகள் ஆர்வத்தோடு ஈடுபடவுள்ளனர். கடந்த வருடம் 40 ஹெக்டேயர் நிலப்பரப்பில் உருளைக் கிழங்குச் செய்கை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இந்த வருடம் 60 ஹெக்டேயரால் அதிகரிக்கப்பட்டு 100 ஹெக்டேயர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப் படவுள்ளது.

யாழ். மாவட்ட உருளைக் கிழங்குச் செய்கையாளருக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகள் மற்றும் குறைபாடுகளைக் இல்லாமல் செய்வதில் மத்திய விவசாய அமைச்சும் பொருத்தமான முறையில் ஒத்துழைத்து வருவதோடு விதை உருளைக் கிழங்கை மானிய விலையில் யாழ். மாவட்டத்துக்கு வழங்கு வதற்குரிய நிதியையும் ஒதுக்கீடு செய்துள்ளது.

யாழ். மாவட்டத்துக்கு மானிய விலையில் வழங்கப்படும் விதை உருளைக்கிழங்கில் 120 மெற்றிக் தொன் ரெட்லை சோடா "60 மெற்றிக் தொன் அனோவா "20 மெற்றிக் தொன் கல்வைட் ரகங்கள் உள்ளடங்கிய நிலையில் 200 மெற்றிக் தொன் நவம்பர் மாதநடுப் பகுதியில் எடுத்துவரப்படும் என்றார்.

யாழ். மாவட்டத்தில் காலபோக உருளைக்கிழங்குச் செய்கையாக பெரும்போகயின் பின்னர் நவம்பர் பிற்பகுதியில் மற்றும் டிசம்பர் முற்பகுதியில் உருளைக்கிழங்கு நடுகை மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது

# தாயின் துன்புறுத்தலால் நடுத்தெருவில் சிறுமி

முல்லைத்தீவு கள்ளப்பாட்டு பகுதியில் தாயினால் கடுமையாக துன்புறுத்தப்பட்ட 16 வயது சிறுமி ஒருவர் மாலை ஆறு மணிக்கு வீடை விட்டு வெளியேறி முல்லைத்தீவு கள்ளப்பாட்டில் உள்ள பாடசாலை கட்டடத்திற்கு வெளியே விடியும் வரை தங்கியுள்ளார்.

இச்சிறுமியை முல்லைத்தீவு பொலிஸார் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

மேற்படி சிறுமியை பாரதி சிறுவர் இல்லத்தில் சேர்க்குமாறு சிறுவர் நன்னடத்தை அதிகாரியின் அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா உத்தரவிட்டுள்ளார். (170)

# கொமன் வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது

## தமிழக சட்டசபையில் தீர்மானம்

(சென்னை)


இலங்கையில் எதிர்வரும் 15 ஆம் திகதி நடக்கவிருக்கும் கொமன் வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்க கூடாது என்றும், இம்மாநாட்டை புறக்கணிக்க வேண்டும் என்றும், தமிழக சட்டசபையில் தீர்மானத்தை முதல்வர் ஜெயலலிதா முன்மொழிந்து தாக்கல் செய்தார். இந்த தீர்மானம் அனைத்துக் கட்சி ஆதரவுடன் ஒருமனதாக நிறைவேற்றப் பட்டது.

இலங்கைத்தமிழர்கள் கொல்லப்பட்டதை கண்டித்து தமிழக முதல்வர் ஜெயலலிதா தொடர்ந்து கண்டனம் தெரிவித்து வருகிறார். கொமன் வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்க கூடாது என பலமுறை அவர் வலியுறுத்தி வந்துள்ளார். மேலும் பிரதமருக்கு கடிதமும் எழுதினார். ஆனால் மத்திய அரசு தரப்பில் இருந்து இது வரை இந்த விஷயத்தில் எந்தவொரு தெளிவான முடிவும் அறிவிக்கப்படவில்லை. இந்நிலையில் நேற்றைய தினம் தமிழக சட்டசபையில் இது தொடர்பாக முதல்வர் ஜெயலலிதா ஒரு தீர்மானத்தை கொண்டு வந்தார்.

இந்தத் தீர்மானத்தில் தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பு அளித்து, கொமன் வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்க கூடாது. பெயரளவிற்கு கூட பிரதிநிதிகள் யாரும் பங்கேற்க கூடாது. சிங்களர்களுக்கு இணையாக தமிழர்கள் வாழ வழி செய்ய வேண்டும் இது தொடர்பாக இலங்கை நடவடிக்கை எடுக்கவில்லை. எடுக்கும்வரை இலங்கையை காமன்வெல்த் நாடுகளில் இருந்து தற்காலிகமாக நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தியாவின் முடிவை இலங்கைக்கு இந்தியா உடனே தெரிவிக்க வேண்டும். இது தொடர்பாக மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தின் மீது அனைத்துக் கட்சி சார்பிலும் உறுப்பினர்கள் பேசினர். தொடர்ந்து ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# மங்கள்யான் விண்கலம் அடுத்த மாதம் விண்ணில்



செவ்வாய்க் கிரகத்தை ஆராய்வதற்காக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் அனுப்பவுள்ள மங்கள்யான் எனும் விண்கலம் அடுத்த மாதம் விண்ணுக்கு ஏவப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 5 ஆம் திகதி ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து இந்த விண்கலம் ஏவப்படவுள்ளதாக இந்தி... விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் தெரிவித்துள்ளது.

3350 கிலோ எடையுள்ள இந்த விண்கலத்தில் அறிவியல் ஆய்வுக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் செவ்வாயின் சுற்றுச்சூழல், கனிய வளம் உள்ளிட்டவை குறித்து ஆய்வு செய்யப் படும் எனவும் இஸ்ரோ குறிப்பிட்டுள்ளது.

பூமியிலிருந்து ஏவப்பட்ட பின்னர் 10 மாதங்கள் விண்வெளியில் பயணம் செய்து அடுத்த வருடம் செப்ரெடம்பர் மாதம் செவ்வாய சுற்றுவட்டப்பாதையை இந்த விண்கலம் சென்றடையும் எனவும் இஸ்ரோ தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்த் விண்கலம் செவ்வாய் கிரகத்தை சுற்றி வந்து அங்கு மனிதர்கள் உயிர் வாழ்வதற்கான சூழ்நிலைகள் உள்ளனவா என்பது குறித்து ஆராயவுள்ளது

# அணுமின் நிலைய கதிர்வீச்சு சந்தேகத்தை தீர்த்தார் ஜப்பான் பிரதமர்

உலகச் செய்திகள்




அணுமின் நிலைய கதிர்வீச்சு குறித்து மக்களின் சந்தேகத்தைத் தீர்ப்பதற்காக புகுஷிமா அணுஉலை அருகே பிடிக்கப்பட்ட மீன் உள்ளிட்ட கடல் உணவுகளை பொதுமக்கள் முன்னிலையில் சாப்பிட்டார் ஜப்பான் பிரதமர்.

கடந்த 2011 ஆம் ஆண்டு ஜப்பானில் பூகம்பம் மற்றும் சுனாமி ஏற்பட்டது. இதில் புகுஷிமா அணு மின் நிலையத்தின் அணு உலைகள் வெடித்து, கதிர்வீச்சு ஏற்பட்டது. பின்னர் உடனடியாக நிபுணர்களை கொண்டு அந்த கதிர்வீச்சு வெளியாகாமல் சீரமைக்கப் பட்டது.

ஆனபோதும், இன்னும் கதிர் வீச்சு பயத்தால் அணு உலைப் பகுதியில் பிடிக்கப்படும் மீன் வகைகளை சாப்பிட மக்களும், பிற உலக நாடுகளும் அஞ்சுகின்றன. எனவே, அவர்களின் அச்சத்தைப் போக்கிடும் வகையில் ஜப்பான் பிரதமர் ஜின்ஜோஅபே, புகுஷிமா அருகே பிடிக்கப்பட்ட ஆக்டோபஸ் உள்ளிட்ட பல மீன் உணவு வகைகளை பொது மக்கள் முன்னிலையில் சாப்பிட்டு காட்டினார். கடல் உணவுகளைச் சாப்பிட்ட பின்னர், புகுஷிமா பகுதியில் உள்ள மீன் உள்ளிட்ட கடல் உணவு வகைகள் நன்றாகவும், பாதுகாப்பாகவும் உள்ளது" என நம்பிக்கைத் தெரிவித்தார் ஜின்ஜோ.

# எனதுபாட்டி, தந்தையைப் போல் நானும் எதிரிகளால் கொல்லப்படலாம் — ராகுல் காந்தி



(ராஜஸ்தான்)

"என் பாட்டி மற்றும் என் தந்தை ஆகியோர் கொல்லப்பட்டதைப்போல நானும் கொல்லப்படலாம் ஆனால் அதற்காக நான் அஞ்சமாட்டேன்" என்று காங்கிரஸ் துணைத்தலைவர் ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.


ராஜஸ்தான் மாநிலம் சூரு நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற பிரசார பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டபோது ராகுல் இதனைத் தெரிவித்தார்.

ஒருவர் கொலை செய்யப்படுவதற்கு காரணம் கோபமும் வெறுப்புணர்வுமே. பஞ்சாப் மக்களில் ஒரு பிரிவினரின் வெறுப்புணர்வே என் பாட்டி கொலை செய்யப்படுவதற்கு காரணம். விடுதலைப் புலிகளின் வெறுப்புணர்வால் என் தந்தையார் கொலை செய்யப்பட்டார். அதே போல என் எதிரிகளால் நானும் கொலை செய்யப்படலாம். அதற்காக நான் கவலைப்படமாட்டேன்.

எனக்கு பலவகைகளில் நண்பர்களாக இருந்த பீன்ட்சிங், சத்வந்த் சிங் ஆகியோர் விளையாட்டு உள்ளிட்ட பல பயிற்சிகள் அளித்துள்ளனர். 1984ஆம் ஆண்டு நான் பீன்ட் சிங்கை சந்தித்தபோது, அவர் என்னிடம், "உன் பாட்டி எங்கே தூங்குவார்? அவருக்கு போதுமான பாதுகாப்பு உள்ளதா? யாராவது உங்கள் மீது வெடிகுண்டு வீசினால் எப்படி தரையில் படுத்து தப்புவீர்கள் என்று கேட்டார்.

அவர் எந்த அர்த்தத்தில் பேசினார் என்பது எனக்கு அப்போது புரியவில்லை. அதன் பொருள் சில ஆண்டுகளுக்குப் பிறகுதான் எனக்கு புரிந்தது" என்று கூறினார்.

# ஆளில்லா விமானத் தாக்கு; முடிவுக்கு கொண்டுவர வலியுறுத்து



ஆளில்லா விமானத் தாக்குதல்களை முடிவுக்கு கொண்டுவருமாறு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவை, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் வலியுறுத்தியுள்ளார்.

இரண்டு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையில் வெள்ளை மாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இந்தக் கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

அடிக்கடி சீர்குலையும் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளைப் பலப்படுத்துவது தொடர்பிலும் இரண்டு நாட்டுத் தலைவர்கள் இந்த சந்திப்பில் உறுதியளித்துள்ளனர்.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் பதற்றம் மற்றும் புரிந்துணர்வின்மை தொடர்ந்தும் நிலவிவருவதை பராக் ஒபாமா ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க ஆளில்லா விமானத் தாக்குதல்கள் தமது இறையாண்மையை மீறல் செயல் என பாகிஸ்தான் தொடர்ந்தும் தெரிவித்து வருகின்றனமை குறிப்பிடத்தக்கது.

எனினும் இது சவாலான ஒன்றெனக் குறிப்பிட்ட பராக் ஒபாமா இலகுவான விடயம் அல்லவெனவும் சுட்டிக்காட்டியுள்ளார்

இணைந்து பணியாற்றுவதற்கும், இரண்டுநாடுகளுக்கும் இடையில் பதற்றத்தை விடுத்து பலத்தை உருவாக்குவதை உறுதிப்படுத்த வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

பாகிஸ்தானின் இறையாண்மையை மதிக்கும் வழிமுறைகள் மற்றும் இரண்டு நாடுகளினதும் அதிக அக்கறையான விடயங்களுக்கு மதிப்பளித்தல் போன்றவை குறித்து ஒத்துழைப்புடன் செயற்படுவதாகவும் பராக் ஒபாமா உறுதியளித்துள்ளார்.

பயங்கரவாதத்தை தடுப்பது தொடர்பில் ஒத்துழைப்புக்களைப் பலப்படுத்துவதற்கு இரண்டு தரப்பும் இணக்கம் கண்டுள்ளதாக பாகிஸ்தான் பிரதமர் கூறியுள்ளார்.

# இந்தியா-சீன எல்லைப்பிரச்சினை விரைவில் தீர்வு காணப்படும் மன்மோகன் நம்பிக்கை



இந்தியா - சீனா இடையேயான எல்லைப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என பிரதமர் மன்மோகன்சிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சீனத் தலைநகர் பீஜிங்கில் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய பள்ளியில் மன்மோகன்சிங் சிறப்புரையாற்றினார்.

இதில் உலக அளவில் உற்பத்தித்துறையில் சீனாவும், சேவைத் துறையில் இந்தியாவும் முக்கிய பங்காற்றி வருவதாக தெரிவித்தார். இரு நாடுகளிடையே பின்பற்றப்படும் தடையில்லா வணிகத்தால் பொருளாதாரத்தில் உன்னத நிலையை எட்டி உள்ளதை சுட்டிக்காட்டினார்.

அத்துடன் சீனாவுடன் உறவை மேம்படுத்துவதற்கான 6 புதிய கொள்கைகளையும் பிரதமர் மன்மோகன்சிங் அறிவித்தார்.

இந்திய சீன எல்லைப்பகுதிகளில் அமைதியை நிலை நாட்டுவதற்கு முக்கியத்துவம் அளிப்பது உள்ளிட்ட அம்சங்கள் இந்த கொள்கையில் இடம்பெற்றுள்ளன.

# காணாமற் போனோர் பதிவு வடக்கில் 1800 முறைப்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற காணாமற் போனோர்கள் தொடர்பான மூன்று நாள் பதிவின் போது தவறவிட்டவர்களின் மேலும் 60 முறைப்பாடுகள் நேற்று வரை கிடைக்கப்பெற்றிருப்பதாகவும் இதற்கான பதிவுகளை மேற்கொண்டுள்ள மன்னார் பிரஜைகள் குழுவின் அலுவலர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய தினங்கள் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த காணாமற் போனவர்களது பதிவுகள் மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இதன்போது 300 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்ததாகவும் அத்துடன் யாழ்ப்பாணம், கிளிநொச்சி உட்பட வடக்கில் ஆயிரத்து 800 வரையிலான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்தாகவும் மன்னார் பிரஜைகள் குழு தெரிவித்திருந்தது.

இந்தத் தினங்களில் பதிவுகளை மேற்கொள்ளாதவர்களுக்கு அந்தந்த மாவட்டங்களில் தொடர்ந்து பதிவுகளை மேற்கொள்ளும் வகையில் ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாகவும் பிரஜைகள் குழு தெரிவித்திருந்தது.

இந்நிலையிலேயே யாழ். மாவட்டத்தில் இவ்வாறு பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் 60 பேரின் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வடக்கில் ஏனைய மாவட்டங்களில் இவ்வாறு தவறவிட்டவர்களுக்கான பதிவுகளும் நடைபெறுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இவை எல்லா முறைப்பாடுகளும் சேர்த்து கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படவிருப்பதாகவும் மன்னார் பிரஜைகள் குழு தெரிவித்துள்ளது. (பா)

## சூதாட்ட அனுமதி சட்டமூலத்தில் திருத்தம்

(கொழும்பு)

சூதாட்டத்தை சட்டபூர்வமாக்கும் நோக்கில் கொண்டு வரப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்ட செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழான 2 கட்டளைகளை அரசாங்கம் வாபஸ் பெற்றுள்ளது.

செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழான 2 கட்டளைகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையில், இந்த கட்டளைகள் கெசினோவை சட்டபூர்வமாக்கும் நோக்கில் கொண்டுவரப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியிருந்தது.

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரினால் கட்டளைகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் தயாரிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# வலி.தென்மேற்கு பிரதேசசபை தவிசாளர் பதவி துறப்பு

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன் இன்றைய தினம் பதவி விலகவுள்ளதாக தெரிய வருகின்றது.

இது தொடர்பாக கட்சியின் பொதுச் செயலாளருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளதாக வலி. தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன் தெரிவித்துள்ளார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பிரதேசத்தில் அதிகூடியதான 2 ஆயிரத்து 850 வாக்குகளைப் பெற்று ஜெபநேசன் தவிசாளராக பதவியேற்றமை குறிப்பிடத்தக்கது.

ஒரு சில ஆளும்தரப்பு உறுப்பினர்களின் பதவி மோகம் மற்றும் ஒத்துழையாமை காரணமாக பிரதேச சபை நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டாலும் தவிசாளர் தனக்கிருக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தியே பிரதேசத்தில் இதுவரை காலமும் செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனதிராசா தெரிவிக்கையில் இரு தரப்பினரையும் இணங்கிச் செல்வதற்கான ஆலோசனைகள் இடம்பெற்று வருவதாகவும் இது குறித்து இன்னும் முடிவெடுக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க தவிசாளர் தொடர்பாக எதுவித முடிவும் எடுக்கப்படாத நிலையில் ஏனைய ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் தவிசாளர் பதவிக்காகவும், துணைத் தவிசாளர் பதவிக்கும் தமக்கிடையே முட்டி மோதி வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (48)

# எழிலன் வழக்கு விசாரணை; முல்லை நீதிமன்றில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசாங்கத்தின் உத்தரவாதத்தையடுத்து இராணுவத்தினரிடம் சரணடைந்து, பின்னர் தகவல்கள் ஏதும் தெரியாதுள்ள விடுதலைப் புலிகளின் முன்னாள் திருகோணமலை அரசியற்துறை பொறுப்பாளர் எழிலன் உட்பட 5 பேர் தொடர்பான விசாரணைகள் வரும் டிசம்பர் மாதம் 2ஆம் 3 ஆம் திகதிகளில் நடைபெறும் என முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் நேற்று அறிவித்திருக்கின்றது.

வவுனியா மேல் நீதிமன்றத்தில் இவர்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டிருந்த ஆட்கொணர்வு மனுக்களைப் பரிசீலனை செய்த மேல் நீதிமன்ற நீதிபதி, அவர்கள் தொடர்பான சம்பவம் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெற்றிருப்பதனால், அதுகுறித்து விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்திற்கு உத்தரவிட்டிருந்தார்.

இதனையடுத்து இந்த வழக்குகள் நேற்று முல்லைத்தீவு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது மனுதார்கள் சார்பில் ஆஜராகியிருந்த மூத்த சட்டத்தரணி கே.எஸ்.ரட்னவேல், இந்த விசாரணைகள் துரிதமாக நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துக் கூறி, டிசம்பர் மாதம் 2 ஆம் 3 ஆம் திகதிகளில் தொடர்ச்சியாக இந்த விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

அதனை ஏற்றுக்கொண்ட முல்லைத்தீவு நீதவான் எம். கணேசராஜா, இந்த விசாரணைகள் டிசம்பர் 2 ஆம் 3 ஆம் திகதிகளில் நடைபெறும் என தெரிவித்துள்ளார்.

இதன்போது நீதிமன்றத்தில் அரச தரப்பபில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி, இந்த விசாரணைகளின்போது இராணுவத்தினர் சார்பில் ஆஜராகுவதற்கென, சட்டமா அதிபர் விசேடமாக ஒரு சட்டத்தரணியை அனுப்பி வைக்கவுள்ளார் என தெரிவித்துள்ளார்.

## காணி, பொலிஸ்...

மேற்படி சபைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

ஆனால் அன்றைய ஜனாதிபதி தமிழ்பேசும் மக்களிற்கு எந்த விதமான சலுகைகளையும் தான் கொடுக்கவில்லை எனச் சிங்கள மக்களுக்கு எடுத்துக் காட்டும் விதத்திலான மாகாண சபைகளை சகல மாகாணங்களுக்கும் அறிமுகம் செய்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் சேர்ந்தே ஒரு மாகாணசபை ஒதுக்கப்பட்டதுடன், தமிழ்பேசும் மக்கள் வாழும் இடங்களிற்கு அதிகாரப் பகிர்வினை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திலேயே இவ்வாறு மாகாணசபை வகுக்கப்பட்டிருந்தமை தெரிய வருகின்றது.

எமது மாகாணம் போரினால் பாதிக்கப்பட்டு இருப்பதினால், ஏனைய மாகாண மக்களுடன் சமமாக வாழ்வதற்கு எமது மாகாணத்திற்காக ஒதுக்கப்படும் நிதி மற்றைய மாகாணங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒதுக்கப்படும் நிதித்தொகையினை விட பன்மடங்காக அதிகரிக்கப்பட வேண்டும்.

ஒரு தாய்க்கு ஒன்பது குழந்தைகள் இருக்கும்போது அதில் ஒரு குழந்தை சற்று ஊட்டக்குறைவுடன் காணப்பட்டால், தாயானவள் அந்த குழந்தையை சற்றுக் கூடிய சிரத்தையுடன் கவனிப்பாள்.

எனவே அரசாங்கம் போரினால் பாதிக்கப்பட்ட எமது மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வடமாகாண சபைக்குப் போதியளவு நிதி உதவிகளை ஒதுக்குவது சிறந்ததென்று கருதுகின்றேன்.

மத்திய அரசாங்கம் அதிகாரப் பரவலின் அடிப்படையினைக் கைவிட்டு, மாகாணங்கள் மத்திய அரசை முதன்மைப்படுத்தி தமக்கு அனுசரணையாகவே இயங்க வேண்டும் என்று கூறுவதை நாங்கள் அவதானிக்கின்றோம்.

அதிகாரப்பகிர்வானது மத்திய அரசாங்கத்தைப் பலப்படுத்தவோ அதனை முதன்மைப்படுத்தவோ வகுக்கப்பட்ட ஒரு உபாயமல்ல. மாறாக மத்திய அரசாங்கம் வலிமை குறைந்த மாகாண மக்களை எழுப்பி தங்கள் கால்களில் அவர்களை நிற்க வைக்கவேண்டும் என்ற எண்ணத்திலே வகுக்கப்பட்டது.

எனவே எமது மாகாண சபைகளுக்கு மத்திய அரசாங்கம் அனுசரணையாக இயங்க வேண்டுமே தவிர மத்திய அரசாங்கத்திற்கு தோள்கொடுக்க மாகாண சபைகள் முன்வரவேண்டும் என்று எதிர்பார்ப்பது அதிகாரப்பரவலின் தார்ப்பரியத்தினை மத்திய அரசாங்கம் அறிய முற்படவில்லை என்ற கருத்தையே வெளிப்படுத்தும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களிற்கு அத்தியாவசியமான உரித்துக்கள் மற்றைய ஏழு மாகாணங்களுக்கும் தேவைப்படாமல் இருக்கலாம். காணி சம்பந்தமாகவும் மக்களின் பாதுகாப்பு சம்பந்தமாகவும் மாகாண சபை ஒன்று எடுக்கவேண்டிய பொறுப்பு அந்தந்த மாகாண சபையின் நிலையை ஒட்டியதே தவிர சகலருக்கும் ஒரேநிலை இருப்பதாக கொள்வது தவறாகும்.

வடமாகாணத்தின் காணிகள் சூறையாடப்படுவதுடன், மக்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கு முகங்கொடுக்கவே சட்டவாக்கங்களில் மாகாணசபைக்கு பொலிஸ் அதிகாரங்களும் காணி அதிகாரங்களும் கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றை நாம் சட்டப்படி நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

எமது மத்திய அரசாங்கம் வடமாகாண சபைக்கு இவ்வாறான அதிகாரங்களை பகிர்ந்தளிக்கவேண்டிய அத்தியாவசியத்தை உணர்ந்து செயற்படுவார்கள் என்று நம்புகின்றேன்.

13 ஆவது திருத்தச்சட்டத்தின் கீழ் மத்திய அரசாங்கத்திற்கு போதிய செல்வாக்கை கைவசம் வைத்துக்கொண்டே மேற்படி அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அவற்றையாவது வழங்குவதில் தயக்கங்காட்டக்கூடாது.

தயக்கம் காட்டினால் சிறுபான்மை இன மக்கள் தமது வாழ்க்கையை சீரமைத்துச் செல்வதை மத்திய அரசாங்கம் விரும்பவில்லை என்ற ஒரு கருத்தை உலகறியச் செய்து விடும். எனவே இந்த பழிக்கு ஆளாவதைத் தவிர்த்து மத்திய அரசாங்கம் செயற்படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபைக்கு புதிதாக தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களிற்கான செயலமர்வு நேற்று யாழ். ரில்கோ சிற்றி ஹோட்டலில் நடைபெற்றது. உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சினாலேயே இந்தச் செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த செயலமர்வில் மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி மற்றும் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## சிறுகைத்தொழில்...

மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி உரையாற்றும் போது, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது வழிகாட்டலில் இங்கு அமைக்கப்படும் கைப்பணிக்கிராமமானது, இப்பகுதி கைப்பணியாளர்களுக்கு வரப்பிரசாதமாக அமையும் என்றும், இதேபோன்று நாடளாவிய ரீதியில் தேசிய கைப்பணித் துறையை வளர்த்தெடுப்பதற்கு அமைச்சர் அயராது உழைத்து வருவதாகவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, அமைச்சரினாலும், இந்தியத் தூதுவரினாலும் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டதுடன், கைப்பணிக்கிராமத்தின் பெயர்ப்பலகையை இந்தியத் தூதுவர் திரை நீக்கம் செய்து வைத்தார்.

இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் இக்கைப்பணிக் கிராமம் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். தேசிய அருங்கலைகள் பேரவையின் தலைவர் புத்தி கீர்த்திசேன மற்றும் அதிகாரிகள், இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தின் அதிகாரிகள், கைப்பணியாளர்கள் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## கன்னி அமர்வு...

மாகாணசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே கைதடியில் அமைந்துள்ள இந்தக் கட்டடத்திற்கான பால் காய்ச்சும் நிகழ்வு முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் காலை நடைபெற்றிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

வடக்கு மாகாணசபையின் திறப்பு விழா மற்றும் கன்னியமர்வு தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்காக தென்னிலங்கை செய்தியாளர்கள் பலர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு வந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (பா)

## பொலிஸ் அதிகாரம்...

இவ் அதிகாரங்களை எழுத்து மூலம் முதலமைச்சருக்கு வழங்கி அவரது கடமையை செய்ய வழிவிட வேண்டும் அத்துடன் மாவீரர்களின் துயிலும் இல்லங்களை தரைமட்டமாக்கியது சர்வதேச சட்டங்களை மீறிய செயலாகும்.

சர்வதேச சட்டங்களுக்கு அமைய கல்லறைகளை இடிக்க முடியாது. இறுதியுத்தத்தில் கொல்லப்பட்ட மக்களுக்காகவும் போராளிகளுக்காவும் நினைவுச்சின்னம் கட்டப்பட வேண்டியது அவசியமானதாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நெடுங்கேணியில் புதையல்; தோண்டிய பலர் கைது

(நெடுங்கேணி)

நெடுங்கேணி மகிலமோட்டை கிராமக்காட்டுப்பகுதியில் 300 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமை வாய்ந்த கட்டடம் ஒன்று அமைந்த இடத்தினை வெளி மாவட்டத்தில் இருந்து வந்த நபர்களும் சூடுவெந்த கிராமத்திலுள்ள நபர்களும் இணைந்து புதையல் இருப்பதாகக் கருதி இதனை ஆறடித்தாழ்வில் அகண்ட வேளையில்,

நெடுங்கேணிப்பொலிஸாரால் அவர்கள் கைது செய்யப்பட்டதுடன், அவர்கள் புதையல் தோண்டுவதற்குப் பயன்படுத்திய ஆயுதங்களும் துவிச்சக்கரவண்டி. மோட்டார்சைக்கிள் போன்றவற்றையும் கைப்பற்றியதோடு, மீதி நபர்களை தேடும் பணியில் தாம் ஈடுபட்டு வருவதாக நெடுங்கேணி பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (40)

# இலங்கை இளைஞர்கள் திறமைசாலிகள் சீன இளைஞர் சம்மேளனம் பாராட்டு

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் உள்ள பொருளாதார, கலாசார மற்றும் கல்விப் பிணைப்புகளை வலுப்படுத்துவதற்காக இலங்கை மற்றும் சீன இளைஞர்களுக்கு இடையிலான தொடர்புகளை சக்திமிக்கதாக்க வேண்டும் என சீன அரசாங்கத்தின் இளைஞர் சம்மேளனத்தின் தலைவர் ஹீ ஜுங்கி தெரிவித்தார்.

மகரகமவில் உள்ள இளைஞர் சேவைகள் மன்றத்தில் அண்மையில் நடைபெற்ற இலங்கை இளைஞர் நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் இளைஞர்கள் வலுமிக்க பலமான நபர்கள். இந்த இளைஞர்களின் திறமைகளுக்காக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இளைஞர் நாடாளுமன்றம் இதற்கு சிறந்த உதாரணமாகும்.

தொழில் கல்வியை கற்பதற்காக இளைஞர்கள் அதிகளவில் ஊக்குவிக்கப்பட வேண்டும். சீன அரசாங்கம், இலங்கை இளைஞர்களுக்கு தொழில் கல்வி மற்றும் பயிற்சிகளை வழங்க சந்தர்ப்பமளிக்கும் என்றார்.



நாளை மறுதினம் திறந்து வைக்கப்படவுள்ள கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக பாதையில் நேற்று நடைப் பயணம் ஒன்று நடைபெற்றது.

• துறைமுகம், பெருந்தெருக்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த நடைப் பயணத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச கலந்து கொண்டார்.

# பெண்கள் மீது வன்முறை; கண்டித்து நேற்று ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிராகவும் கடந்த வாரம் யாழில் ஒரு பெண் படுகொலையான சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிகள் கைது செய்யப்பட வேண்டும் எனக்கோரியும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று நடைபெற்றது.

யாழ் - கண்டி நெடுஞ்சாலையில் யாழ்.வளைவுக்கு அருகில் நேற்று மாலை 4 மணியளவில் உயிரிழந்த பெண்ணின் உறவினர்கள், அயலவர்கள் மற்றும் பெண்கள் அமைப்பினை சேர்ந்தவர்கள் இப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



கடந்த 17 ஆம் திகதி நாச்சிமார் கோவில் தேர்முட்டியினுள் இருந்து அழுகிய நிலையில் பெண்ணின் சடலம் ஒன்று மீட்கப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்ட பெண் அரியாலை நெடுங்குளத்தை சேர்ந்த மார்க்கண்டு லோகராணி (வயது - 45) என்பவராவார். குறித்த பெண்ணின் படுகொலை சம்பவம் தொடர்பாக துரித விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றே இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

குறித்த பெண் சடலமாக மீட்கப்பட்டது தொடர்பில் பல சந்தேகங்கள் உண்டு. இவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். பலாத்காரத்திற்கு பின்னரே கொலை செய்யப்பட்டு இருக்கிறார் என சந்தேகிக்கின்றோம்.

இந்த படுகொலை சம்பவம் தொடர்பாக துரித விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பவத்துடன் தொடர்புடையவர்கள் விரைவில் கைது செய்யப்பட வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

## புத்தக கண்காட்சி

(மானிப்பாய்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட நூலகங்கள் இணைந்து நடாத்தும் புத்தகக் கண்காட்சி இன்றும், நாளையும் வலி.தென் மேற்கு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இடம் பெறவுள்ளது. (48)

# வாஸிற்கு எதிராக வழக்கு

முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தனவிற்கு எதிராக மேல் நீதிமன்றில் மாற்றொரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றில் நேற்று அறிவித்தார்.

மாலபே தனியார் பல்கலைக்கழக மாணவன் நிபுண ராமணாயக்கவை கடத்திச் சென்று தாக்குதல் நடத்தியமைக்கு எதிராகவே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என சட்டமா அதிபர் தெரிவித்தார்.

வாஸ் குனவர்த்தனவிற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய அறிவுறுத்துமாறு கோரி நிபுண ராமணாயக்க மற்றும் அவரது தாயார் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு விசாரணைகளின் போதே சட்டமா அதிபர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# அச்சுவேலி முதியவரின் சடலம் பல்கலைக்கழகத்துக்கு தானம்

## உறவினர்களின் மன உழைச்சலுக்கு வருந்துகிறோம்

(கைதடி)

கைதடி முதியோர் இல்லத்தில் அனுமதிக்கப்பட்டு கடந்த 11.10.2013 அன்று மரணமடைந்த அச்சுவேலி வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி தம்பிராசா (வயது - 83) என்பவர் குடும்பத்தைப் பிரிந்து வருமானமற்ற நிலையில் பராமரிப்பின்றி வாழ்கின்றார். எனத்தெரிவித்தே முதியோர் இல்லத்தில் உறவினர்களால் அனுமதிக்கப்பட்டாதாக முதியோர் இல்ல அத்தியட்சகர் கிருபாகரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

அச்சுவேலி வடக்கு சித்திர வேலாயுதர் தேவஸ்தான தாபரிப்பாளர், பூசகர் மற்றும் அச்சுவேலி வடக்கு கிராம சேவையாளர், பிரதேச செயலர், சமூக சேவை உத்தியோகத்தர் ஆகியோரின் சிபார்சுடன் கடந்த யூன் மாதம் 13 ஆம் திகதி முதியோர் இல்லத்தில் இணைக்கப்பட்டார். அவர் தான் உயிரிழந்த பின்னர் தனது உடலை யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் ஒப்படைக்குமாறு தெரிவித்த நிலையில் கடந்த 11.10.2013 அன்று இவர் உயிரிழந்த நிலையில் மறுநாளான கடந்த 12.10. 2013 அன்று இவரது உறவினர்களான அன்னராசா விமல்ராசா, குட்டி ஜெகசோதி ஆகிய இருவர் முன்னிலையில் வைத்து மருத்துவபீடத்திற்கு உடலம் கையளிக்கப்பட்டது.

இவர் முதியோர் இல்லத்தில் தங்கியிருந்த காலப்பகுதியில் அவர் விவாகரத்து செய்த அவரது மனைவி மற்றும் மகள் அவரை வந்து பார்க்கவில்லையெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவரின் மரணம் தொடர்பாக வெளிவந்த செய்தி குறித்து அவரது மகளுக்கு ஏற்பட்ட மன உழைச்சலுக்கு தினமுரசு வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.


## மனம் மகிழ வாழ்த்துகின்றோம்



ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் வட மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவருமாகிய கௌரவ கந்தசாமி கமலேந்திரன் அவர்கள் இன்று வடமாகாண சபையின் முதலாவது கூட்ட அமர்வில் கலந்து கொள்வதையிட்டும் அவரது மக்கள் சேவைகள் தொடரவும், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரும், ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் தலைவருமாகிய எமது கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்கள் வழியில் பயணிக்க எமது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நெடுந்தீவு உறவுகள்

(C/3145)


# சாரணர் விழா

(யாழ்.நிருபர்)

சாரணிய இயக்கத்தின் 7 ஆவது யாழ்ப்பாண சாரணர் துருப்பு 70 ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று முற்பகல் 10.30 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

சாரணன் ச.அமலராஜ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஜனாதிபதிச் சாரணன் சதானந்தன் ஆனந் பிரதமவிருந்தினராகவும், நல்லூர், யாழ்ப்பாண கோட்டங்களின் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுமார் சிறப்பு விருந்தினரகவும் கலந்துகொள்கின்றனர்.

யாழ்.மாவட்ட சாரண ஆணையாளர் செ.தேவரஞ்சன், தொழில் முனைவர் சி.ராஜ்குமார் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாக கலந்துகொள்கின்றனர்.

இந்நிகழ்வில் சாரணிய இணையத்தளம் ஆரம்பித்து வைக்கப்படுவதோடு நூல் வெளியிடும் இடம்பெறும். (10)

# மரண அறிவித்தல்



செல்வி

**ஷமிக்கா அனஸ்ரின் ஸ்ரீபராஜ்**

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ஷமிக்கா அனஸ்ரின் ஸ்ரீபராஜ் 24.10.2013 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அனஸ்ரின் தீபராஜ் (ராஜன்), கிஷானி ஆகியோரின் செல்வப்புதல்வியும், எட்மண்ட், ராசாத்தி ஆகியோரின் அன்புப் பேத்தியும், தர்மசீலன், லிண்டா, ராகவன், லக்சி, சாலு ஆகியோரின் பெறாமகளும், கரிசின் அன்பு மருமகளும், சைரிக்கா, டிசூரிக்கா, மக்ஸ்சிக்கா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 25.10.2013 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்து பின்னர் கொஞ்சேஞ்சி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

807, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
(தொ.இல.0776003151)

(இ)

தகவல் :
குடும்பத்தினர்.

# அரச வாகனம் துஷ்பிரயோகம்; கரவெட்டியில் அடிதடி

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச சபையின் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கும், பிரதேச சபை உத்தியோகத்தருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றுள்ளது. நேற்று இரவு 7.30 மணியளவில் இடம்பெறற் இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

குறித்த பிரதேச சபை அலுவலகத்தில் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் தனது வாகனத்தை நிறுத்திவிட்டு வீடு சென்றுள்ளார். இந்நிலையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனத்தை பாதுகாப்பு உத்தியோகத்தரும், சாரதியும் எடுத்துக்கொண்டு சபை உத்தியோகத்தர் ஒருவரின் பிறந்தநாள் வைபவத்திற்கு சென்றுள்ளனர்.

அச்சமயத்தில் வழியில் பிறிதொரு வாகனத்தில் வந்த பிரதேசசபை உத்தியோகத்தர் ஒருவர் இவர்களை மறித்து சண்டையில் ஈடுபட்டதுடன், அடிதடியிலும் ஈடுபட்டார். இந்நிலையில், இரு சாரதிகளுக்குமிடையில் மோதல் இடம்பெற்றதில் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (18)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஒக்ரோபர் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.